வாரப் பதிப்பு விலை சதம் 10

சுதந்திரன்

SUTANTIRAN

194A, SILVERSMITH STREET, COLOMBO- 12

Office of the Registrar of Books & Newspapers,
11 JAN 1954

USHA உஷா
தையல் மெஷின்கள் சகாய விலைகள்
மடக்கும் மாதிரி (போல்டிங்)
மெஷின் ரூ. 395
சாதாரண கால் (டிரிடல்) ரூ. 370
கை ரூ. 265
சோல் ஏஜண்டு- G. H. REIMOO
17, புதிய சோனகத் தெரு,
டெலிபோன்: 6060

புத்தகம் 7 விஜய ஆம் மார்கழி மீ 26ஆ [10-1-54] ஞாயிற்றுக்கிழமை ஜமாதுல் அவ்வல் பிறை 4 இதழ் 32

இலங்கையரல்லாத அரசாங்க ஊழியர்கள்

பிரஜா உரிமை பெருவிட்டால்

பதவியிலிருந்து நீக்கிவிட ஆலோசனை

அவர்களுக்கு நஷ்ட ஈடோ அன்றி நன்கொடையோ வழங்கப்படமாட்டா

(நமது நிருபர்)

மலைநாட்டுத் தமிழர் இனத்தின் பிரச்னையை மனிதாபிமானத்துடன் அணுகவேண்டும் என்று திரு தொண்டமான் கேட்டுக்கொண்டிருக்கும் போது அரசாங்க ஊழியர்களாகவுள்ள சகல இலங்கையரல்லாதாரையும் நீக்கி விடுவதற்கு அரசாங்கம் ஆலோசித்து வருவதாக வேறொரு செய்தி கிடைத்துள்ளது.

இது இலங்கை இந்தியர் பிரச்னை சுமுகமாகத் தீர்ப்பதற்கு முட்டுக்கட்டையாக வரலாம் எனறும், இந்த ரீதியாக பொறுப்பற்ற காரியங்களில் இறங்குவதை அரசாங்கம் நிறுத்தவேண்டும் என்றும் கருதப்படுகிறது.

சென்ற 6ந் தேதி மலைநாட்டுத் தமிழினத்தின் பிரச்னை சம்பந்தமாக திரு தொண்டமான் தலைமையில் இலங்கை இந்திய காங்கிரஸ் தூதுகோஷ்டியினர் இலங்கைப் பிரதமர் சேர் ஜோன் கொத்தலாவலையை சந்தித்து சம்பாஷித்தார்கள். எட்டு லட்சம் தொழிலாளிகள் சம்பந்தப்பட்ட இந்த ஜீவாதாரப் பிரச்னையை மனிதாபிமானத்தோடு அணுகும்படி பிரதமரைக் கேட்டுக் கொண்டார்கள்.

மலைநாட்டுத் தமிழரின் பிரச்னையை எப்படியாவது தீர்த்து வைக்கவேண்டுமென்றும் அல்லது தொழிலாளர் அதிருப்தி அதிகரித்து நாட்டு நலன் பாதிக்கப்படலாம் என்றும் எடுத்துச் சொன்னார்கள்.

ஆனல் தூதுகோஷ்டி வாயெடுத்து முடியுமுன் இலங்கை அரசாங்க ஊழியத்திலுள்ள சகல இலங்கையரல்லாதார்களையும் ஊழியத்திலிருந்து நீக்குவது சம்பந்தமாக அரசாங்கம் ஆலோசித்து வருகிறது என்ற செய்தி ''சுதந்திர'' னுக்கு கிடைத்துள்ளது. இலங்கையராகப் பதிவு செய்யப்படாத சகல இந்தியர்களும் இதன் மூலம் நீக்கப்படலாம்.

நீக்கப்படும் அரசாங்க ஊழியர்களுக்கு நஷ்ட ஈடோ, நன்கொடையோ வழங்கப்படமாட்டாது என்று உயர்தர வட்டாரங்களிலிருந்து தெரிய வருகிறது.

இந்த விஷயம் நுவரேலியாவில் நடந்த மந்திரிசபைக் கூட்டத்தில் விவாதிக்கப்பட்டதென்றும் தெரிய வருகிறது. டில்லியில் நடக்கவிருக்கும் பிரதமர்கள் பேச்சுவார்த்தைகள் முடியும் மட்டும் இதுபற்றி ஒரு தீர்மானத்திற்கு வருவதில்லை என்று மந்திரிசபை முடிவு செய்திருந்த போதிலும் மலை நாட்டுத் தமிழர் பிரச்னையை கண்யமாகத் தீர்ப்பதில் அரசாங்கம் அக்கறை கொண்டிராததால்தான் இந்த விதமான நடவடிக்கைகளை எடுக்க முன் வருகிறது என்று கருதப்படுகிறது.

''அரசாங்க ஊழியத்திலுள்ளவர்கள் தொகை சம்பந்தமான புள்ளி விபரம் ஒரு வருடத்திற்கு முன்பு எடுக்கப்பட்டது. என்றாலும் அவர்களின் தேசீய இனம் பற்றிய பிரச்னை அதில் சேர்க்கப்படவில்லை. எனவே எவ்வளவு இலங்கையரல்லாதார் அரசாங்க ஊழியத்திலிருக்கிறார்கள் என்று சொல்ல முடியாது'' என்று ஜனக் கணக்கெடுப்பு—புள்ளி விபர இலாகா அதிகாரி 'சுதந்திரன்' நிருபரிடம் கூறினர்.

பாகிஸ்தான்—அமெரிக்க ராணுவ உடன்பாட்டில் ஆசியாவின் சுயாதீனத்துக்கு ஆபத்து ஏற்பட்டிருக்கும் இந்த வேளையில் இந்தியா—இலங்கை உறவு எந்த விதத்திலும் பாதிக்கப்படலாகா தென்றும், எனவே மலைநாட்டுத் தமிழர் பிரச்னையை எப்படியாவது சமரஸமாகத் தீர்க்க வேண்டும் என்றும் பல அரசியல் வட்டாரங்களில் கருதப்படுகிறது.

தமிழர் திருநாளில் வாலிபர் மகாநாடு

தமிழர் திருநாளான பொங்கல் தினத்தன்று அகில இலங்கை தமிழரசு வாலிபர் முன்னணியின் இரண்டாவது மகாநாடு யாழ்ப்பாணத்தில் நடைபெறுகிறது

தமிழரசு வாலிபர் முன்னணியின் புது வருட உத்தியோகஸ்தர்கள் தெரிவு 10-1-54 ஞாயிறு காலை 9-30 மணிக்கு யாழ்ப்பாண தமிழரசு கட்சி காரியாலயத்தில் நடைபெறும் கூட்டத்தில் தேர்ந்தெடுக்கப் படுவர்.

மகாநாட்டிலும் ஊர்வலத்திலும் பெருவாரியாகத் திரண்டு வாலிபர் மகாநாட்டை வெற்றிபெறச் செய்யுமாறு சங்கக் காரியதரிசி வெளியிட்டுள்ள ஒரு அறிக்கையில் கேட்டுக் கொண்டுள்ளார்.

ஜகன் கட்சி பகிஷ்கரிக்கும்

பிரிட்டிஷ் கயானாவுக்குப் புது அரசியல் திட்டம் தயாரிப்பதற்காகப் பிரிட்டிஷ் சர்க்காரால் அனுப்பப்படும் கமிஷனைப் பகிஷ்கரிக்கப் போவதாக கயானா மக்கள் முன்னேற்றக் கட்சி (ஜகன் கட்சி) அறிவித்திருக்கிறது.

இலங்கை கம்யூனிஸ்ட் பத்திரிகை ஆசிரியருக்கு திரும்பி வரத்தடை

திரு. ராமநாதனின் விஸாவைப் பறிக்க கொத்தலாவலை உத்தரவு

(நமது நிருபர்)

இலங்கை கம்யூனிஸ்ட் கட்சியின் தமிழ் வாரப் பத்திரிகையின் ஆசிரியர் திரு கே. ராமனாதனின் விஸாவைப் பறிக்கவும், அவர் இந்தியாவிலிருந்து திரும்பும்போது வெளியேற்றிவிடும்படியும் இலங்கைப் பிரதமர் சேர் ஜோன் கொத்தலாவலையின் உத்தரவின் பேரில் குடியேற்ற காரியாலயம் ஒரு உத்தரவைப் பிறப்பித்துள்ளதாக நம்பகரமான வட்டாரங்களிலிருந்து அறிய வருகிறது.

திரு கே. ராமனாதன், மதுரையில் சென்ற வாரத்தில் நடந்த இந்திய கம்யூனிஸ்ட் கட்சியின் மகாநாட்டுக்கு டாக்டர் விக்கிரமசிங்கா, திரு பீட்டர் கெனமனுடன் இலங்கையின் சகோதரப் பிரதி நிதியாகப்போய் இருந்தார்.

இலங்கையில் வசிப்பதற்கு தற்காலிக வாச அனுமதியிருந்தும் அவரைத் திரும்பி வரவிட வேண்டாம் என்ற பிரதமரின் உத்தரவின் பேரில் குடியேற்ற இலாகா அவரின் விஸாவை பறிமுதல் செய்ய நிர்மானித்துள்ளதாகத் தெரிய வருகிறது.

திரு கே. ராமனாதன் சென்ற சுமார் 16 வருடங்களாக இந்த நாட்டின் அரசியல் இயக்கங்களிலும்—தொழிலாளர் இயக்கங்களிலும் பங்கு பற்றியவர். இலங்கை சமசமாஜக் கட்சி ஆரம்பிக்கப்பட்ட அடுத்த ஆண்டு அதன் முழு நேர ஊழி

(9—ம் பக்கம் பார்க்க)

குறைந்த செலவில் கூடிய உற்பத்திக்கு
உங்கள் தோட்டங்களை இயந்திர மயமாக்க
பெர்குஸன்
ட்ராக்டர்கள் இயந்திர உபகரணங்கள்

ட்ராக்டர்கள் இயந்திர உபகரணங்கள்
வாங்குவதற்கு மலிவானது

இலகுவாக உபயோகிக்கக் கூடியது. திறமைவாய்ந்த நிபுணர்களின் உதவி என்றும் உத்தரவாதம் செய்யப் படுகிறது.

இலங்கையில் பெர்குஸன் உற்பத்திகளுக்கு ஏக வினியோகஸ்தர்களான கீழ்க் கண்டவர்களிடம் விபரங்களைக் கேட்டுக் கொள்ளவும்.

பிரவுண் அன் கம்பெனி லிமிட்.,
விவசாயப் பிரிவு.
யூனியன் பிளேஸ், கொழும்பு.

வடமாகாணத்தில் அதிகாரம்பெற்ற வியாபாரி:
ஆர்ன்கோ,
ரெட்ரிகோ ரோடு—பரந்தன்.

கிழ்மாகாணத்தில் அதிகாரம்பெற்ற வியாபாரி,
ச. பி. எஸ். ஏ. எஸ். யூனியன் லிமிட்டெட்,
மட்டக்களப்பு:

பொங்கல் வாழ்த்துக்கள்

———:(0):———

பொங்கலோ பொங்கல் என்று பொங்கும் தமிழர் திருவிழாவிலே, உழவர் உவகைப் பெருவிழாவிலே நமது வாசக நேயர்களுக்கும், ஏஜண்ட், விளம்பர நண்பர்களுக்கும் எமது பொங்கல் வாழ்த்துக்கள்.

—ஆசிரியர்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கருத்து மேடை:

அறிஞர் கருத்துக்களை அனுசரித்து ஆகாத வற்றை அகற்றி வெளிவந்த அற்புதப் படம் 'ஔவையார்'

மூதாட்டி பாடல்களின் தொகுப்பே அது

[செ. சிவஞானசுந்தரம்]

ஜெமினியின் ஔவையாரைப்பற்றி திரு கணேசலிங்கம் எழுதிய சருத்துக்களை வாசித்தேன். அவர் கூறுவதில் ஒரு சிலவற்றில் உண்மை இருப்பினும், பெரும்பாலானவை ஏதாவது குறைகூறவேண்டும் என்பதற்காக எழுதியவை போல் தோன்றுகிறது.

படத்தில் சில சரித்திர முரண்பாடுகள் இருக்கின்றன என்பதுதான் கணேசலிங்கம் அவர்கள் எழுதிய கட்டுரையில் உண்மைபோல் தோன்றுவது. இதில் நான் விவாதிக்க விரும்பவில்லை. ஏனெனில் பல பேராசிரியர்களும்' மேதைகளும் பல வருடங்களாகச் செய்துள்ள ஆராய்ச்சியின் பிறகு கூட ஔவையின் வரலாற்றை நிர்ணயிக்க முடியவில்லை. ஒன்றுக்கு மேற்பட்ட ஔவையார்கள் வெவ்வேறு காலங்களில் இருந்திருக்கிறார்கள். அந்த ஔவையார்களைப் பற்றிய ஏதேதோ சம்பவங்களும் தமிழ் நாட்டில் கதைகளாக சொல்லப்பட்டு வருகின்றன.

ஆகையால் இவை எல்லாவற்றையும் ஒரு கதம்பமாகத் தொடுத்தால்தான் ஒரு கதை ஆக்க முடியும். அதனால்தான் ஜெமினியின் தயாரிப்பில் சில இடங்களில் சரித்திர முரண்பாடு என்று சொல்லக் கூடிய கட்டங்கள் வருகின்றன. ''கதையை உருப்படியாக அமைக்க முடியாது என்று தெரிந்ததும் கருத்துக்களுக்குப் பிரதான்யம் அளித்து கதையைத் தொகுத்தோம். ஔவையின் கதையில் தொடர்பு கிடையாது. நிகழ்ச்சிகள் தனித் தனியே பல சந்தர்ப்பங்களில் நடைபெற்றவை'' என்று படத் தயாரிப்பாளர்களே கூறியுள்ளனர்.

ஆகவே இலக்கிய உலகத்தில் இருந்துவரும் இந்த நீண்ட கால குழப்பத்தை எடுத்து, ஒரு கதையாக்கி அற்புதமான காட்சிகளுடன், பெருந்தொகையான பணச்செலவில் தயாரிக்க அதிக துணிச்சல் வேண்டும். அதற்கு நாம் திரு. வாசனைப் பாராட்டாமல் இருக்க முடியாது.

இந்தச் சரித்திரக் குழப்பத்தைத் தவிர நண்பர் கேட்கும் கேள்விகளுக்கு விடைதர அதிக ஆராய்ச்சி தேவையில்லை.

''ஜெமினி அவ்வையாருக்கு எந்த அறிஞரின் உதவியை நாடினார்கள்? தமிழ் நாட்டில் ஆராய்ச்சியாளர் இல்லை என்ற துணிபா?'' என்றெல்லாம் தான்தோன்றித் தனமாக எழுதக் கூடாது. ஔவையார் தயாரிப்பைப்பற்றி ''பேசும் படம்'' அக்டோபர் இதழில் அப்படத்தை டைரக்ட் செய்த கொத்தமங்கலம் சுப்பு அவர்கள் எழுதியதில் சிலவற்றைச் தருகிறேன் பாருங்கள்.

''ஔவை ஒரு மகோன்னத படமாக வெளிவர வேண்டுமென்று நாங்கள் விரும்பியதாலும், சிக்கல் நிறைந்த கதையாக அது இருந்தாலும் பல அறிஞர்களுக்கு அவ்வப் போது போட்டுக் காட்டினோம், அவற்றில் உருப்படியான அபிப்பிராயங்கள் இருந்ததால் மாற்றியமைத்தோம்'' ''உதாரணமாக ஔவை 'எட்டேகால் லட்சணமே' என்று பாடுவதைப் படமாக்கியிருந்தோம். ஔவை இப்படிச் சொல்வது சரியாகப் படவில்லை. வெட்டித் தள்ளிவிட்டோம். 'சங்கம்' காட்சி பல ஆயிரம் அடிகள் எடுக்கப்பட்டது. பிறகு அவ்வளவு தேவையில்லை என்று வெட்டினோம். ஏராளமான பாடல்கள் ஒலிப்பதிவு செய்யப்பட்டன, பின்னர் சுமார் நாற்பத்தெட்டைத் தான் படத்திற்கு உபயோகித்தோம். கயிலாயத்திலே சிவ நடனம் ஒன்று இருந்தது. அது தேவையில்லை என்று அறிஞர்கள் அபிப்பிராயப் பட்டார்கள், வெட்டித் தள்ளினோம். இதெல்லாம் எதற்காக? படம் திரையிடப் பட்டபின் குறைபாடுகள் இருக்கக் கூடாது என்பதற்காகத் தான்'' என்று எழுதியுள்ளார்.

ஔவையாரின் காலத்திற்குப் பின்பே விநாயகர் வணக்கம் ஏற்பட்டது என்று கட்டுரையாளர் அபிப்பிராயப் படுகிறார். அப்படியாயின்,

''துப்பார் திருமேவி
துய்ப்பிக்கையான் பாதம்
தப்பாமற் சார்வார் தமக்கு''

என்றும்,

''துங்கக் கரிமுகத்துத் தூமணியே
நீயெனக்குச்
சங்கத் தமிழ் மூன்றும் தா''

என்றும் ஔவையார் பாடவில்லையா? இவற்றை ஔவையார் பாடல்கள் என்றல்லவா சிறு வயதில் படித்தோம்!

ஔவையாரைப் பெற்று நடுக்காட்டில் விட்டுச் செல்கின்றனர் தாய் தந்தையர். இது தமிழ் மரபிற்கு இழுக்காகாதா? என்ற கேள்வி அனுவசியமானது. ஆதியும் பகவனும் தங்கள் குழந்தைகளை பெற்ற இடத்திலேயே விட்டுச் சென்றார்கள் என்பதும் குழந்தைகள் வெவ்வேறு இடங்களில் வளர்ந்தார்கள் என்பதும்தான் நாங்கள் அறிந்த கதை. அந்தக் கதையைத்தான் படமாக்கி இருக்கிறார்கள். அதேபோல்,

''இட்டமுடனென்றலியினின்னபடி
யென்றெழுதி விட்ட சிவனும்
செத்து விட்டானே—
முட்ட முட்டப்
பஞ்சமேயானாலும்
பாரமவனுக் கன்னாய்
நெஞ்சமே யஞ்சாதிரு''

என்ற பாட்டும் அந்தச் சந்தர்ப்பத்தில் பாடப்பட்டது என்பது நாம் முன்னமே அறிந்ததுதானே. இதை தயாரிப்பாளர் எவ்வளவு அழகாகச் சித்தரித்திருக்கிறார்கள். அப்பாட்டு குழந்தைதான் பாடியது என்று கொள்ளலாம். அசரீரி எனலாம், ஏதோ சபதத்தைத் தாண்ட முடியாமல் குழந்தையைப் பிரியப்போகும் தாய் தந்தையர் தெய்வ சக்தியால் அறிந்தது என்றும் கொள்ளலாம்.

அப்படிப் பாடும் குழந்தை, பின்பு ''பிள்ளையார் பாவையைக் கையில் கொடு'' என்று பாடாமல் ஏன் அழுகிறது என்று ஹாஷ்யமாகக் கேட்கிறார் நண்பர்.

ஏன் பாடவேண்டுமோ தெரியவில்லை. பொக்கை வாயைத் திறந்து சிரித்து நம்மை மகிழ்விக்கும் குழந்தை இருந்தால் போல் எதையோ உற்றுப் பார்க்கிறது, பின்பு சின்னஞ் சிறு விரலால் சுட்டிக் காட்டி அழுகிறது. அடே பிள்ளையாரையல்லவா குழந்தை கேட்கிறது என்று நமக்கு விளங்கி விடுகிறது. அதற்கு ஏன் பாட்டு. அருமையான, பார்க்கப் பார்க்கச் சலிக்காத கட்டம் இது.

ஏழங்குழலியும் சன்யாசியும் வரும் சீன் அனுவசியம் என்றுதான் தோன்றுகிறது நேயரே. அருமையான ஒரு நடனத்தை காட்டுவதற்காக அதைச் சேர்த்திருக்கிறார்கள் போலும். பாரியின் இரு மகளிர்க்கும் ஒரு காதலனைக் காட்டுகிறார்கள். இதற்கு சரித்திர ஆதாரம் உண்டா என்பது ஒருபுறமிருக்க, தமிழ் கற்பு நெறியை இது மாசுப்படுத்துகிறது என்று கட்டுரையாளர் சாதிக்கிறார். இரு பெண்களை மணஞ் செய்து கொண்ட தமிழ்த் தெய்வம் முருகனை வணங்கும் ஔவை அது சரி என்று யோசித்திருக்க வேண்டும்.

ஔவை அறிவின் திறனல் மூவேந்தரின்தவறை உணர்த்த முடியாதா? எதற்காக யானையை வரவழைத்தார்? எதற்காக பூமியை பிளக்கச் செய்தார்? என்ற கேள்விகளுக்கு விடை படத்திலேயே ஔவை தருகிறார்.

''அறிவுக்கு இவர்கள் பணியமாட்டார்கள் ஆனல் அற்புதத்தைக்கண்டு வணங்குவார்கள்'' என்று சொல்கிறாரே.

உலகப்பற்று நீக்கிய ஔவையின் கையில் தங்கக் காப்பும் விரலில் மோதிரமும் ஏன் என்று கேட்பவர் தமிழ் நாட்டவரா என்று சந்தேகிக்கவேண்டி இருக்கிறது. ''இனி எனக்கென்ன காடுவாவா என்கிறது வீடு போபோ என்கிறது' என்ற பல்லவி பாடும் நமது பாட்டிமார் காதில் பொன் கட்டி கட்டியாகத் தூங்குவதில்லையா? ஆகையால்தான் பிரபு வாசனின் மனம் தமிழ்த் தாயைப் பரதேசியைப்போல் காட்சி அளிக்க இடம் தரவில்லை. அல்லது,

''கல்லானே யானனும்
கைப்பொருள் ஒன்றுண்டாயின்
எல்லோருஞ் சென்றங் கெதிர்
கொள்வார்—இல்லானை
இல்லாளும் வேண்டாள்
மற்றீன்றெடுத்த
தாய்வேண்டாள்
செல்லாதவன்
வாயிற் சொல்''

என்று பாடின ஔவையை வெறுங்கையளாய்க்காண நமக்குத்தான் மனம்வருமா?

ஔவையார் செய்யும் அற்புதங்களுக்கு விமர்சனம் தேவை இல்லை. ஔவை கடவுளின் அருளினுல்தான்அற்புதங்களைச் சாதிப்பதாகக் காட்டப்படுகிறது. அவை மெய்யா, பொய்யா என்ற வாக்குவாதம் எதற்கு. விவிலிய நூலில் பழைய ஏற்பாட்டில் கடல் இரண்டாகப் பிரிகிறது. புதிய ஏற்பாட்டில் இயேசு நாதர் செய்யும் புதுமைகள் பல. இவற்றைப் படமாக்கினுல் அப்படியேதான் காட்டவேண்டும். அதேபோல் ஔவையின் பாடல்களை வைத்து காட்சிகளைக் காட்டி இருக்கிறார்கள். இத்தகைய அற்புதங்கள் முடியுமா என்ற கேள்விக்கு ''பெர்நாந்தேயின் கவிதை'' என்ற கதையை எழுதிய ஆசிரியர் அழகாக பதில் தருகிறார்.

''கடவுளில் நம்பிக்கையுள்ளோர்க்கு இவற்றிற்கு விளக்கம் தேவை இல்லை. கடவுளை நம்பாதவர்களுக்கு விளக்கமே தர முடியாது''

ஔவையார் படம் வரவேற்கத்தக்க ஓர் அரிய முயற்சி. அதனுல்தான் ராஜாஜி, ராதாகிருஷ்ணன் போன்ற பெரியார்கள் அதை புகழ்ந்துள்ளனர். இன்றைய சினிமா வானிலே ஔவையார் சந்திரனைப்போல் பிரகாசிக்கிறது.

நமது மதிப்புரை

''இலக்கியத் தென்றல்''

எழுதியவர்: கலாநிதி சு. வித்தியானந்தன்.

வெளியிட்டோர்: தமிழ் மன்றம், கல்ஹினை, கண்டி. விலை ரூபா மூன்று.

தமிழ் இலக்கியப் பரப்பைப் பற்றிய பொது இயல்புகளைச் சுருக்கமுறத் தெளிவாக அறிய விரும்புகின்ற மாணவர்கள் ஒரே ஒரு நூலைப் படித்துத் தமக்கு வேண்டியவைகளைப் பெறக்கூடிய சிறந்த தமிழ் இலக்கிய வரலாற்று நூல்கள் இதுவரையும் எழுந்ததில்லை எனலாம். அதனல் மாணவர்கள் பல ஆராய்ச்சிக் கட்டுரைகளையும், நூல்களையும், இதழ்களையும் தேடி அலையவேண்டிய நிலை ஏற்படுகின்றது. இக்குறையைத் தீர்க்க எழுந்த ஒரு நூல் இதுவென்று எள்ளளவேனும் ஐயப்பாடின்றிச் சொல்லலாம். மாணவருக்கு எளிதில் விளங்கக் கூடிய இனிய தெளிவான நடையை ஆசிரியர் கையாண்டிருப்பது பாராட்டத்தக்கது. இந்த நூலை ஆறு பகுதிகளாகப் பிரித்த முறை சிறப்புடைத்து. இதுவரையும் ஏனைய நூலாசிரியர்கள் தங்கள் இலக்கிய வரலாற்று நூல்களிற் கையாளாத இரு பெரும் பொருள்களை இவ்வாசிரியர் தமது நூலில் அடக்கி அதனைத் திகழச் செய்துள்ளார். ''இஸ்லாமியர் தமிழ்த் தொண்டு'' ''ஈழநாட்டுப் பெரியார் தமிழ்மொழிக்காற்றிய தொண்டு'' என்ற இரு பிரிவுகளையும் இங்குச் சிறப்பாகக் குறிப்பிடுதல் வேண்டும். இஸ்லாமியர் தமிழ் மொழியில் இயற்றிய பலவகை நூல்களைப் பல பிரிவுகளாகப் பகுத்து ஒழுங்குற விளக்குகின்றது இந்த நூல்.

தமிழ் வளர்ச்சியில் பல துறைகளிலும் ஈழநாட்டவர்களே வழிகாட்டினார்கள் என்பதைப் பலர் மறந்துவிடுகின்றார்கள்; சிலர் [illegible] மறுக்கின்றார்கள். ஈழநாட்டவர் காட்டியவழி தமிழ் அன்னையின் திருக்கோயிலை அடையும் வழியாக என்றும் திகழும் என்பதை இவ்வாசிரியர் ஆணித்தரமாக, அழுத்தந் திருத்தமாகக் கூறுகின்றார். நா. கதிரைவேற்பிள்ளை மரக்கலம் மூலம் இந்தியாவிற்கு ஓடியது போன்ற புலவர் வரலாறுகளையும் நூலிற் சேர்த்திருப்பது ஆசிரியரின் உள்ளதை உள்ளவாறு கூறும் தன்மையைக் காட்டுகின்றது. ''ஈழநாட்டுப் பெரியார் தமிழ்மொழிக்காற்றிய தொண்டு'' என்ற இப்பகுதியில் ''வழிகாட்டியவர்கள்'' என்பதையே முக்கிய நோக்கமாகத்தான் கொண்டதாக ஆசிரியர் தன் முன்னுரையில் கூறுகின்றார். இதுவும் ஓராற்றல் சாலச் சிறப்புடைத்து. தாயகத்தாருக்குத் தமிழ் அறிவுறுத்திய சபாபதி நாவலர், உரையாசிரியர் மகாவேற்பிள்ளை, கணேசையர் போன்ற தமிழ் மொழிவாணர்களைப் பற்றியும் கூறுவதற்கு இந்த நூல் இடம்கொடுக்க வில்லை போலும். ''ஈழநாட்டுத் தமிழ்ப் புலவர்கள்'' என்னும் தலைப்பில் இந்த ஆசிரியர் ஒரு பெரிய ஆராய்ச்சி நூலை எழுதுவாரென்றும், இதில் இப்பெரியோர்கள் இடம் பெறுவார்களென்றும் தமிழ்நாடு எதிர் பார்க்கின்றது.

''தமிழ் இலக்கியப் பரப்பு'' என்னும் பகுதி சுருக்கமாக இருந்தபோதிலும், தமிழில் எழுந்த நூல்களைக் காலவரையறுத்து அந்த நூல்களின் பண்புகளை விளக்குகின்றது. தமிழ் இலக்கண நூல்கள் என்னும் பகுதியில் பண்டைக்காலம் தொடக்கம் இன்றுவரையும் உள்ள இலக்கண நூல்கள் [illegible] அதனை ஒதுக்கி வைக்கின்ற மேல் வகுப்பு மாணவர்கள், தம்மொழியின்இலக்கணத்தின் தொன்மையையும் பெருமையையும் அறிய இந்த நூல் ஒரு வழிகாட்டி. ''ஐம்பெருங்காப்பியங்கள்'' என்னும் சொற்றொடரைத் தமிழ் அறிஞர்கள் பலர் இதுவரையும் ஏற்றுக் கொண்டு ''சிலப்பதிகாரத்தையும்'' ''மணிமேகலையையும்'' பெருங்காப்பியத்துள் திணிக்க முயன்றனர். இந்த நூல்கள் தமிழனின் தனிச்செல்வம் என்பதையும் ''ஐம்பெரும் காப்பியம்'' என்னும் கொள்கை பிழை என்பதையும் தக்க சான்றுகளுடன் இவ்வாசிரியர் எடுத்துரைக்கின்றனர். இருபதாம் நூற்றாண்டுக் கவிஞர்களுடைய தனிப் பண்புகளையும் பொதுப் பண்புகளையும் ஆசிரியர் ஆராய்கின்றார். இந்த நூலுக்குத் தமிழ் கூறும் நல்லுலகம் ஆதரவு காட்டவேண்டும்.

—த. ச.

***

வக்கீல்: மாதாந்த தமிழ் சட்டப் பத்திரிகை. கிடைக்குமிடம்: தபால் பெட்டி 26, கும்பகோணம். ஆசிரியர்: வி. எஸ். விஜயராகவாச்சாரி பி. ஏ, பி. எல். பிரதி விலை அணை 4.

இப்பத்திரிகையின் அக்டோபர், நவம்பர் மாத இதழ்கள் வரப்பெற்றோம். சட்டநுணுக்கங்களைத் தமிழ்ப் பொது மக்களுக்கு தமிழ் மொழியில் எடுத்துச் சொல்லக் கூடியதாக ஒரு பத்திரிகை தோன்றியிருப்பது பெரிதும் வரவேற்கத்தக்கது. தமிழில் சட்டவிளக்கம் கூறுவது சாத்தியமில்லையென்று அடம்பிடிக்கும் சில சட்டப்பிரகஸ்பதிகள் இப்பத்திரிகையைப் பார்த்தால் தமிழ் சட்டம் விரிக்க முடியாத பாஷையல்ல வென்பதைக் காண்பார்கள்; புதிய சட்டங்களின் விளக்கம், வழக்கும் தீர்ப்பும் இப்படியான அம்சங்கள் இடம் பெற்றுள்ளன.

***

நீதி: மாதமிருமுறை. கிடைக்குமிடம்: நிர்வாகி, நீதி, பொள்ளாச்சி. ஆசிரியர்: எம். எஸ். ராஜகோபால். பிரதி விலை அணை 2. கட்டுரை, கதை கவிதை இடம்பெற்றுள்ளன.

***

வைத்தியன்: வைத்தியத் துறை மாத வெளியீடு. கிடைக்குமிடம்: 174, நல்லூர் கோவில் தெரு, யாழ்ப்பாணம். கௌரவ ஆசிரியர்: வி. கனகசபை. வருட சந்தா ரூ 5—00.

அகஸ்தியரை அட்டைப் படத்தில் தாங்கி அழகாக வெளிவந்திருக்கும் வைத்தியன் மலர் 4 இதழ் 10—12 கிடைக்கப்பெற்றோம். பல அரிய வைத்திய விஷயங்கள் தெளிவான கட்டுரை ரூபத்தில் இடம்பெற்றிருக்கின்றன. விஷ வைத்தியம் பற்றிய பாடல்களுக்கு விளக்கவுரையும் கொடுத்தால் பயன்படும். சித்த ஆயுள் வேத வைத்தியர்கள் இப்படியொரு பத்திரிகையை நடத்துவது வைத்தியர்களுக்கும் பொதுமக்களுக்கும் ஒரு பெரும் பணியாகும்.

***

பாணம்: சினிமா மாதப் பத்திரிகை. கிடைக்குமிடம்: 74, கிரேயிட்ஸ் ரோட், சென்னை 14. ஆசிரியர், 'ஸகி' விலை அணை 8.

பாணம் டிஸம்பர் வெளியீடு வரப்பெற்றோம். ''சினிமா உலகில் கேடுகளை விளைவிக்கும் விஷயங்களை களைந்தெடுக்க வேண்டுமென்ற திடசங்கல்பத்துடனேயே கிளம்பியிருக்கிறது பாணம்'' என்கிறார் ஆசிரியர்; ஆயினும் பத்திரிகை ''இந்து நேசன்'' தரத்தையுடைய 'மஞ்சள்' பத்திரிகையல்ல. பல நல்ல அம்சங்கள் இடம்பெற்

[15ம் பக்கம் பார்க்க]

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



எஸ். பரமேஸ்வரன், புத்தூர்

கே: நாகரீகம் என்ற சொல் எந்த மொழிச் சொல்?

ப: நாகரீகம் என்ற சொல் நகரின் தன்மை, நகரத்தின் பண்பு என்று பொருள்படும். காந்தி—காந்தீயம், தேசப்—தேசீயம் என்பதுபோல நகரப்—நாகரீகம்—நாகரீகம் என்றானது.

***

எஸ். வி. சி. ஐயர், வெள்ளவத்தை

கே: மனிதன் மனச்சாந்தி பெறும் இடம் எது?

ப: மயானம்.

***

தி. ஞானசேகர ஐயர், புன்னாலைக் கட்டுவன்

கே: மனிதனுக்கும் குரங்கிற்கும் வித்தியாசம் உண்டா?

ப: உண்டு. மனிதன் தன் சக மனிதன் தலையில் அணுக்குண்டைப் போடுகிறான். குரங்கு அப்படிச் செய்வதில்லை.

***

எஸ். மனிமுத்து, உப்பளம்

கே: காதலும் காமமும் ஒன்றுசேர்ந்தால் என்ன நடக்கும்?

ப: அத்துமீறி நடந்துகொண்டதாக கோட்டில் ஒரு வழக்கு நடக்கும்.

***

ஆர். எஸ். மணியம், திருகோணமலை

கே: பொதுமக்கள் ஏமாறும் காலம் என்ன காலம்?

ப: தேர்தல் காலம்!

***

எம். எம். சுல்தான், சுன்னாகம்

கே: மதவாதிகளிடம் இல்லாதது என்ன?

ப: தன்னம்பிக்கை.

***

எம். பொன்னம்பலம், மருதானை

கே: பிரிட்டிஷ் கொம்யூனிஸ்ட் கட்சிப் பிரமுகரான திரு பொல்லிட்டை இலங்கை அரசாங்கம் இலங்கைக்குள் அனுமதியாதது எதைக் காட்டுகிறது?

ப: இலங்கை அரசாங்கத்தின் பயங்கொள்ளித் தனத்தையும் இலங்கையில் கொம்யூனிஸத்திற்கு இருக்கும் ஆதரவையும் காட்டுகிறது.

***

எஸ். குலாம், யாழ்ப்பாணம்

கே: முகங்களில் வரவேற்கத் தக்க முகம் எது?

ப: திருமுகம்.

***

ஞா. சுப்பிரமணியம், சேந்துக்குடா

கே: மனைவியிடம் காணும் இன்பத்திற்கும் மாற்றாரிடம் காணும் இன்பத்திற்கும் என்ன வித்தியாசம்?

ப: வீட்டுச் சாப்பாட்டிற்கும் ஹோட்டல் சாப்பாட்டிற்கு முள்ள வித்தியாசந்தான்.

***

கு. தருமராசா, மட்டுநகர்

கே: உமது மனைவியார் திடீர் என்று உலகை ஆளும் மகாராணியாக மாறிவிட்டால் என்ன செய்வீர்?

ப: நிச்சயம் என் வாசலில் கையேந்தி நிற்கும் பிச்சைக்காரனை விரட்டியடிக்கும் கொடூரச் செயலைப் புரியமாட்டேன்.

***

அமரன், கொழும்பு

★ கே: யுத்தத்திற்கும் முத்தத்திற்கும் என்ன வித்தியாசம்?

ப: யுத்தத்தின்போது களத்தில் உயிர் போகிறது. முத்தத்தின்போது உளத்தில் உயிர் வேகிறது.

***

வி. நவரட்னராஜா, கோண்டாவில்

கே: கடல் நீர் ஏன் உப்புத் தன்மையாக இருக்கிறது?

ப: உலகம் தோன்றிய நாள் முதல் ஏழைகளும் அழுத கண்ணீர் அதில் கலந்திருப்பதால்.

***

அ. யோகராசா, வாழைச்சேனை

கே: முதலீடு இல்லாமல் செய்யும் இரண்டு தொழில்களை உங்களால் கூற முடியுமா?

ப: விபசாரம், தரகுத்தொழில்.

***

ஜனிபா, கிண்ணியா

கே: உயிருக்குயிராகக் காதலித்த காதலனை இழந்து வேறொருவனுக்கு வாழ்க்கைப் பட்ட ஒரு பெண்ணின் மனோநிலை எப்படியிருக்கும்?

ப: மந்திரிப் பதவிக்காகக் காத்திருந்தவனுக்கு பாராளுமன்ற காரியதரிசிப் பதவி கிடைத்ததுபோல் இருக்கும்.

***

வி. க. தருமலிங்கம், ஏழாலை

கே: அமெரிக்கா சென்றுள்ள ஒலிவர் வெற்றியுடன் திரும்பு வாரா?

ப: அவருடைய எந்தக் குதிரை அங்கு எப்படி ஓடுகிறது என்பதைப் பொறுத்த விஷயம் இது.

***

எம். மீராசாய்பு, காரைதீவு

கே: நோய்களில் கொடிய நோய் என்ன நோய்?

ப: காதல் நோய்

***

எஸ். தெய்வநாயகம், அரசடித்தீவு

கே: பாலுகும் பாவைக்கும் உள்ள தொடர்பு என்ன?

ப: உரிய காலத்தில் பருகவில்லையென்றால் பால் பதனழிந்து விடும். அதுபோலவே உரிய காலத்தில் மணமாகவில்லையென்றால் பாவையும் உருவழிந்து விடுகிறாள்.

கே: பால் புளித்தால் என்ன? பாவை சிரித்தால் என்ன?

பால் புளித்தால் மோருக்கு நன்று; பாவை சிரித்தால் பணத்துக்கு தண்டு

***

புதுமைத் தம்பி, கழுதாவளை

கே: பாபத்தின் இருப்பிடம் எது?

ப: முதலாளிகளின் பணப் பெட்டி

கே: கடலில் செல்லும் படகுக்கும் வாழ்க்கைப் படகுக்கும் என்ன வித்தியாசம்?

ப: கடலில் படகு கவிழ்ந்தால் அதைச் சமுத்திரம் ஆரவாரமில்லாமல் ஏற்றுக் கொள்ளுகிறது. வாழ்க்கைப் படகு கவிழ்ந்தால் சமுதாயம் ஈவிரக்கமின்றிக் கை கொட்டிச் சிரிக்கிறது

கே: தமிழர்களுடைய

பரிசு ரூ. 3-00

யாரும் கேள்விகள் அனுப்பலாம் ஆனால் கேள்விகள் போஸ்கார்ட்டில் மட்டுமே எழுதப் படவேண்டும் தகுந்த கேள்விகளுக்கு நிச்சயம் பதில் கிடைக்கும். ஒவ்வொரு வாரமும் கருத்தும் ஹாஸ்யமுமான பதில் கிடைக்கக் கூடிய சிறந்த கேள்வியை அனுப்புவர்களுக்கு ரூ. 3-00 பரிசு வழங்கப்படும்.

சென்னை சிறைகள் நிரம்பிவிட்டன

ராஜாஜி ஆட்சியின் ஒருவருட சாதனை

ராஜாஜி அட்சியின் கீழ் முதல் வருஷத்திய ஜெயில் நிர்வாகம் பற்றி சென்னை சர்க்கார் ஒரு அறிக்கை வெளியிட்டுள்ளது.

ராஜாஜி பதவியேற்ற பின்னர் ஜெயில்கள் நிரம்பிவிட்டன. ஏராளமான கைதிகள் விடுதலை செய்யப்பட்டனர். ஜெயில் நிர்வாகச் செலவில் 5 லட்சம் ரூபாய் அதிகமாய்விட்டது.

சென்னை ராஜ்யத்தில் கடந்த வருஷ ஆரம்பத்தில் ஜெயில்களில் 23,928 கைதிகள் இருந்தனர். வருஷ முடிவின்போது ஜெயில்களில் இருந்த கைதிகளின் எண்ணிக்கை 31608 ஆகும். அந்த வருஷத்தில் 7,680 கைதிகள் அதிகமாயினர்.

ஜெயில்கள் நிரப்பின! கைதிகளுக்கு இடமில்லை!!

இதனால் ஜெயில்கள் நிரப்பிவிட்டன. ஜெயில்களில் இட நெருக்கடி ஏற்பட்டது இதன காரணமாக ஏராளமான கைதிகள் அவர்களது தண்டனை காலம் முடிவடைவதற்கு முன்னதாகவே விடுதலை செய்யப்பட்டனர். 1952 அக்டோபர் 7-ந் தேதியிலும் 28-ந் தேதி முறைந்தகால தண்டனை பெற்ற ஏராளமான கைதிகள் ஜெயில்களிலிருந்து விடுவிக்கப்பட்டனர். இவ்வாறு இரு தடவை கைதிகள் விடுதலை செய்யப்பட்ட போதிலும் ஜெயில்களில் கைதிகளின் எண்ணிக்கை வருஷ ஆரம்பத்தில் இருந்ததைவிட 7 ஆயிரத்திற்கு மேல் அதிகம்.

தப்பியவர்கள் இறந்தவர்கள்!

அந்த வருஷம் ஜெயில்களிலிருந்து தப்பி ஓடிய கைதிகளின் எண்ணிக்கை 33 ஆகும். ஜெயில்களிலேயே 38 கைதிகள் இறந்து போயினர். இது சென்ற வருஷத்தைவிட அதிகமாகும்.

14 வயதுக்குட்பட்ட கைதிகளின் எண்ணிக்கை 172. இதுவும் முந்திய வருஷத்தைவிட 21 அதிகம். ஜெயில்களில் 14 வயது முதல் 18 வயதுவரை உள்ள கைதிகள் 4990 பேர். சென்ற வருஷத்தில் 3440 பேர்தான் இருந்தனர்.

செலவில் ரூ 5 லட்சம் அதிகரிப்பு!

ஜெயில்களை நிர்வகிக்க இந்த ஆண்டு ஒரு கோடியே 28 லட்சத்து 990 ரூபாய் செலவிடப்பட்டிருக்கிறது. இந்த தொகை முந்திய வருஷ செலவைவிட 5 லட்சத்து 58 ஆயிரம் ரூபாய் அதிகம். செலவை அதிகரித்ததற்கு கதர்த் துணி வாங்கியதுதான் காரணம்.

ஆர். வி. தேவன், கந்தளாய்

கே: கலியாணம் செய்து கொள்ள முன்பு எதைத்தேட வேண்டும்?

ப: பொறுமையை

★ இவ்வாரம் ரூபா 3-00 பரிசு பெற்றவர்.

நர்கிஸ் நகைகளை அடவு வைக்கிறார் ஸ்டூடியோவை இழக்கும் ராஜ்கபூர்

நிம்மியும்-கீதாவும் கடன் பத்திரத்தோடு கஷ்டப்பட்ட கோரம்

செல்வத்திலிருந்து குப்புற கவிழும் சினிமாநட்சத்திர தயாரிப்பாளர்கள்

நர்கிஸ் நகைகளை அடவு வைக்கிறார், ராஜ்கபூர் ஸ்டூடியோவை இழக்கிறார், நிம்மி கடன் காரனிடமிருந்து தப்பிப் பிழைத்தாள் என்ற செய்தி இந்தியாவின் எட்டுத் திக்கிலும் அடிபட்டு பொதுஜன அபிப்பிராயத்தை குலுக்கியது. மக்களிடையே பரபரப்பை சிருஷ்டித்தது. இன்று இது உண்மையென்பது ஊர்ஜிதமாகிவிட்டது.

கலையுலகில், சினிமாத் தொழிலில் திட்டமில்லாத உற்பத்தி, தன்னிஷ்டம்போல தயாரிக்கும் முறை, இந்த தான்தோன்றி அனமப்பின் பொல்லாத சாபக்கேடு—கோர விளைவை, இந்தியாவின் இரண்டாவது பெரிய தொழில் என்று சொல்லப்படும் சினிமாத் தொழில் இன்று அடைந்துள்ள நிலையில் பார்க்கலாம். கொள்ளை லாபம் திரட்டும் "பகற்கொள்ளை" யாக இருந்த இது இன்று நசிவுக் கட்டத்தில் "தொட்டால் பஷ்மீரம்" என்ற நிலைக்கு வந்துபட்டது

இதன் விளைவுகள்தான் நர்கிஸ்களும், ராஜ்கபூர்களும், நிம்மிகளும், நகை நட்டிழந்து, ஸ்டூடியோ இழந்து, கடன் பத்திரம் பயமுறுத்த பரதவிக்கும் நிலைக்கு வந்தது.

நெருக்கடியின் முதல்பலிகள்

நேற்றுமட்டும் கொள்ளைலாபம் சம்பாதிக்கும் சாதனமாக இருந்த சினிமா இன்று அதன் உற்பத்தி அமைப்பின் கொடுமைக்கு ஆளாகி அவதியுறுகிறது. பிரகாசமாக ஒளி துலங்கிய இடத்தில் ஒளி அவிந்து இருட்டு கவ்வி விட்டது. இந்திய சினிமாவை எனறும் கண்டிராத நெருக்கடி இன்று படை சூழ்ந்துள்ளது

இதன் உண்மை நிலையை சிறிது பார்ப்போம்.

● சில ஆயிரக்கணக்கான ரூபா கடன் பத்திரத்தில் எடுத்து, குற்றக் கூண்டில் ஏறுவதில் இருந்து நிம்மி தப்பிப் பிழைத்தாள்.

● கடன் மிரட்டலிலிருந்து தப்புவதற்காக நர்கிஸ் தனது நகை நட்டுகளை விற்றுவிட்டாள்.

● இந்தியாவிலேயே மிகப் பெரிய [illegible] துள்ள பெருங் கலைஞர் ராஜ்கபூர் ஸ்டூடியோ இழந்து நிற்கிறார்.

● நடிகர் குமார் யுக்தியாக வருமானவரி இலாகாவின் நடவடிக்கையிலிருந்து தப்பித்துக் கொண்டார்.

● நடிகர் வாஸ்டி வருமானவரி இலாகாவுக்கு தனது காரை பறிகொடுத்துவிட்டார்.

தயாரிப்பாளர்களாகமாறி இன்று நாதியற்று நிற்கும் நட்சத்திரங்கள் பட்டியலில் ஒரு சிலர் இவர்கள்.

யுத்தகாலத்தில் படத் தயாரிப்பாளர்கள், பட விளியோகஸ்தர்களுடன் 40-60 வீத அடிப்படையில் கூட்டு உற்பத்தி ஆரம்பித்தார்கள். விளியோகஸ்தர்களின் பங்கு கூடவே, படக்காட்சிஸ்தானங்களே படங்களை உற்பத்தி செய்து குவிக்க ஆரம்பித்தன. இது தொடர்ந்தது.

பணவேட்டை சிலருக்கு புத்தி தருகிறது. பலருக்கு நப்பாசையையும் கஞ்சத்தனத்தையும் வளர்க்கிறது. தாம் நிரையும் படங்களை வாங்க தயாரிப்பாளருக்கு தமது சொந்த பணத்தை கொடுக்க நெஞ்சு நொந்த படக்காட்சியாளர்கள், தாமும்—தயாரிப்பாளரும் ஒன்று சேர்ந்தால், முன்னையவர்கள் பின்னையவர்களுக்கு உற்பத்திக்கு முதலீடு கொடுத்து விட்டால் எல்லாம் சரியாய் விடும் என்று ஆசை காட்டினர்கள்.

இந்த கூட்டிலே பட தயாரிப்பாளர்கள், பட விளியோகர் காட்சியாளர்கள் கையிலே "பொம்மை" களானர்கள்.

இந்த நேரத்திலே சில நடிகர்களும், தயாரிப்பாளர்களும் "வான்டடாய்" பெற்று சந்தையில் "கிராக்கியாக" இருந்தார்கள். படத்திற்கு முன்கூட்டியே ஒப்பந்தம் செய்வது, முன்பணம் கொடுப்பது கண்டிப்பாகியது.

படக்காட்சிகளிலே பல்லாயிரக் கணக்காக பணம்வந்து குவிவதை உணர்ந்த கலைஞர்கள் கூடிய பணத்திற்கு பேரம் பேச ஆரம்பித்தார்கள். சுரையா, நர்கிஸ், மதுபாலா, டிலிப்குமார் போன்ற "டாப்" பெற்ற நடிகர் படசந்தையிலே "ஆடு—மாடு" போல கூடிய தொகைக்கு பேரம்பேசப் பட்டார்கள்.

தயாரிப்பில் நடிகர்கள்

படத்திற்வரும் கொள்ளை வருமானத்தை பார்த்த நடிகர்கள் தாமே படங்களை தயாரிக்க முன் வந்தார்கள். நர்கிஸ் அவரது சகோதரருடன் முதல் முதலில் படத் தயாரிப்பில் இறங்கினாள். பல படங்களில் "டடுதோல்வி" மதுபாலாவும் அவரது தந்தையும். தேவ் ஆனந்தும் அவர் சகோதரரும், நிம்மியும் அவர் மைத்துனரும், ஒம்பிரகாஷும் அவர் சகோதரர் பாக்ஷிஜும் பஹதூரும், கோபும் அவர் சகோதரர் ராம் கப்பானியும், பால்ஸ் புரடிமாடாஸ்குப்தா, பேசப்பரா, ஸுஹேபனி சமரக, மகள் நூடான், நண்பர் மோதிலாலும் தோபவியும் அவர் சகோதரி மைத்துனரும் இப்படியாக உறவினர் கூட்டிலே நடிகர்கள் படத் தயாரிப்பிலே ஜரூராரைகள். இந்த கூட்டுக்கு பேரெடுத்த ஒரு நட்சத்திரம் "மதிப்பு" ஆக அமர்ந்தார். சிலருடைய வரவு செலவுக் கணக்கில் மட்டுமே சிறு "உயர்ச்சி" கண்டது.

கார்த்தியோவின் சேரியிலிருந்து மரீன்ட்ரைவிலுள்ள ஆடம்பர மாடமாளிகையில் 'புக்கம்' வந்த நிம்மிக்கு இன்று உதவிபுரிய 40 உறவினர் உண்டு. மூன்று அடுக்கு தொடர் மாளிகைகளும், மூன்று உல்லாச கார்களும் உண்டு.

மாறி மாறி வரும்காலமே

ஒரு சில வாரங்களுக்குமுன் தான் ஒரு லேவாதேவிக்காரன் ரூபா 10000 கொடுத்த கடனை திருப்பிப்பெற நிம்மியின் வீட்டு வாசலில் நின்றுகொண்டிருந்தான். வியாழக்கு தனது ஒரு காரை விற்று தப்பித்துக் கொண்டாள் நிம்மி.

ஆற்றல் நிறை ராஜ்கபூர் கடனில் தலைமுழுக்குப் போட்டு திண்டாடுகிறார்.

நர்கிஸும், கீதாபலியும் பட்ட கடனைத் தீர்க்க படங்களில் "சும்மா" நடித்து வருகிறார்கள். காமினி கவுஷல் சொந்த பணத்

(14-ம் பக்கம் பார்க்க)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அமர காவியம்

[சுதந்திரன் சிறு கதைப் போட்டியில் இரண்டாவது பரிசு பெற்ற கதை]

"வீதி சுற்றுவதிலும் மட்டும் கவிஞனாகி விட முடியாது!"

இந்தச் சொற்கள் அவனுடைய உள்ளச் சுவரிலே பட்டு எதிரொலித்துக் கொண்டேயிருந்தன.....

பூமணி எவ்வளவு திமிருடன் அதைச் சொன்னாள்? கேலியாகச் சொல்லியிருந்தால் அவன் கவலைப்பட்டிருக்க மாட்டான். ஆனால் அவள் எத்தனை மாணவர்களுக்கு முன் நிலையில் அந்தக் கடுஞ் சொற்களைச் சிதறவிட்டு, அவனை அவமானப்படுத்தினாள்? நெற்றிக் கண் இருந்திருந்தால், அந்த மூன்றும் கண்ணினால் அவளை அவன் எரித்திருப்பான். அவனுடைய கண்களில் ஆத்திரமும் வெறுப்பும் கனலாகக் கொப்பளித்தன. அவளால் பார்க்க இயலவில்லை; தலையைத் தொங்க விட்டுக் கொண்டாள். கோபமுற்ற விஸ்வாமித்திரருக்கு முன், மேனகையின் மோகனப் பார்வையா அது?

துரை ஒரு கவிஞன் என்பதை ஒருவராலும் மறுத்துச் சொல்ல முடியாது. 'புதுமைதாசன்' என்ற புனைப் பெயரிலே, பல தேன் கவிதைகளை பள்ளி மாணவனை காலத்திலேயே இயற்றி இருக்கின்றான். அவன் பட்டம் பெறப் பல்கலைக் கழகம் சென்ற காலத்தில், கவிஞன் என்ற புகழ் ஏணியிலே உயரமாக ஏறிக் கொண்டிருந்தான். 'புதுமை தாச'னின் கவிதைகள் பிரபல சஞ்சிகைகளையும் அலங்கரிக்க ஆரம்பித்தன. இத்துடன் அவனுடைய கவிதைத் தொகுப்பு ஒன்றும் அழகிய புத்தகவுருவிலே வெளி வந்திருந்தது.

துரை நல்ல கவிதைகள் இயற்றிவந்தான் என்பதைத் தவிர, அவனுக்குக்கவிஞனுக்கு வேண்டிய எந்த இலட்சணமும் இருக்கவில்லை. அவன் கவிஞன் பரம்பரைக்கே இழுக்கு. அவர்களைப் போல அவன் அமைதியை நாடுவதுமில்லை; தனிமையை விரும்புவதுமில்லை. ஏகாந்த இடங்களில் பல மணி நேரம் இயற்கையுடன் ஒன்றுபட்டு இருப்பதும் கிடையாது. 'கிராப்' வளர்ந்து விட்டது, உடை அழுக்காகிவிட்டது என்றெல்லாம் கவலைப்படாது கற்பனை உலகில் சஞ்சரிக்கவோ—அதைப்போல பாவனை செய்யவோ அவனால் முடியவில்லை.

எப்பொழுதும் மடிப்புக் கலையாத 'சூட்' அணிந்து கொள்வான். வாசனை எண்ணெய் தடவி, நேரத்திற்கு நேரம் தலை மயிரை வாரி விட்டுக் கொள்வான். 'ஸ்டையி'லாக ஒரு சுருள் மயிரை எடுத்துசதா நெற்றியை முத்தமிட விட்டிருப்பான். உற்று அவதானித்தாற்றான் தெரியும்படியான அரும்புமீசை, யாருடனும் சிரிக்கச் சிரிக்கப் பேசுவான். பழகுவான். பெண்களுடன் வார்த்தைகளை வைத்துக் கிளித்தட்டாடுவதில் மாகவிஞன். சதா ஊர் சுற்றித் திரிவான். படிப்பில் அதிகம் கவனமெடுப்பதில்லை; இருந்தும் 'பெயில்' விடுவது கிடையாது. அநேகமாக அவன் கவிதைகளை ஒடும் ரயிலிலும், வகுப்பு நடக்கும்பொழுதும் எழுதி விடுவான். அவன் எல்லோருக்கும் ஒரு அதிசயப் பொருள்.....

அவன் எந்தப் பெண்ணுடனும் சரளமாகப் பேசுவான். ஆகையால் அவன் பெண்கள் வட்டாரத்தில் ஒரு 'அர்ச்சுணன்'. அவர்கள் அவனது புகழ் பாடும் பவழக்கொடிகள்! அன்று வகுப்பில் மாணவர்களெல்லோரும் சபடியிருந்தாலும், பேராசிரியர் இன்னும் வரவில்லை. அப்பொழுது ரீட்டா உரத்த குரலில் துரை எழுதிய 'வகுப்பறையிலே.....!' என்ற கவிதையைப்பற்றி விமர்சனம் செய்து கொண்டிருந்தாள். அப்பொழுதான் பூமணி துரையைக் கடைக் கண்களால் விஷமாகப் பார்த்துக் கொண்டு, "வீதி சுற்றி திரிவதினால் மட்டும் கவிஞனாகி விடமுடியாது!" என்றாள்.

பூமணி சாதாரணமாக அப்படிச் சொல்லக்கூடியவளல்ல. துரையின் கருத்துமிக்க—சுவைமிக்கக் கவிதைகளைப் பன்னிப் பன்னிப் படிக்க அவள் தவறுவது கிடையாது. அவனது உவமானங்களை அவளைப்போல் சுவைத்துப் படிக்கும் 'நேயர்கள்' இல்லை. அவன் உவமானங்கள் தேடச் சோலையையும் கடற்கரையையும் நாடிச் செல்வது கிடையாது. வேண்டியதை அன்றாட வாழ்க்கையிலும் கல்லூரியிலும் பொறுக்கியெடுத்து விடுவான். அந்தத் திறமையை பூமணி பெரிதும் பாராட்டுவதுண்டு. எல்லாம் மனதிற்குள்தான்.

ஆனால் 'வகுப்பறையிலே....' என்ற கவிதையை அவளால் ரசிக்க முடியவில்லை அதில் அவன் தனது சகமாணவிகளைப் பற்றியெல்லாம் எழுதியிருந்தான். தேவமணியென்ற குறும்புக்காரி, ஞானமணியென்ற எழிலரசி, மேரி என்ற மேனகா, ரீட்டா என்ற அகலிகை,—இப்படியே ஒவ்வொன்றும் ஒவ்வொரு பேனாப் படங்கள்! ஆனால் பூமணியைப் பற்றி எழுதும்பொழுது மட்டும் அவன் வர்ணனைகள் சற்று அதிகப்படியான கிண்டல்களாக்கிவிட்டன.

பூமணி அணிந்திருந்த கறுத்தக் கண்ணாடியைப்பற்றி அவன் பாடியிருந்தான். 'கறுத்தக் கண்ணாடியாயிருந்தாலும் பெண்களின் கழுகுப் பார்வையை மறைக்கும் சக்தி அதற்கில்லை. ஒரு இரையின் மீது அந்தப் பார்வை நிலைத்தால் பாதகமில்லை. அந்தப் பொல்லாத கண்களுக்கு எத்தனை இரைகள். ஆனால் எல்லாவற்றையும்விட பருந்துக்கு கோழி மீதுதான் அதிகக் குறி!' என்று பாடியிருந்தான் அந்தப் பாட்டில்.

எதுவித விகற்பமும் இல்லாமல் இந்தப் பாட்டை வெறும் எதுகை மோனைக்காகவே இப்படி எழுதியிருந்தான் புதுமைதாசன். பூமணியைக் கேலி செய்ய வேண்டும். அவள் மமதையை மட்டந்தட்டவேண்டும் என்ற எண்ணம் அவனுக்கிருந்த போதிலும் அவளுடைய ஒழுக்கத்தை மாசுபடுத்தவேண்டும் என்ற கெட்ட நினைவு அவனுக்கு துளி கூடக் கிடையாது. ஆனால் இதே பாட்டு பூமணியின் வாழ்வுக்கே உலைவைக்கப் போகிறதென்பதை அவன் உணரவே இல்லை.

ரீட்டா மேற்படி அடிகளை நீட்டி முழக்கிக் கொண்டு படித்ததும் எல்லோரும் கொல்லென்றுசிரித்தார்கள். ஏனென்றால் அங்கு சுலைமான் என்று ஒரு மாணவன் கூடப் படித்தான். அவன் கூனிக் கொடுக்கிக்கொண்டு சற்று ஒல்லியாகக் காணப்பட்டான். அவனை எல்லோரும் "கோழி" யென்று பட்டப் பெயர் சொல்லி அழைத்து வந்தார்கள். புதுமை தாசன் குறிப்பிட்ட கோழி சுலைமான்தான் என்று அவர்கள் அர்த்தப்படுத்திக் கொண்டு அப்படிச் சிரித்தார்கள்.

பூமணிக்கு வெட்கமும், துக்கமும் தாங்க முடியவில்லை அவளுக்கு ஆத்திரம் வந்துவிட்டது. 'வீதி சுற்றி அலைபவன் எல்லாம் கவிஞனாகிவிட முடியாது'—இவ்வளவுதான் அவளால் சொல்ல முடிந்தது. அந்த இடத்தைவிட்டு சிட்டாக மறைந்தாள் அவள்.

அவன் ஒரு கவிஞன். எதை எழுதவும் உரிமை இருக்கலாம். ஆனால் ஒரு பெண்ணைப்பற்றி அதுவும் வாழ்க்கைப்படவேண்டிய ஒரு கன்னியைப்பற்றி இப்படியுமா எழுதுவது?

★

பூமணியும் புதுமைதாசனும் ஒரே ஊரைச் சேர்ந்தவர்கள். அடுத்த அடுத்த வீடுகளில் குடியிருப்பவர்கள். ஒரே பள்ளியில் படித்து ஒரே மண் மேட்டில் மண்விடு கட்டி விளையாடியவர்களும்தான். ஆனால் எந்தப் [illegible] அவன் அவ்வளவு 'புத்திசாலி' யல்ல. அவள் சீமான் வீட்டுச் செல்லப் பிள்ளையென்பது அவனுடைய உள்ளத்தில் முள்ளாக விதையிட்டிருந்தது. அவளுடைய 'குதி உயர்ந்த' சப்பாத்தின் தளுக்கு நடையும், தங்கச் சங்கிலிக் கைக்கடிகாரத்தின் 'பவிசும்' அவனுடன் அவன் ஒன்றிப் பழக இயலாது முள்வேலியிட்டிருந்தன.

ஆனால் அவளுக்கு அவன்மீது கொள்ளை ஆசை. அவனைவிட எதிர்வீட்டுக் குணமும், மாடி வீட்டு ஜீவாவும் அழகாகத்தான் இருந்தார்கள். அவர்களை அவள் விரும்பவில்லை. காரணம் அவர்கள் புதுமைதாசனைப் போல குறும்புக் காரர்களல்ல. தனது குறும்புச் சேட்டைகளால் அவளுடைய உள்ளத்தில் அவன் குடியேறி விட்டான். இதைப்பற்றி அவன் அறியவும் மாட்டான்; அக்கறைப்படவும் இல்லை.

பள்ளிக்கூடப் படிப்பை முடித்துக்கொண்டு இருவரும் பல்கலைக்கழகம் சென்றனர்.

கவிஞன் என்ற இறுமாப்போடு அவன் சென்றான். ஆனால் தன் உருவப் படத்தை நெஞ்சத்திலே வைத்திருக்கும் ஒரு உருவமும் தன்னுடன் வருகின்றாள் என்பதை அவன் அறியமாட்டான்.



கே. டானியல்

ஆனால் அவள் உள்ளத்தில் அதிக நம்பிக்கை இருந்தது. பல்கலைக்கழகத்தில் அவனுடன் பழக அதிக சந்தர்ப்பம் கிடைக்கும், தன்னுடைய உள்ளக் கிடக்கைகளை வெளியிடும் வாய்ப்புக் கிடைக்கும் என்றெல்லாம் நினைத்திருந்தாள். அவள் நம்பிக்கை சீக்கிரமே ஆட்டம் கண்டது. தன்னுடைய வகுப்பில் பூமணியென்ற ஒரு உருவம் இருப்பதாகவே அவன் கவலைப்படவில்லை. அவளுடன் அதிகம் பேசுவதும் கிடையாது. அவள் பேச முயன்றாலும் ஒரிரு வார்த்தைகளில் பேச்சை வளர விடாது முறித்து விடுவான்.

எத்தனையோ தடவைகளில் அவள் தன்னுடைய அழகை நீலக் கண்ணுடியில் பார்த்து ஏங்குவாள். மாநிற மேனி, அந்திவானச் சிகப்பேறிய உதடு, கொத்துமுல்லையான பற்கள், சாத்துக்குடிப் பழத்தையொத்த யௌவன மேடு, எழுபது பவுண்டு எடையுள்ள ஒல்லிய உடலம்; இத்தனைக்கும் மேலே பணம் கொடுக்கும் பவிசு. இவற்றுடன் நூற்றறுபது பவுண்டு ரீட்டா எப்படி போட்டியிட முடியும்? அவளுடைய உள்ளக் குளத்திலே சிந்தனை அலைகள்! அவளுடைய காதல் என்ற பளிங்குத் தரையிலே அவனுடைய அலட்சியம் என்ற தூசி படிந்துகொண்டிருந்தது.....

★

'ஏழிலோன்' என்ற ஆசிரியர் எழுதிய 'நாற் பத்தி ஐந்தாம் இரவு' என்ற ஏட்டிலே பத்துப் பன்னிரண்டு [illegible] பூமணி. ஆனால் எந்தப் பூமணியும் புதுமைதாசனும் ஒரே ஊரைச் சேர்ந்தவர்கள். அடுத்த அடுத்த வீடுகளில் குடியிருப்பவர்கள். ஒரே பள்ளியில் படித்து ஒரே மண் மேட்டில் மண்விடு கட்டி விளையாடியவர்களும்தான். ஆனால் எந்தப் பக்கத்தையுமே அவள் படிக்கவில்லை. அவள் பொறுமையை இழந்து விட்டாள். அவள் இருந்த நிலையிலே அந்தப் புத்தகம் கொடுத்தது வேப்பெண்ணெய் ஆனால் அவள் விரும்பியது தேன்.

ஏட்டை எடுத்து வீசியெறிந்து விட்டு, ஜன்னலோரம் சென்று 'தபசு' செய்ய ஆரம்பித்தாள். வெளியே பிறையை, சில வெள்ளை முகில் கூட்டங்கள் மறைத்தும் மறைக்காமலும் இருந்தன. வான மண்டலத்தில் அவை கண்ணாமூச்சி விளையாடிக் கொண்டிருந்தனபோலும்! தென்றலுக்குப் 'பஞ்சம்' நிலவிக்கொண்டிருந்தது. ஹாஸ்டல் ரேடியோவில் யாரோ ஒரு சங்கீதப் 'பெருச்சாளி' முகாரி பாடிக் கொண்டிருந்தார். பூமணியின் சிந்தனை மட்டும் புதுமைதாசனைச் சுற்றி வட்டமிட்டது.

பூமணி ஒரு முன்கோபிமட்டுமல்ல, வாயாடியுங்கூட. மற்றும்படி அவள் அப்பழுக்கில்லாத மலர், தேயாத நாணயம், உருக்குலையாத சித்திரம். புதுமைதாசன் மட்டும் இப்படியெல்லாம் நினைக்கவில்லை. அவள் பணத் திமிரின் உருவமைப்பு என்றுதான் கருதினான். கலாசாலையில் கம்யூனிஸம் பேசுவது ஒரு பாஷன் அல்லவா?

★

பூமணியைப்பற்றியோ அல்லது அந்த அப்பாவி சுலைமானைப்பற்றியோ அல்லது இருவரையும் சேர்த்து ஏதாவதோ பேசாவிட்டால் பொழுது விடியாது மாணவர்களுக்கு. 'இருவரும் கணவனும் மனைவியும் போல புடவைக் கடைக்கு வந்திருந்தனர்' என்பான் ஒருவன். 'நேற்று நான் சினிமாவுக்குப் போயிருந்தேன். அப்பொழுது அவர்களிருவரும் ஓரே 'பாக்ஸ் சீட்டில்' தனியாக இருந்தார்கள்' என்பான் மற்றொருவன். 'பிறின்ஸ் ஸ்ரூடியோவில் இருவரும் சேர்ந்து ஒன்றாக ஒரு போட்டோ எடுத்திருக்கிறார்கள், என்பான் இன்னுமொருவன். அந்தச் செய்திகள் பத்திரிகைகளில் வெளிவந்தாற்கூட பூமணி அதிகம் கவலைப்பட்டிருக்க மாட்டாள். ஆனால் இந்தச் செய்திகள் எல்லாம் சுவர்களில் செதுக்கப்பட்டிருந்தன. சில சரித்திர மாணவர்கள் அந்த எழுத்துக்களை ஆராய்ச்சிசெய்து தொடர்ச்சியான ஒரு வரலாறு எழுதத் தலைப்பட்டனர்.

இத்தனைக்கும் பாட நேரங்களைத் தவிர, மிகுதி நேரங்களிலெல்லாம் தன்னுடைய அறையிலேயே அடைபட்டுக் கிடந்தாள் பூமணி. ஆனால் அவளைப் பற்றிய செய்திகள் மட்டும் புதிது புதிதாகத் தோன்றிக் கொண்டுதானிருந்தன. ஆனால் புதுமைதாசன் எதைப் பற்றியும் கவலைப்படாது தனது கவி உலகிலேயே சஞ்சரித்துக் கொண்டிருந்தான்.

கலாசாலை மாணவர்கள் ஒரு கதம்ப மாலை; அங்கு ஒரு மலரைப் பல இலைகளுடன் சேர்த்து 'கல்வி'யென்ற நூலினால் இணைத்துவிடுவார்கள்; ஆகவே அவர்கள் ஒவ்வொருவரும் ஒவ்வொரு கோணத்திலிருந்து சிந்தித்தார்கள். வெறும் வாயைச் சப்பும் மாணவர்களுக்கு 'அவல்' கிடைத்தால் சும்மாவிடுவார்களா?

'ஒரு முஸ்லிமுடன் இந்துப் பெண் காதலா? சிவநேசரின் மகள் பூமணி கடற்கரை மோகினியாகச் சல்லாபம் கொட்டுவதா!'

நெஞ்சுத் துணிவில்லாத சில விஷமிகள் மொட்டைக் கடிதம் பல எழுத ஆரம்பித்தார்கள், சிவநேசருக்கு. முதலில் அவற்றைக் குப்பைத் தொட்டிக்குள் விசியெறிந்தார், வீதியில் ஓடக் கும் துண்டுக் காகிதங்களை எறிவதைப்போன்று. 'பொருமைக்காரர் சிலரின் விஷமம்' என்ற நினைவு அவருக்குச் சிறிது ஆறுதல் அளித்தது. ஆனால் வரவரக் கடிதங்களின் எண்ணிக்கை அதிகரித்தது. அவை பல கையெழுத்துகளில் வந்துகொண்டிருந்தாலும், செய்தி மட்டும் ஒன்றாக இருந்தது. 'சுலைமான் என்ற மஜ்னுவுக்கு லைலாவாக மாறிவிட்டாள் மகள். அதில் உடனே நீர் தலையிடாவிட்டால், குடும்ப கௌரவமே நிரம்பவும் பாதிக்கப்படும். அலட்சியமாக இருந்தால் தகப்பன் பெயர் சொல்ல இயலாத பேரனைப் பார்க்க நேரிடும்.....!"

சிவநேசரின் தலைசுழன்றது..... .....அவருடைய மெருகு குலையாத மோட்டாரின் சக்கரங்களும் சுழன்றன. இருநூறு மைல்களுக்கப்பாலிருக்கும் கலாசாலையை நோக்கிப் பறந்தது, அது.....

* * *

கார் பெண்கள் ஹாஸ்டலிலிருந்து புறப்படத் தயாராக இருந்தது. கண்ணீருடன் உள்ளே இருந்த பூமணி ரீட்டாவின் கைகளைப் பிடித்துக் கொண்டு தளதளத்த குரலிலே பேசினாள்.

'ரீட்டா! நான் பொறுமையுள்ளவளாகச் சிலகாலம் உன்னை வெறுத்தேன்; நீயும் புதுமைதாசனின் அன்பை என்னுடன் பங்கு போட வந்து விட்டாயென்ற துவேஷம் உன் மீது இருந்தது. நீ கூட அவருடைய அன்பைப் பெறலாமென்ற நம்பிக்கையுடன்தானிருந்தாய்? உன்னுடைய நம்பிக்கையைக் கூடச் சிதைத்துவிட்டார். அவர் நிரம்பவும் நல்லவர்; ஆனால் நமது உள்ளத்தைப் புரிந்துகொள்ளக்கூடிய அளவிற்கு உலகத் தொடர்பில்லாது கவிஞருலகில் சஞ்சரித்துக்கொண்டிருக்கும் 'கிறுக்கு' இறுதியாகச் சந்தித்துப் போகும் வாய்ப்பு எனக்குக் கிடைக்கவில்லை. நான் கலாசாலைப் படிப்பை இத்துடன் முடித்துக்கொள்கிறேன். அவர் மீது நான் வைத்திருக்கும் அன்பு என்றும் மாறாது என்று அவருக்குச்சொல்!.....ரீட்டா! நிச்சயமாக மறந்துவிடாது இதைச் சொல்லத்தான் வேண்டும். சுலைமானுக்கும் எனக்கும் ஒரு தொடர்பும் கிடையாது. இதை யார் அறிவாவிட்டாலும் அவர் அறிவார். அந்தக் கற்பனை என் வாழ்க்கையில் என்றும் மாறாத கறையாக இருக்கும்.....இனி ஏன் எனக்கு வாழ்க்கை? மிகுதியிருக்கும் நாட்களை நான் நடைப் பிணமாகத்தான் கழிக்கப் போகின்றேன். ரீட்டா! நீயேன் அழுகின்றாய்? துன்பம் எனது தனிப்பட்ட சொத்தாக இருக்கட்டும் நான் வருகின்றேன்....."

கார் புழுதியைக் கிளப்பிக் கொண்டு சென்றது. கண்களில் வழிந்துகொண்டிருந்த கண்ணீரைக்கூடத் துடையாது, அது சென்று மறையும்வரை அதிலேயே சிலைபோல நின்று கொண்டிருந்தாள் ரீட்டா.....

* * *

கையில் சிகரெட் எரிந்து கொண்டிருந்தது; வாயிலிருந்து வட்டம் வட்டமாகப் புகை மேலே சென்று கொண்டிருந்தது. இத்தனைக்கும் ரீட்டாவின் குட்டிப் பிரசங்கம் ஒலித்துக்கொண்டேயிருந்தது.....

'நீ வானமண்டலத்தில் சஞ்சரிக்கும் கவிஞனாக இருப்பதை விடுத்து, மக்கள் உள்ளங்களைப் புரிந்துகொள்ளக்கூடிய சாதாரண மனிதனாகவா! பலருக்கு உபதேசம் செய்வதிலும் பார்க்க ஒருசிலரின் உள்ளத்தை அறிந்துகொள்வது எவ்வளவோ மேல். பலர் உனக்கும் புகழ்மாலை அணிகின்றார்கள் என்ற காரணத்தினால், உன் மணமாலையை எதிர்பார்த்த ஒரு இளம் பெண்ணின் வாழ்க்கையைப் பாழாக்கிவிட்டாய்: ஒரு மலரைக் கசக்கலாம், அத்தர் எடுப்பதற்காக, அது நியாயமும்கூட. ஆனால் நீ வெறும் வீம்புக்காக ஒரு மலரைப்

(12—ம் பக்கம் பார்க்க)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சென்னைச் செய்தி:

சென்னை மாகாணத்தை தமிழ் நாடு என்று அழைக்கவும்

தமிழை ஆட்சி மொழியாக்கும் போருக்கு ம. பொ. சி. அறைகூவல்

இலங்கை-இந்தியர் பிரச்னை தீர வேண்டுமென்று மதுரை மகாநாட்டில் முழக்கம்

(நமது நிருபர்)

சென்னை மாகாணத்துக்கு தமிழ் நாடு என்று பெயரி டுமாறும் தமிழிலேயே அரசாங்க அலுவல்களை நடத்த வேண்டு மென்றும் சர்க்காரைக் கேட்டுக் கொள்ளும் தீர்மானம் காரைக் குடியில் தமிழரசுக் கழகத் தலை வர் ம. பொ. சிவஞான கிராமணி யார் தலைமையில் நடந்த கூட்ட மொன்றில் நிறைவேறியது.

கூட்டத்தில் திரு ம. பொ. சி. பேசுகையில் "தமிழில் ஆட்சி நடைபெறவேண்டும். ஆந்திரா, பீகார் உதயர் பிரதேசம் ஆகிய மாகாணங்களிலெல்லாம் தாய் மொழியில் ஆட்சி நடைபெறு கிறது.

"ஆனால் நம் மாகாணத்தில் ஆங் கில மொழியில் அரசாட்சி நடை பெறுகிறது. இது வெட்கப்பட வேண்டிய விஷயம். இதற்காகப் போராடவேண்டும்.

"ஜனவரி 16-ந் தேதி முதல் ஒரு வார காலம் தமிழில் ஆட்சி நடை பெறவேண்டுமென்ற கோரிக்கை யை வற்புறுத்தும் வாரமாகக் கொண்டாடுமாறு கேட்டுக் கொள் கிறேன்" என்றார்.

தொடர்ந்து அவர் பேசுகையில் "சுதந்திர ஐக்கிய இந்தியாவினுள் சுதந்திர தமிழகம் வேண்டுமெனக் கேட்கிறோம். வெளி நாட்டார் கேட்டால் நான் இந்தியன் என்றே சொல்லிக்கொள்வேன். ஆரியனுயி னும், திராவிடனுயினும் சரண்டல் கூட்டத்தை ஒழிக்க வேண்டி யதே" என்றார்.

தமிழ் கொடி குறித்து அவர் பேசும்போது "தமிழ ரசுக் கழகத்தின் கொடி புதிதல்ல. பண்டைத்தமிழ் மூவேந் தர் கொடியே இது. ஆரிய திரா விட இனங்கள் பற்றிப் பேசுவது செத்துப்போன பேச்சு. தமிழ் மொழி, இனம் இவற்றின் நலனுக் காக திராவிடக் கழகத்தினர் பாடு பட்டிருந்தால் தமிழரசுக் கழகம் தோன்றியிராது நமது இலக்கியம் 4000 ஆண்டுகளுக்கு முந்தியது. சில ஆயிரம் ஆண்டுகளுக்குமுன் இங்கு வந்த ஆரியன் நம்முடன் கலந்துவிட்டான்" என்றார்.

மதுரை மகாநாட்டில் இலங்கைத் தலைவர்

"இந்தியா—பாகிஸ்தான் ஆகிய நாடுகளிடையே உள்ள வேற்றுமைகளைப் பயன் படுத்திக் கொண்டு அமெரிக்க ஏகாதிபத்திய வாதிகள் பாகிஸ் தானுடன் ராணுவ ஒப்பந்தம் பற்றி பேச்சுவார்த்தைகள் நட த்தி வருகின்றனர். இதேபோன்று இலங்கையிலும் அவர்கள் சூழ்ச்சி செய்து இந்தியா, இலங்கைப பிர தமர்களின் பேச்சுவார்த்தைகள் வெற்றி பெருமலிருப்பதற்காக முயற்சிக்கிறார்களென்று மதுரை யில் நடைபெற்ற இந்திய கம் யூனிஸ்ட் கட்சியின் மகாநாட்டில் கலந்து கொண்ட இலங்கை கம்யூனிஸ்ட்கட்சி பொதுச் செய லாளர் டாக்டர் விக்கிரமசிங்கா கூறினார்.

இலங்கை இந்தியர் தகராறு பற்றி இந்தியப் பிரதமர் நேருவும் இலங்கைப் பிரதமர் கொத்தலா வலவும் ஜனவரி மாதம் நடத்தப் போகும் பேச்சுவார்த்தைகள் இத் தகராறுகளைத் தீர்த்துக் கொள்ள ஒரு நல்ல சந்தர்ப்பமாகும். இலங் கையில் குடியரசு ஆட்சி பலப்பட வேண்டுமானால் இலங்கை இந்தி யர்களின் பிரஜா உரிமை நீயாய மான முறையில் தீர்க்கப்பட வேண்டும்.

மேலும் தற்போதுள்ள சர்வ தேச நிலைமையில் இலங்கை இந்தி யர் தகராறின் காரணமாக இரு நாடுகளுக்குமிடையே வேற்று மையை வளரவிடக் கூடாது. இலங்கை இந்தியர் தகராறை தங் களுக்கு சாதகமாக உபயோகித் துக் கொள்ள அமெரிக்கர்கள் முயன்று வருகின்றனர். இலங்கை யிலுள்ள லட்சக்கணக்கான இந்தி யாகளை வெளியேற்ற வேண்டு மென்று அவர்கள் பகிரங்கமாக கூறிவருகிறார்கள்" என்றார்.

ஹிந்தியை அரசாங்க பாஷை யாக திணிப்பதை எதிர்த்தும், தமி முகம் உடனடியாக அமைக்கப்பட வேண்டும் என்று கோரியும் மகா நாட்டில் தீர்மானிக்கப்பட்டது.

காங்கிரஸ் எதிர்ப்பு சகல முற் போக்காளர்களின் ஐக்கிய முன் னணி அமைத்து மக்கள் ஜன நாயக ஆட்சி ஏற்படுத்த வாரீர் என்று மகாநாடு அறிக்கைவிட் டுள்ளது.

இந்திய கம்யூனிஸ்ட் கட்சியின் மூன்றாவது மகாநாடு 27-12-53 தொட்டு ஏழு தினங்கள் மதுரை யில் நடைபெற்றது. இந்த மகா நாட்டுக்கு பிரிட்டிஷ் கம்யூனிஸ்ட் கட்சியின் தலைவர் திரு ஹரிபாலிட் வந்துள்ளார்.

திரு பொலிட் உட்பட தலை வர்கள் மதுரை புகையிரத ஸ்தா னத்துக்கு வந்திறங்கியபோது 20000 பேர்களுக்கு மேல் கூடி வரவேற்றனர். 500 தொண்டர்கள் அணிவகுப்பு நடத்தினர். முரசங்கள் அதிர, தாரை, தப்பட்டை, பறைகள் ஒலிக்க அதிர் வெடிகள் விடப்பட் டன. திரு ஹரிபாலிட்டும், அஜாய் குமார் கோஜும் நன்றி கூறினர்.

ஜனவரி 3ந் தேதி மதுரை தமுக் கம் மைதானத்தில் 2 லட்சம் மக் கள் திரண்ட மகாநாட்டின் இறு திப் பொதுக் கூட்டமும் பிரமாண் டமான ஊர்வலமும் நடந்தது.

கூட்டத்திற்கு தமிழ்நாட்டின எல்லா ஜில்லாக்களிலுமிருந்தும் ஆயிரக்கணக்கான பேர் ரெயில்க ளிலும், பஸ்களிலும், ஊர்வலங்க ளாகவும் வந்தார்கள். வீதிகளில் அவர்களுக்காக தண்ணீர் பந்தல் கள்போடப்பட்டிருந்தன. மதுரை தெருக்கள் பூராவும் கொடிகளும், தோரணங்களும், வளையங்களும் அலங்கரித்து நின்றன

சுந்தரம் தியேட்டரிலிருந்து ஆரம்பித்த ஊர்வலத்தில் கொடிகளால் அலங்கரிக்கப்பட்ட யானை முன்னுக்குப் போனது. அதன் பின்னர் குதிரையும் மாட்டு வண்டியும் சென்றன. மதுரையில் போலிஸாரால் சுட்டுக்கொல்லப் பட்ட மணவாளனின் உருவப் படத்தை தாங்கிய சப்பரம் பின் தொடர்ந்தது.

பாண்டு வாத்தியம் முழங்கிச் சென்ற ஊர்வலத்தின் ஆரம்பத் தில் புலிவேஷம், மயிலாட்டம் குறவன்-குறத்தி நடனம், கரகம் முதலிய கலாரீதிச்சின்னங்கள் நடன் தன.

ஊர்வலத்தையும், பொதுக்கூட் டத்தையும் அரசாங்க சினிமா செய்தி பகுதியினர் படம் பிடித்த னர். இது திரையிடப்படும்.

பதினைந்து தினங்கள் கடை அடைப்பு

"பதினைந்து நாட்களுக்குசேர்ந் தாற்போல் கடைகளை மூடி ஹர்த் தால் செய்ய வேண்டும். அப்போ முதுதான் வியாபாரிகளின் குறை களை அரசாங்கம் உடனடியாகக் கவனிக்கும்" என்றுபல கட்ட விற் பனை வரி எதிர்ப்பு மகாநாட்டில் ஈ வே. ராமசாமி பெரியார் பேசும்பொழுது கூறினர்.

ஈரோட்டில் உள்ள பெரியார் திடலில் சென்னை ராஜ்ஜிய பல கட்ட விற்பனை வரி எதிர்ப்பு மகா நாடு நடைபெற்றது.

ஈ. வே. ராமசாமி மகாநாட்டில் பேசியதாவது:—

இந்த மகாநாட்டில் வியாபாரி களே பெரும்பாலும் கலந்து கொண்டிருக்கின்றனர். வியாபாரி களுக்கு பொதுமக்களை விட கொஞ்சம் அதிகமாகவே கஷ்டங் கள் இருக்கின்றன.

புதிய அரசாங்கம் பதவிக்கு வந் ததின் காரணமாக வியாபாரி களின் நிலை மிகவும் தாழ்ந்திருக் கிறது.

வியாபாரிகளிடத்தில் பிச்சை எடுத்து படித்தவர்கள் அதிகாரத் திற்கு வந்தவுடன் வியாபாரி களையே மிரட்டுகிறார்கள் என்றார்.

சென்னையில் சீன கலைஞர்கள்

சீன மக்கள் குடியரசின் கலாசார இலாகா உதவி மந் திரியான டிங்-சின்-வின் தலை மையில் வந்துள்ள சீன கலாசார தூதுகோஷ்டியினருக்கு சென்னை யில் மகத்தான வரவேற்பளிக்கப் பட்டது

சென்னை நகரின் பல்வேறு தொழிலாளர் சங்கங்கள், வாலி பர் சங்கங்கள், நாடகக் கழகம், சினிமா நடிகர் சங்கம் முதலிய வற்றின் சார்பில் தூதுகோஷ்டியி னருக்கு ஸ்டேஷனில் மலர்மாலை கள் அணிவிக்கப்பட்டன.

நடராஜர் சிலை

விம்கோ தீப்பெட்டி தொழிலா ளர் சங்கத்தின் சார்பில் தூது கோஷ்டியினருக்கு வெள்ளியால் செய்யப்பட்ட நடராஜ கடவுளின் உருவம் (நடனம் ஆடுவதுபோல்) அன்பளிப்பாக அளிக்கப்பட்டது.

இதைத் தொடர்ந்து திருவல் லிக்கேணியில் நடந்த பிரமாண்ட மான கூட்டத்தில் கலைவாணர் என். எஸ். கிருஷ்ணன் பாட்டுப் பாடி சீன கலைஞர்களை வரவேற் றார். உடனே சீன கலைஞர் ஒருவர் இந்தி பாட்டு ஒன்றை பாடினர். அந்த பாட்டுக்கு தகுந்தபடி கூட் டத்திலிருந்து ஏராளமான மக்கள் தாளம் போட்டனர். சீன கலைஞர் பாடிய பாட்டின் முதல் வர்கள் தெரிவிக்கும் கருத்து "இந்திய—சீனர் சகோதரர்கள்" என்பதே ஆகும்.

திருக்குறள் பரிசு

சீன கலாச்சார தூதுகோஷ்டியி னருக்கு சென்னை மக்கள் கலா மன்றத்தினர் திருக்குறள் புஸ்த கம் ஒன்றை பரிசளித்தனர். கலை ஞர் அனைவருக்கும் ஒவ்வொரு புத் தகம் அளிக்கப்பட்டது. சீன தூதுகோஷ்டியினர் பல புத்தகங் களையும் வர்ண ஓவியங்களையும் சென்னை இந்தியா-சீனு நட்புறவு கழகத்துக்கு பரிசாக அளித்தனர்.

"இமயமலை உள்ளவரையில் இந் தியா—சீனு ஆகிய நாடுகளுக் கிடையே உறவு நீடிக்கும்" என்று சீன தூதுகோஷ்டியினருக்கு அளித்த பிரமுகர்கள் வரவேற் பில் ஐக்கிய முன்னணி செயலா ளர் ஆதித்தன் சொன்னார்.

'சீனுதான் உலகிலேயே பெரிய நாடு. அங்கு 50 கோடி மக்கள் வாழுகின்றனர். கடந்த சில வரு ஷங்கள் ஐக்கிய முன்னணி ஆட்சி யில் சீனு பெரும் முன்னேற்றம் அடைந்துள்ளது.

"இந்தியாவும், சீனுவும் சேர்ந் தால் 90 கோடி மக்கள் ஒன்று படுகின்றனர். இதனால் மனித இனத்தின் எதிர்காலத்தை நிர்ண யிக்க முடியும்" என்றார்.

வேலை தேடும் பெண்கள் சோரம்

வேலை தேடி சென்னை நகருக்கு வரும் இளம் பெண்கள் கெடுக்கப் படுகிறார்கள் என்று சென்னை மேல் சபையில் சட்ட இலாகாமந் திரி குட்டிகிருஷ்ணன் நாயர் ஒரு கேள்விக்கு பதிலளிக்கையில் தெரி வித்தார்.

மந்திரி மேலும் கூறியதாவது:- "வாழவழியின்றி வேலை தேடிக் கொண்டு சென்னை நகருக்கு வரும் இளம் பெண்கள், காலிகளின் கை யில் சிக்கிக் கெடுக்கப் படுகிறார் கள். இவ்விதம் 4 இளம் பெண் கள் மீட்கப்பட்டு பெண்கள் மீட்பு விடுதிக்கு அனுப்பப்பட்டனர்.

வாழ்க்கையில் வழுக்கி விழக் கூடிய குழ்நிலையில் இருக்கும் இளம் பெண்கள்பற்றி பொது ஸ்தாபனங்கள் தகவல் அறிவித்து பெண்கள் மீட்பு விடுதியில் சேர அந்த பெண்களும் சம்மதித்தால் அவர்கள் அங்கு அனுப்பப்படுவ தாக மந்திரி தெரிவித்தார்.

தி. மு. க. பத்தாயிரம் நிதி

தூத்துக்குடி சதி வழக்கு நிதிக் காக திராவிட முன்னேற்றக் கழ கத்தினர் இதுவரை 10 ஆயிரம் ரூபாய் திரட்டியிருக்கிறார்கள்.

இந்த நிதிக்காக சினிமா நடிகர் எம். ஜி. ராமச்சந்திரன் மதுரை யில் "இன்பக் கனவு" என்ற நாட கம் நடத்தி அதில் வசூலான ரூ. 1000 தை கருணாநிதியிடம் ஒப்படைத்தார்.

சத்தியவாணி அம்மாள் தலைமை யில் பெண்கள் ரூ. 901 வரை நன் கொடை திரட்டி தாய் மார்கள் சார்பில் அண்ணாதுரைக்கு அளிக்கப் பட்ட வரவேற்பின்போது அவ ரிடம் ஒப்படைத்தார்கள்.

வாழும் நாடும் பேசும் மொழியும் தமிழருக்கு இரு கண்கள் போன்றன

கண்ணிரண்டும் விற்று சித்திரம் வாங்கும் பேதமை தமிழர்களிடமிருந்து ஒழிய வேண்டும்

பாரதியின் இரண்டு அடிகளுக்கு தமிழ் அறிஞர் விசுவநாதம் தரும் அற்புத விளக்கம்

தாய் நாடும் தாய் மொழியும் மக்களுக்கு இரு கண்கள். அவற்றை இழந்தால் கண்ணிழந்த குருடராவோம். கண்ணில்லா வாழ்வு வாழ்வாமா? பட்டத்திற்கும் பதவிக்குமாகத் தன்னுட்டையும் மொழி யையும் அடகு வைப்பவர் கொடியவராவர். இக்கருத்தைப் பாரதியா ரின் கவிதை அடிகளிரண்டைக்கொண்டு அற்புதமாக விளக்குகிறார் அறி ஞர் கி. ஆ. பெ. விசுவநாதம். நுணுகி எவற்றையும் ஆய்ந்து விளக் கும் கட்டுரையாளர் நடையிலே உணர்ச்சியும் பொருளும் ததும்புகின் றன. இத்தகைய ஆராய்ச்சி, நுனிப் புல் மேயும் இன்றையத் தமிழ கத்திற்கு மிகவும் இன்றியமையாததல்லவா?

1 கவிஞர் பாரதியார் பல்வேறு துறைகளுக்குப் பல்வேறு அடிக ளாக் கொடுத்திருக்கின்றார். சமூ கத்துறைக்கு அவர் கொடுத்த அடிகள் சில. அவற்றுள் ஒன்று கல்லடியினும் சிறந்த சொல்லடி யாகக் காட்சியளிக்கிறது. அது "கண்ணிரண்டும் விற்றுச் சித்தி ரம் வாங்கினுல் கைகொட்டிச் சிரி யாரோ!" என்பது.

2. சித்திரக் கலையைப் பாரதி பெரிதும் போற்றுகிறார். மக்கள் அதனை விரும்பிக் கண்டுகளிக்க வேண்டும் என்றும் ஆசைப்படுகி றார். அது உயர்ந்த விலை மதிப்பு உடையது என்றும் கருதுகிறார். ஆனல் அதற்காகக் கொடுக்கப்ப டும் விலை கண்ணுக இருக்கக் கூடாது என்று எச்சரிக்கிறார். கண்ணை இழந்துவிட்டால் சித்தி ரத்தைக் கண்டு களிப்பது எப்படி? என்பதே அவரது கேள்வி.

3 கண்ணை இழந்த ஒருவன் சித் திரங்களை வாங்கி வைத்துத் தட விப் பார்த்துக்கொண்டிருப்பது நகைக்கக்கூடிய நிகழ்ச்சியல்ல; அது மிகவும் இரங்கி வருந்தக் கூடிய ஒரு நிகழ்ச்சி. பின் நகைப் பிற்குரிய நிகழ்ச்சி யாதெனில் கண் இருக்கிற ஒருவன் கண்ணையே விலையாகக் கொடுத்துச் சித்தி ரத்தை வாங்கும் நிகழ்ச்சியே என் பது கவிஞரின் கருத்து.

4 கண்ணை இழந்து சித்திரம் வாங்குவதா? எனபது தமிழ் நாட் டுப் பழமொழிகளில் ஒன்று. அதை அப்படியே கூறக் கவிஞரின் உள்ளம் ஒப்பவில்லை. ஒரு கண்ணை விற்றுச் சித்திரம் வாங்கும்செயல் ஒருக்கால் ஒப்பக்கூடியதானலும் ஆகலாம் எனக் கருதியே கண்ணி ரண்டும் விற்றுச் சித்திரம் வாங்கு வதே நகைக்கக்கூடியது என முடிவுகட்டிக் கூறிவிட்டார்.

5. ஒரு உயர்ந்த சித்திரத்தைப் பார்த்து மகிழ்ந்து அதற்குத் தன் உயிர்ந்த உறுப்பாகிய கண்க ளையே விலையாகக் கொடுத்து மகி ழும் புரட்சி, ஒரு கலைஞனின் உள் ளத்தில் தோன்றினலும் தோன்ற லாம் என எண்ணியே கவிஞர் முத லில் கண்களை விற்றுப் பிறகு சித் திரம் வாங்கும் கொடுமைதான் நகைக்கக்கூடியது என இப்பாட லில் குறிப்பிட்டுக் கூறுகிறார்.

6 கண்களை விற்றுச் சித்திரம் வாங்கும் செயல் எங்கே? என்றே? நடந்ததாகவோ, நடக் கக்கூடியதாகவோ தெரியவில்லை. பின் ஏன் கவிஞர் இவ்வாறு கூறி யிருக்கிறார் என எண்ணிப் பார்க் கும்பொழுது இதனை எதற்கோ உவமையாகக் கூறியிருக்க வேண் டும் என்றே நமக்குத் தோன்று கிறது.



கி. ஆ. பெ. விசுவநாதம்

தமிழ் நாட்டை ஒரு 'கண்' ஆக வும் தமிழ் மொழியை ஒரு 'கண்' ஆகவும் கருதி வாழ்ந்தவர். இவ் உண்மையைச் "செந்தமிழ் நாடு" "தமிழ்த் திருநாடு" என்ற சொற் களே மெய்ப்பிக்கும், இச் சொற்க களில்கூட மொழியும். நாடும், விழி யும், இமையும்போல ஒன்றை யொன்று தழுவிக்கொண்டிருப் பது பெரிதும் வியப்பையளிக்கி றது. "எண்ணும் எழுத்தும் கண் ணெனத் தகும்" என்பது ஔவை யின் கருத்து. "நாடும் மொழியும் நல்ல கண்கள்" என்பது பாரதி யின் கருத்து

8 சென்னை முதன் மந்திரி பதவி தமிழ்நாடு காங்கிரஸ் கமிட்டி பதவி, சட்டசபை உறுப்பினர் பதவி, அரசாங்க அகராதி கமிட் டிப் பதவி, தமிழ்தமிழ்ப் பல்கலைக் [illegible] பேராசிரியர் பதவி, வளர்ச் சிக் கழகத் தலைமைப் பதவி, கலைக் கழகச் செயலாளர் பதவி, இயக் கத் தலைமைப் பதவி முதலிய பத விகளையோ, டாக்டர் பட்டத் தையோ, பாடப் புத்தக அங்கீக ரிப்புச் சலுகையையோ, வியா பார சலுகையையோ, பணமுடிப் பையோ, பரிசுத் தொகைக ளையோ, வேறு எதையோ மக்கள் விரும்பிப் பெற்று மகிழ்வதனால் மகிழட்டும். ஆனல், அதற்காகக் கொடுக்கப்படும் விலை தமிழையும், தமிழ் நாட்டையும் காட்டிக் கொடுப்பதாக இருக்கக்கூடாது என்பதே கவிஞரின் கருத்து.

(12-ம் பக்கம் பார்க்க)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வாடாமலர்

"சுலோசனை"

நீலா—

27 சமூக சேவை

மாதங்கள் பல கழிந்தன.....

மிஸ் பாரிஜாதத்தின் பெயரும் புகழும் இலங்கையின் சகல பாகங்களிலும் பரவலாயிற்று. மனோகரனுக்கு தான் அளித்த வீரம் பொதிந்த வாக்குறுதிகளைக் கண்ணுங் கருத்துமாக அவள் காப்பாற்றி வந்தாள். சமூக சேவையே அவளுடைய வாழ்க்கையின் இலட்சியமாகி விட்டது.

பெண்களின் முன்னேற்றத்திற்காக உழைப்பதில் அவள் பெரிதும் ஈடுபட்டாள். ஆங்காங்கே பெண்கள் சங்கங்கள் ஸ்தாபிக்கப்பட்டன. ஏழைக் குழந்தைகளை எடுத்து சம்ரக்ஷிக்கும் நிலையங்களும், வைத்திய சாலைகளும், பிரசவ விடுதிகளும் ஏற்படுத்தப்பட்டன. இவற்றை ஸ்தாபிப்பதற்கு பொதுமக்களிடமிருந்து நிதி திரட்டினாள். அரைகுறை தேவைப்படும் போது தன் பணத்தில் இருந்து தாராள மாகக் கொடுத்துதவி நிறை வேற்றினாள்.

அவளுடைய தன்னலங் கருதா சேவையின் காரண மாக பெரிய பெரிய மனிதர் கள் எல்லாம் அவளுக்கு அறி முகமானார்கள். பற்பல தோழர் களும் தோழியர்களும் தோன் றினர்கள். அவர்களுடைய மனத்திலெல்லாம் அவள் சேவா உணர்ச்சியைத் தூண்டி விட்டு அவர்களையும் தன்னோடு கூட பொதுத் தொண்டில் உழைக்கும்படி செய்து விட் டாள். அவர்களில் திறமை சாலிகளைத் தேர்ந்தெடுத்து அவ்வப்போது நாடகங்களும், கச்சேரிகளும் நடத்தி பொதுப் பணிக்காக அளவிறந்த நிதி யைத் திரட்டினாள். அவள் ஈடுபட்ட சங்கங்கள், நிலையங் கள், மன்றங்கள் இப்படி சகல வற்றிற்கும் பெரும்பாலும் அவளே தலைவியாகவோ, செய லாளராகவோ அன்றி பொரு ளாளராகவோ அமர்ந்து நாளும் சுமார் இருபது மணித் தியாலங்கள் இரவு பகலாக உழைத்துவந்தாள்.

பாரிஜாதம் என்ற பெயர் நாட்டின் நாலா பக்கங்களிலும் எதிரொலித்தது. பத்திரிகை கள் யாவும் அவளுடைய படத் தைத்தாங்கி வெளிவந்தன. சொற்ப காலத்துக்குள் பொது மக்களின் அபிமானத்தைக் கவர்ந்த பெண் பிறிதொருத்தி இல்லையென்ற நிலைமையை பாரிஜாதம் அடையலானாள்.

எல்லோரும் மனிதர்கள்—ஆனால் ஒருவர் மட்டும் இன்ப சாகரத்துள் களித்துப் புரளும் போது மற்றவர் துன்பப் படு குழியில் துடித்து வாடுவதேன்? இதை நினைத்துப் பார்க்க பாரி ஜாதத்திற்கு எப்படியோ இருந் தது. தவிக்கும் ஏழைகள் அனை வர்க்கும் ஆதரவளிக்க தன் னிடம் அட்சயபாத்திரம் இல் லாவிடினும் சற்றும் எதிர்பா ராதவிதமாக தன் பெரியப்பா மூலம் தனக்குக் கிடைத்த பெரும் ஆஸ்தியைச் செலவிட் டாவது ஒருசில ஏழைகளை யேனும் காப்பாற்றவேண்டும் என்ற நல்லெண்ணம் அவள் மனதில் உதிக்கலாயிற்று. எனவே மருதானையை அடுத்து ஒரு கட்டடத்தை வாங்கி அங்கு ஒரு அனுதைகள் ஆதரவு நிலையத்தை ஏற்படுத்தினாள். அதற்கு தன் பெரியப்பாவின் பெயரைச் சூட்டி 'சந்திர சேகரர் அனுதைகள் ஆதரவு நிலையம்' என்று அழைத்தாள். அந்த நிலையத்தைத் தானே நேரடியாகக் கண்காணித்தும் வந்தாள்.

பிரதினமும் காலையில் ஆதரவு நிலையத்திற்கு வரு வாள் பாரிஜாதம். அப்போது மொய்ப்பதுபோல் அவளைச் சூழ்ந்துகொள்வார்கள் ஏழைப் பெண்களும் குழந்தைகளும். அழகே உருவெடுத்ததுபோன்ற இந்த இளம் பெண் தனது செவ்விதழ்களில் புன்னகை மலர அவர்களோடு இன்பமாக உரையாடுவாள். ஒரு நாளே னும் கோபமாகவோ அலட்சிய மாகவோ அவள் பேசியறி யாள். அவளது இனிய மொழி களையும், போதனைகளையும் கேட்டானந்திக்க பெண்கள் கூட்டம்கூட்டமாக காத்து நிற் பார்கள். திக்கற்ற பருவ மங்கையர், சீதனக் கொடு மைக்குப் பலியான இளம் பெண்கள், ஆடவர்களால் சோரம் செய்யப்பட்டு சமூ தாயம்என்ற சர்வநலா சாலையில் 'விசாரி' என்ற பட்டத்தை பெற்று மனமுடைந்தவர் கள் வாழ்வின் பூப்பருவத்திலே கணவனைப் பறிகொடுத்தவிதவைகள், வறுமையின் கொடுமையால் உடலை பணயமாகபடைத்தபாலஸ்திரீ கள்—இப்படியானவர்கள் எல் லாம் பாரிஜாதத்தினால் கை தூக்கிவிடப்பட்டு காப்பாற்றப் பட்டனர். பாரிஜாதத்தை வாயார மனதார வாழ்த்தி வணங்கிய பெண்கள்தான் எத் தனைபேர்! அவளை ஒரு பெண் தெய்வம் என்றே அர்ச்சித்த தாய்மார்கள் எத்தனை பேர்! அவர்கள் மகிழ்வதைக் கண்ட பாரிஜாதம் தானும் மகிழ்ந் தாள். ஏழைகளின் கண்ணீ ரைத் துடைப்பதால் எவ்வளவு மனச்சாந்தியும் இன்பமும் கிட் டும் என்பதை அப்படிச் செய்து அனுபவித்தவர்கள் தாம் அறி வார்கள். பாரிஜாதம் அதை அனுபவித்தாள். கவலையை மறந்தாள்.

பாரிஜாதத்தைப் போன்ற ஓர் அழகி—அதுவும் இளம் பெண்—தன்னந்தனியாக சமூக முன்னேற்றத்திற்காகப் பாடு பட்டு வெற்றியடைந்தாளென் பது கீழைநாட்டில் ஒரு வியப் பானசம்பவமாய் இருக்கலாம். ஒரு பெண் சமூக சேவையிலீடு பட்டால் அவளுக்கு பாது காப்பு உண்டா? வெறிபிடித்த ஆடவர்களின் பருந்துப் பார் வையிலிருந்து அத்தகைய ஒரு பச்சைக் கிளி தப்ப முடியுமா என்ற ஆசங்கைகள் எழும்பு வது இயற்கையே.

பாரிஜாதத்தின் நிலை வேறு. இங்கிலாந்திலேயே பிறந்து, இங்கிலாந்திலேயே வளர்ந்த பெண் பாரிஜாதம். தந்தை இலங்கையர். அதனால் மேல் நாட்டுப் பழக்கமும் கீழ்நாட் டுப் பழக்கமும் சேர்ந்து அவள் உள்ளத்தில் ஊறி விடவே அவள் தனிப்பட்ட பண்பு களையுடைய ஒரு பெண்ணாக மாறிவிட்டாள். ஆண்களோடு சகஜமாகப் பழகுவாள் பாரி ஜாதம்—ஆனால் எந்த ஆடவ னும் தூர்நோக்கத்தோடு அவளை அணுக அஞ்சுவான். சாதுரியமும், சாமர்த்தியமும், சாகசமும், துணிச்சலும் அவ ளோடு கூடப் பிறந்தவை. அவள் மனோகரனை மனமாரக் காதலித்தாள். அவன் கிடைக் காமற் போனதனால் அவள் மனம் குன்றிவிடவும் இல்லை. அந்த இடத்தில் இன்னொருவ ருக்கு இடமளிக்கவும் அவள் தயாராய் இல்லை. எனவே எந்த ஆடவனும் அவளை மயக்க முடியாத திண்மையுடைய ஒரு கண்ணகிப் பெண்ணாக அவள் காட்சியளித்தாள்.

மிஸ் பாரிஜாதம் வெளி வேஷமிடும் நரியல்ல. பிறர் நலத்திற்காகத் தன்நலம் பாராத சேவகி என்று சமூகம் உணரத் தலைப்பட்டது.

மனோகரனுக்கு பாரிஜாதம் அடிக்கடி கடிதங்கள் எழுதுவ துண்டு. ஆனால் அவன் அநேக மாகப் பதில் எழுதுவதில்லை. எங்காவது ஒரு ஊரிலிருந்து என்றுவது ஒரு கடிதம் போடு வான். அதிலும் இரண்டு மிஞ் சினால் மூன்று வரிகள்தான் எழுதுவான். தன் விலாசத்தை யும் சரிவரக் கொடுக்கமாட் டான். கொடுத்தால் ஒருவேளை பாரிஜாதம் வந்து இறங்கிவிட் டால் என்ன செய்வது என்ற பயம் அவனுக்கு. தான் மல்லி காவை மணந்துகொண்டதைப் பாரிஜாதம் அறியாமல் பாது காத்துவந்தான் மனோகரன். ஏன் இப்படிச் செய்கிறான் என் பது அவனுக்கே தெரியாது. ஒருவேளை தன்னை மனப்பூர்வ மாகக் காதலிக்கும் பாரிஜாதம் தான் வேறு ஒருவனை மணம் செய்து கொண்டான் என்ப தைத் தெரிந்து கொண்டால் மனமுடைந்து போவாளே யென்ற கவலையாய் இருக்க லாம்.

ஆனால் பாரிஜாதம் பாவம் இன்னும் அவன் பிரமச்சாரியா கவே இருக்கிறான் என்றும் என் றுவது ஒரு நாள் வந்து தன்னை ஏற்றுக் கொள்வான் என்றும் நம்பிக் காத்திருந்தாள்.

அன்று ஒரு சனிக்கிழமை. சனிக்கிழமை பிற்பகலில்தான் பாரிஜாதத்திற்கு சற்று ஓய்வு கிட்டும். அவள் நிம்மதியாக ஒரு சாய்வு நாற்காலியில் சாய்ந்துகொண்டு பற்பல பத் திரிகைகளையும் பார்த்துக்கொ ண்டிருந்தாள். அவள் பக்கத் தில் சற்று தொலைவில் ஆயாள் மீனுதையல் மெஷீனில் ஏதோ வைத்து தைத்துக் கொண்டி ருந்தாள்.

தபால்காரன் வாயிலில் தோன்றினான். பல கடிதங் களைக் கொடுத்துவிட்டுச் சென் றான். வழக்கமாக இருபது முப் பது கடிதங்கள் பிரதி தினமும் பாரிஜாதத்திற்கு வருவது வழக்கம். இன்றுவந்த கடிதங் கள் அத்தனையையும் திறக்க முன்பு ஒரு முறை ஒன்றொன்றா கப் பார்வையிட்டாள். அவற் றில் ஒன்றில் பொறிக்கப்பட்டி ருந்த விலாசத்தின் எழுத்துக் களைக் கண்டதும் அவளுடைய மார்பகம் ஒரு முறை விம்மிப் படிந்தது. ஆம், அவை மனோ கரனின் எழுத்துக்கள்!

அந்தக் கடிதத்தைத் தனியா கக் கையிலெடுத்தாள். வழக் கத்திற்கு விரோதமாக அது சற்று தடிப்பாக இருந்தது. இரண்டு மூன்று தாள்கள் எழு தப்பட்டு உள்ளே வைக்கப்பட் டிருப்பதாக உணர்ந்ததும் அவ ளுக்கு ஒரு விதபடபடப்பு ஏற் பட்டது "ஒருதாளில் இரண்டு வரி எழுதும் அத்தான் இன்று மட்டும் இத்தனை கடதாசிகளில் என்ன எழுதியிருப்பார்" இப் படி ஆரம்பித்த சிந்தனை பற் பல கிளைகளாக பரவலாயிற்று.

"அத்தானுக்கு ஏன் இத் தனை கடினமான உள்ளம்? ஏன் என்னை அவருக்குப் பிடிக்க வில்லை. என் ஆஸ்தி அனைத்தை யும் என் உயிரையும் அவர் பாதத்தடியில் அர்ப்பணித்த போதிலும் என்னை அசட்டை செய்துவிட்டு தன்னந்தனியே எங்கோ பட்டிக்காட்டில்போய் கஷ்டப்படுகிறாரே. ஏன் அவ ருக்கு இந்தப் பிடிவாதம்?" இப்படி எண்ணியெண்ணி உரு கிக் கொண்டிருந்த அவள் எவ் வளவு நேரம் அப்படியிருந் தாளோ தெரியாது. பக்கத்தி லிருந்த மீனு 'அம்மா' என்று கூப்பிட்டதும்தான் நினைவு வந் தவளாக கையிலிருந்த கடிதத் தைப் பிரிக்கலானாள்.

கடிதம்

அன்புள்ள மைத்துனி பாரி ஜாதத்திற்கு: நீண்டகாலத் திற்குப் பின்பு இக்கடிதத் தை எழுதுகிறேன். இவ்வ ளவு காலமும் விவரமான கடிதம் எழுதவில்லையே என்று என்மீது குறை எண் ணவேண்டாம். எழுதவேண் டிய சந்தர்ப்பம் ஏற்பட வில்லை. அதனால் எழுத வில்லை.

நான் கொழும்பைவிட்டுப் புறப்படுகையில் சம்பனூர் தோட்டத்திற்கு போவதாக உங்களிடம் சொல்லிவிட்டுப் புறப்பட்டேன். ஆனால் பாதி வழியில் என் திட்டத்தை மாற்றிக் கொண்டேன். "பிறர் தீது வைத்ததை அனுபவிக்க வேண்டும் என்ற வாஞ்சை எனக்கில்லை. நானே சம்பாதித்து நானே வாழவேண்டும். இதன் காரணமாக உங்கள் ஆஸ்திகளை எதிர்பார்க்கவில்லை" என்று மாமாவின் மரணப்படுக்கை அருகில் வீருப்புப் பேசிய நான் திரும்பவும் அவருடைய அன்பளிப்பானதோட்டத்துக்குள் குடியேறுவது கேவலமல்லவா?

அதனால் அங்கு போவ தில்லையென்று முடிவு செய் தேன். என் முடிவை உங்கள் வியாபார மனேஜருக்கும் எழுதித்தெரிவித்து தோட்ட நிர்வாகத்தை மாமாவின் ஏனைய சொத்து நிர்வாகங் களோடும் சேர்த்துக் கொள் ளுமாறு பணித்தேன். அதன் படியே காரியம் நடைபெற் றது என்பதை அறிந்து மகிழ் வுற்றேன்.

இப்போது நான் ஒருகுக் கிராமத்தில் வாழ்க்கை நடத்துகிறேன். என் கையில் இருந்த பணம் எல்லாம் கரைந்துவிட்டது. இக்கிரா மத்தில் நான் செய்து சம் பாதிக்கக் கூடிய வேலை எது வும் இல்லை. ஆங்கிலம் படித்துவிட்டால் பேனை ஒட் டிப் பிழைப்பதைவிட வேறு என்ன தொழில்தான் செய்ய முடிகிறது?

எனவே கொழும்பில்தான் ஏதாவது வேலை தேடலாம் என்று எண்ணுகிறேன். பல இடங்களுக்கு விண்ணப்பம் போட்டிருக்கிறேன். எங்கா வது வேலை கிடைத்தால் கொழும்புக்கு வந்து உங் களையும் பார்க்கிறேன். சௌக்கியமாய் இருப்பீர் கள் என்று நம்புகிறேன்

உங்கள் அத்தான்
மனோகரன்

இக்கடிதத்தைப் பார்த்ததும் பாரிஜாதத்திற்கு அளவிட முடி யாத துக்கம் ஏற்பட்டது. அவ ளுக்கு ஏற்பட்ட மனக்கஷ்டத் தை அடக்க சற்று நேரமாவது தனிமையாக உட்கார்ந்திருக்க வேண்டும்போலிருந்தது. மற் றக் கடிதங்களைத் திறந்துகூட அவள் பார்க்கவில்லை. சற்று நேரம் கடந்து கடற்க ரையை நோக்கி நடக்கலா னாள். அங்கு தனிமையான ஒரு இடத்தில் உட்கார்ந்தாள். மாலைச் சூரியன் செவ்வொளி பரப்பிக்கொண்டிருந்தான். சீறியெழுந்து விழுந்துகொண் டிருந்த கடலலைகள் அவள் நெஞ்சத்தின் கொந்தளித்த நிலையைப் பிரதிபலித்தன. இந்த அலைகளுக்கு ஒரு நாள் கூட ஓய்வில்லை; நிம்மதியில்லை; தனக்கு .....?

முன்பு அடிக்கடி அத்தான் மனோகரனோடு கடற்கரைக்கு வந்து அதே இடத்தில் உட்கார் ந்திருக்கும் நினைவு அவளுக்கு ஏற்பட்டபோது அவள் கண் கள் கலங்கின. தன் கண்களை யாராவது பார்த்துவிட்டால் என்ன நினைப்பார்கள் என்ற எண்ணம் ஏற்பட்டதும் அவசர அவசரமாக கண்களைத் துடைத் துக்கொண்டு எழுந்தாள். அவள் பார்வை எதிரே வந்து கொண்டிருந்த இரு உருவங் களின் மீது விழுந்தது. ஒரு வினாடி தன் கண்களையே நம்பவில்லை பாரிஜாதம்! அவளை இவ்விதம் வியப்படை யச் செய்யும் வண்ணம் அங்கு வந்தவர்கள் யார்?

ஒரே மூச்சில் 50 வாழைப் பழங்களை விழுங்கியவர்

கடலூரில் கனகசபேசன் என்பவர் 50 பூவன் வாழைப் பழங்களை ஒரே மூச்சில் உரித்து விழுங்கினார்.

கனகசபேசன் உட்கார்ந்தார்; அவருக்கெதிராக 50 பழங்க ளடங்கிய தட்டு வைக்கப்பட் டது. ஒவ்வொரு பழமாக அவர் எடுத்து தோலை உரித்து எறிந்துவிட்டு 'லபக் லபக்' என்று விழுங்கினார்.

'சுதந்திரன்'
சந்தா விபரம்
1954 ஜனவரி முதலாம் தேதி தொடக்கம்
வருட சந்தா ரூபா 7-50
ஆறுமாத சந்தா ரூபா 4-00

கலையழகு நிரம்பி கண்களுக்கு கவர்ச்சி தந்து
இதயத்துக்கு இன்பம் தரும்
சிறந்த தத்ரூப
போட்டோ ஆல்பம்
பக்கத்துக்குப் பக்கம் பூரணப் பொலிவுற வாய்ந்த விதவிதமான அழகுத்தோற்றம்கொண்ட 33கட்டழகி களின் உண்மைப் படங்கள்.
பாரின் போட்டோ மன்னர்களான 'ஆர்ட் - டி - பியூட்' என்னும் கலைஞர்களின் கைத்திறமை கொண்டது
பாரிலிருந்து முதன் முதலாக இப்போதுதான் வந்துள்ளது.
ஆல்பம் ஒன்றின் விலை ரூ. 10-00
தபால் செலவு சதம் 50.
போஸ்டல் ஆர்டர் அனுப்பிப் பெற்றுக்கொள்ளவும்
V. P. P. கண்டிப்பாகக் கிடையாது
நவலட்சுமி புத்தகசாலை,
136, செட்டியார் தெரு. கொழும்பு.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பட்டினிகிடந்து பசித்தோருக்கு உணவு தந்த

உத்தமி பாத்திமா நாயகி

வியர்வை உலருமுன் கூலிகொடு

என்ற இஸ்லாத்தின் ஓவியமாய்த் திகழ்ந்தார்

நல்லவனுக்கு நாதி-உழைப்பவனுக்கு வாழ்வு இல்லாத சமுதாயத்தில் பாத்திமா பரம்பரை எங்கே?

[வி. எம். இஸ்மாயில்]

ஆற்றிலே மிதந்து வருகிறது ஒரு பிணம்; காற்றிலே பறக்கக்கூடிய அளவு சனத்துப் போன உடம்புடன்! கட்டை போல் காலில் தட்டுப்பட்டது; என்னவென்று தொட்டுப் பார்த்தால், கட்டிய கந்தை – ஒட்டிய வயிறு – உறங்கிக் கிடக்கிறது ஒரு மனித உருவம்! இறந்துவிடுவது தான் சிறந்த வழியெனக் கருதித் தன் வயிற்றில் பிறந்த வைடூரியத்தைப் பொங்குகின்ற கங்கையிலே எறிந்துவிட்டுத் தான் இறக்கப் போகும் தற்கொலைப் பெரலஸ்ராள் பிடிபட்டுக் கோட்டிலே—குற்றவாளிக் கூண்டிலே நிற்கிறாள் உதிரம் வற்றிய உடலுடன் ஒரு பெண்! இருட்டு நேரத்தில் திருட்டுத்தனமாக அரிசி மூட்டையை அபகரித்ததாகச் சுட்டிக்காட்டுகிறது குற்றப் பத்திரிகை கூண்டிலே நிற்கும் குமரனை!

ஏனிவர்கட்கு இந்தக் கதி? விதி செய்த சதியா என்று கேட்கிறீர்களா? காரணம் உண்ண உணவு இல்லை. கோரப் பசி தன் கொடிய வாயைப் பிளந்துவிட்டது. ஆற்றிலே எறிந்தாள், ரோட்டிலே கிடந்தான், குழந்தையை எறிந்தாள், திருடினான். இது போன்ற இன்னும் எத்தனையோ சம்பவங்கள் நடந்திருக்கின்றன; நடக்கின்றன. இத்தனைக்கும் காரணம் பசி. காண்கின்றோம் கண்ணால்; படிக்கின்றோம் பத்திரிகையில். ஆனால் விலாப்புடைக்க உண்டுவிட்டுச் சீரண மருந்து தேடுகிறான் ஒரு சீமான்! யானை போல் அடியெடுத்துவைக்க முடியாமல் மெலிவு மருந்து வேண்டுமாம் ஒரு மேதாவிக்கு!

ஆலையிலே ஓலம்பாடி-மாட்டுப் பண்ணையிலே காட்டு மிருகத்திலும் கேடாக நடாத்தப்பட்டு-காடுகளைக் களனியாக்கி மாடு போல் உழைத்து – மலைநாட்டுத் தோட்டங்களிலே சிலை போல் வளைந்து – ஆழ்கடலில் மூச்சடக்கி முத்தெடுத்து — மங்கையர்களின் அங்கங்களை அலங்கரிக்கும் தங்கத்தைத் தரையினுள் இருந்து தோண்டி எடுத்து இன்னும் இது போன்ற எத்தனையோ முயற்சிகளில் முதலாளிகள் உழைப்பாளிகளின் உதிரத்தை அட்டைபோல் உறிஞ்சியெடுத்த பணத்தையெல்லாம் தானே பெட்டியுள் பூட்டி வைத்திருக்கிறார்கள். நலிவுற்று நடைப் பிணங்களாய்த் திரியும் நல்லவர்களுக்கு வேலை கொடுத்தால், உழைப்புக்கேற்ற ஊதியம் உழைத்தவர்களுக்குக் கொடுத்தால் நாட்டிலே பஞ்சமும், பட்டினியும் ஏன் வரப்போகிறது?

"தொழிலாளியின் வியர்வை
உலரமுன்
கூலியைக் கொடுத்துவிடுங்கள்"

என்று கூறும் நபி பெருமானாரது திரு உரையைச் சீமான்கள் சிந்தையிலிருத்திச் செயலாற்ற வேண்டும். இல்லாதவனுக்கு உள்ளவன் தன்னிடம் இருக்குமளவும் கொடுத்துண்ணவேண்டும் என்று இஸ்லாம் கூறும்போது உடமைத் தத்துவத்துக்கு ஆதாரமாக நபி பிரானது அருந்தவப் புதல்வி பாத்திமா நாயகியின் வாழ்க்கையில் நடந்த ஒரு சிறு சம்பவத்தைப் பார்ப்போம். "தாய் எட்டடி பாய்ந்தால் கன்று பதினாறடி பாயும்" "புலிக்குப் பிறந்தது பூனையாகுமா" என்ற அழியா மொழியை நிலைநாட்டி இருக்கிறார் பாத்திமா நாயகி.

பாவையர் திலகம் பாத்திமாவுக்குத் தோன்றி வரும் பால் நிலவுபோன்று இரு பாலகர்கள் பிறந்திருந்தனர். மதுரமான மழலை மொழிபகரும் குழவிகள்—மாதாவோடு கொஞ்சி விளையாடும் அஞ்சொல் கிளிகள் – அழகு மணி மாளிகையாம் இஸ்லாத்துக்கு மெருகூட்ட வந்த அரியேறுகள், அம்மாவின் எழில் முகமும் விழிகளிலே நீர்வழிய – ஏறணைய அப்பாவின் உருமாறிப் பொறியழிய-வியாதியால் பாதிக்கப்பட்டு, வேதனைதரும் நிலையில் படுக்கையில் கிடந்தனர். தாங்குமா பெற்ற உள்ளங்கள்? அலறும் அலையென ஆட்டங்கொடுத்துக் குமுறும் எரிமலையெனக் கொந்தளித்தன. சாடி இருந்த வைத்தியர்களை நாடினர். ஆண்டவன் பக்கம் ஆழ்ந்து ஆராதனை செய்தனர். சேய்களின் நோய் தீர்ந்தால் நோன்பிருப்போம் என நேர்ச்சை செய்தனர். பாலர்களும் பழய நிலையடைந்தனர்.

நீலவானிலே நீந்திக்கொண்டிருந்த பகலவன் – இருள்மயமாயிருந்த உலகை அருள்மயமாக்கிக் கொண்டிருந்த ஆதவன் வேதனை தும்பிய முகத்தோடு மேற்குத் திசையிலே மறைந்துகொண்டிருந்தான். நீலவானம் நிறம் மாறிக் கருத்தைக் கவரும் வகையில் காட்சி தந்தது. உலகைக் காக்க வந்த உத்தமர்களான உழவர்கள் களனியிலே வேலைசெய்து களைப் புற்றவண்ணம் வீடு சென்றனர். உலகை இருள் கவ்விக்கொண்டது. பாத்திமத்து ஜஹ்ரூவும், ஹஸ்ரத் அலியும் விரதத்தை முடித்துத் தண்ணீர் பருகிவிட்டு ஆகாரம் உண்ண அமர்ந்தனர். ரொட்டித் தட்டிலே கைகள் முட்டப்போகும் நேரத்தில் தீனக் குரலொன்று காதுகளில் ஒலித்தது. ஓட்டமாக வந்து பார்த்தார் பாத்திமா. கலை யிழந்த முகம்; குழிவிழுந்த விழிகள்; ஒட்டிய வயிறு; கட்டியிருப்பதோ கணுடி பதித்தாற் போன்று எண்ண முடியாத ஓட்டைத் துணி; தாரைவிடக் கார் நிறமான உடல்; எலும்போடு ஒட்டிய தசை. இந்த லட்சணத்தில் தாமரைத் தண்டென்ன துவண்டு கொண்டிருந்தது ஒரு உருவம். பாத்திமாவின் கருணை யுள்ளம் கலங்கியது, கண்களிலிருந்து நீர் மல்கியது அந்த நாதியற்ற நல்லவனைக் கண்டதும். "அம்மா வயிற்றுப் பசி தாங்க முடியவில்லை! என் வீட்டிலே அடுப்பெரிந்து ஐந்து நாட்களாகின்றன! நீங்கள்தான எங்களைக் காப்பாற்றவேண்டும்!" என இரந்தான். "இந்தப் பஞ்சை கஞ்சிகூட இல்லாமல் கஷ்டமுறும்போது நாம் இந்த ரொட்டியை உண்டு திருப்திப்படலாமா?" என்ற பாத்திமாவின் கூற்றுக்கு அலியும் மனமொப்பினர். தாங்கள் உண்ண இருந்த ரொட்டி முழுவதையும் கொடுத்தனுப்பிவிட்டுப் பட்டினி கிடந்தனர் அன்றிரவு.

உணவு உண்ட நேரமோ இரவு மூன்றுமணி. பசி உடம்பை வாட்டிய பகலெல்லாம் ஒன்றும் புசிக்கவில்லை. புசிக்கவும் முடியாது. ஏன் தண்ணீர்கூட அருந்த முடியாது. இருந்த ரொட்டியையும் கொடுத்துவிட்டால் அடுப்பெரியவும் வேறு ஏதாகிலும் உணவுமில்லை. மறுநாளும் தவறுது நோன்பிருக்க வேண்டும். இந்நிலையில்தான் அந்தப் பஞ்சைக்கு இந்த ரொட்டியை ஈந்துவிட்டு நெஞ்சம் குளிர்ந்தனர்.

நாமென்றால் இந்நிலையில் செய்வோமா. இராப்பார்க்கு இல்லையெனச் சொல்லாது இரங்கும் வள்ளல் நபியவர்களின் பெருமைக்குரிய திருமகளல்லவா. தந்தையின் செய்கை தன் மகளிடம் இல்லாமல் போகுமா. ஒன்றுமே இல்லாத நேரத்திலும் உண்ண இருந்ததை ஈந்தார்கள். பணக்காரப் பெண்மணிகள் நாட்டின் கண்மணிகளாவது எக்காலமோ. பிறரைச் சுரண்டி வாழும் கோணல்மதி படைத்த கொடியருலகமே! இனியாவது உனது கொடிய செயலை நிறுத்திக் கொள்.

"பார்த்தூண் மரீஇ யவனைப்
பசியென்னும்
தீப்பிணிதீண்டல் அரிது"

என்ற தமிழ்மறையின் திரு உரைக்கு உரைகல்லாக மிளிரும் பாவையர் திலகம் பாத்திமா நாயகியை நம் பெண்மணிகள் இனியாவது பின்பற்றட்டும். அடுத்தநாள் பட்டினி நோன்பு நோற்றனர் இருவரும், காகங்களெல்லாம் இராகம் பாடிக்கொண்டு உறையுமிடங்களுக்கு விரைந்து சென்றன. ஒளியென் அருள் பரப்பி பகலெல்லாம் உலகைக் காவல்புரிந்த பானுவும் இருளுக்கு இடம் கொடுத்தான். கவிஞர் உள்ளத்துக்கும், காதலர் உள்ளத்துக்கும் களிப் பூட்டும் வானத்தின் வனப்புமிகுந்த காட்சியைக் கண்டதும் பாத்திமா-அலி இவர்களதுஉள்ளங்களும் பொங்கி வடிந்தன; உணவு உண்ணும் நேரம் அண்மிவிட்டதை எண்ணி இருக்காதா? இரு நாட்கள் உணவு உண்ணவில்லையே.

முன்போலவே ரொட்டியை நோக்கி உணர்ச்சியோடு ஒடிக் கொண்டிருந்தன இரு கைகள். சப்தமொன்று பொத்தென்று வந்து விழுந்தது. முதல் நாள் கேட்ட அதே ரீதியில்! ஆனால் இரண்டு இளங் குரல்கள் ஒலித்தன. கைகள் வாபஸ் வாங்கிக் கொண்டன. ஒடிவந்து பார்த்த போது இரு பச்சிளம் குழந்தைகள் பார்க்கப் பரிதாபமான தோற்றத்துடன் நின்று கொண்டிருந்தனர். எதிர்கால உலகைக் காக்க வந்த இளஞ் சிங்கங்களின் தங்க நிகர் மேனியை பொங்கி வடியும் கண்ணீர் அருவி நனைத்துக்கொண்டிருந்தது. நேற்றுவந்த அந்த மனிதனுடைய அதே இலட்சணத்தில் காட்சியளித்தார்கள் அந்த இரு குழந்தைகளும்.

பாத்திமாவின் கனிவான கருணை [illegible]

இல்லை. அதுதான் அவர்கள் பரம் பரையின் அகராதியிலே காண முடியாதே இல்லாத போதே இப்படி ஈந்தால் உள்ளபோது எப்படி இருக்கும். வரப்பு கட்ட முடியுமா? நம் போன்ற சுயநலம் விரும்பிகளால், உழைப்பவனுக்கே கொடுக்க மறுக்கும் உலுத்தர் கூட்டம் உணர்ந்து நடக்குமா என்பதுதான் கேள்வி.

முகம்மதுகளும், பாத்திமாக்களும், அலிகளும் இன்றைய உலகில் இருந்தால் அதன் நிலையே வேறு.

"இரத்தலின் இன்னது
மன்ற நிரப்பிய
தாமே தமியர் உணல்"

என்ற வள்ளுவரின் திருமொழிக் கிணைய உலகம் நடத்தும்காலம் எப்பொழுதுதான் வருமோ! மூன்றும் நாள். மாலைப்பொழுது மகிழ்களிடையே மறைந்தது. அவர்களுடைய நேர்ச்சையும் பூர்த்தியாகியது. பாத்திமாவும், அலியும் பழயபடி தங்களது எளிய உணவாகிய ரொட்டியை உண்டனர். ஊசலால் சோடிக்கப்பட்டிருந்த அவர்களது உடல் சிறிது தெம்படைந்தது. மகளின் செயலறிந்த மகான் முகம்மது (ஸல்) அவர்கள் ஆனந்தசாகரத்தில் மூழ்கினர்கள்.

"என்றபொழுதிற் பெரிதுவக்கும்
தன்மகனைச்
சான்றோன் எனக் கேட்ட தாய்"

இந்நிலைக்கும் நபிபிரானது அன்றைய மனநிலைக்கும் என்ன வித்தியாசம்.

அமிர்தா வாய்வு சூரணம்

இது சகலவிதமான வாய்வு தொந்தவு, வயிற்றுவலி, புளிச்ச ஏப்பம், வாந்தி, அஜீரணம், இடுப்புவலி, முதுகுவலி, பரியின்மை, சூதக வயிற்றுவலி, இருமல், இளைப்பு, ஆஸ்த்மா முதலிய வியாதிகளுக்கு நிச்சய நிவாரணி. கர்ப்பஸ்திரீகளுக்கோர் நல்ல மருந்து.

டின் விலை ரூ. 2-00. தபால் செலவு வேறு.

நேத்திரா அமிர்த தைலம்

இதை நாள்தோறும் பாவித்துவந்தால் பீனிசம், ஒருத்தலைவலி, பித்தக் கிறுகிறுப்பு, தூக்கமின்மை, மாலைக்கண், கண் கூச்சல், கண்ணெரிச்சல், நீர்வடிதல் முதலிய வியாதிகள் சுகமாகும். அளவுக்கு மிஞ்சிய உஷ்ணத்தைத் தணிக்கும். கண்களுக்குப் பிரகாசத்தையும், கூந்தலை அழகாகவும், கறுப்பாகவும் வளரச் செய்யும்.

12 அவுன்ஸ் புட்டி விலை ரூபா 4-50.
6 அவுன்ஸ் புட்டி விலை ரூபா -50.

தபால் செலவு வேறு.

T. K. (டி. கே.) "மார்க்" இருக்கிறதா என்பதைப் பார்த்து வாங்குங்கள்.

செல்லராஜா அன்கோ,

பாக்கியலெக்ஷ்மி வைத்தியசாலை

170, செட்டியார் தெரு, கொழும்பு.

பெண்களுக்கு ஓர் மகா சஞ்சீவி

கெர்ப்பத்தை உண்ணும் ஆறுவித நோய்கள்

அவைகளின் குணங்கள்

1 உடம்பில் உஷ்ணம் அதிகரித்து கருக்குழியில் வாய்வு குடிகொண்டு சூதகக்கட்டித் திரண்டு உதிரமெங்கும் சிசுபோல் புரண்டு வலிக்கும், திரேகம், பெலம், அழகு கெடும்.

2 அடிவயிற்றிலுதிரந் திரண்டு வலியம்போல் வலித்து பெருகும்; முதுகு வலிக்கும்.

3 வயிற்றில் சூதகம், கட்டி, வயிற்றுவலி, தலைவலி, கால் அசதி, மலம் கட்டும், திரேகம் மெலியும், சூதகம் வெளியானல் இவைகள் நிற்கும்.

4 சூதகத்தில் வாய்வும் சூடும் சேர்ந்து மாதவிடாய் கட்டி, தேகம் வீங்கி, மூலச்சூடு, சூதகம் தங்கும், தலைவலி, வயிற்று பொருமல், சூதகம் வெளியாகும்போது அடிவயிறு வலிக்கும்.

5 ஸ்திரிபோகம்செய்யும்போது கெர்ப்பப்பைக்குள்வாய்வு தங்கி, அதனால் இரத்தமும், சலமும் தடைபட்டு இடுப்பும், காலும், துடையும், உழையும், நீர்வடியும்.

6 அடிவயிற்றில் நாள்பட நாள்பட, வயிற தி ரண் டு புரண்டு வலிக்கும். இந்த ஆறுவிதமான வியாதிகளுக்கும்

"கெர்ப்பக்கோள் நிவாரணியை"

உபயோகிக்க எல்லாக் கஷ்டங்களும் நீங்கி திரேகபலம், அழகு குதூகலமான **"இன்ப வாழ்க்கையை"** அடைவீர்கள்.

புட்டி விலை ரூ. 7-00. வி.பி.பி. செலவு வேறு.

சிலோன் சோல் ஏஜண்ட்:

சென்ற்மேரி வைத்தியசாலை,

201, செட்டியார் தெரு, கொழும்பு-11.

ஆனந்தா லேகியம்

இதன் குணத்தை ஒரே நாளில் அறிந்துகொள்ளலாம்.

நிர். 174, ஆனந்தா வைத்தியசாலை என்ற விலாசத்தைப் பார்த்து வாங்குங்கள்.

ஆனந்தா லேகியம் நாள்தோறும் மலஜலத்தை சுகமாகக் கழித்து, அசதி, சோம்பல், மேல், கால், கை கணுக்களில் வலி, அஜீரணம், பசியின்மை, பித்தவாய்வு, புளியேப்பம், வயிற்றுப் பொருமல், வயிற்று வலி, இடுப்பு வலி, நெஞ்சு வலி, சிரங்து, பற்றுகள், சொறி, தேமல், நெஞ்சு எரிவு, திரேகம் காக்கல், கண் எரிச்சல், உள்ளங்கால் கை எரிச்சல், வாய்வுக்குத்து நெஞ் சடைப்பு, சகலவித வாய்வுகள், வாதக்கடுப்புகள் முதலிய அநேக வியாதிகள் தீரும். சிலகாலம் சாப்பிட்டுவந்தால் மூலவியாதி அடியோடு தொலைந்துபோகும். பத்தியமில்லை.

பெரியது ரூ. 5-75 சிறியது ரூ 3-00

இத்துடன் **"ஆனந்தா தைலத்தை"** உபயோகித்து வந்தால் அதிக உஷ்ணம், கண் எரிச்சல், மூலச்சூடு, பித்த மயக்கம், கைகால் எரிவு முதலான அநேக வியாதிகளை நீக்கி மூளைக்கு குளிர்ச்சியையும் கண்ணுக்குப் பிரகாசத்தையும் கொடுக்கும். சகல வியாதிகளுக்கும் விபரம் வேண்டிய கேட்டால் இலவசமாக அனுப்புவோம்.

பெரியது ரூ. 5-50. சிறியது ரூ. 3-00. வி.பி.பி. செலவு வேறு

புரோப்ரைட்டர்: எம். பொன்னையா

ஆனந்தா வைத்தியசாலை

நிர். 174, செட்டியார் தெரு. கொழும்பு.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சுதந்திரன்
SUTANTIRAN
1954 ஜனவரி மீ 10 ஒ
194 ஏ, தட்டா தெரு. போன்: 3411.

நாடும் மொழியும் நமது கண்கள்

ஒரு இனம் தனது பண்புகள் அனைத்தையும் பாதுகாத்துக் கொண்டு சுயாதீனமாக வாழவேண்டுமானால் அந்த இனமக்கள் வாழ்வதற்கென்று ஒரு பிரதேசம் இருக்கவேண்டும்; அந்த இனமக்கள் பேசுவதற்கென்று ஒரு மொழியிருக்கவேண்டும்.

பேச மொழியும் வாழ இடமும் இல்லாத எந்த இனமும் தன்னுடைய சிறப்பான தனிப்பண்புகளை ஒருபோதும் பாதுகாத்து வாழ முடியாது. அதுவும் அண்டையிலிருக்கும் அன்னியர் பெரும்பான்மையினராகவும் அவர் பேசும் மொழி அரசியல் மொழியாகவும் அமைந்துவிட்டால் கேட்கவேண்டியதில்லை; இனம் அழிந்தொழிய வேண்டியதுதான்.

இலங்கைவாழ் தமிழ் பேசும் இனம் இன்று தனது மொழியையும் தான் வாழும் நாட்டையும் பரிபூரணமாகப் பறிகொடுக்கும் நிலையில் இருக்கிறது. தமிழ் பெருங்குடிமக்கள் சந்ததி சந்ததியாக வாழ்ந்து வந்த வடக்கு கிழக்கு மாகாணங்களை சிங்கள அரசாங்கம் திட்டமிட்ட சிங்களக் குடியேற்றத்தின் மூலம் ஆக்கிரமித்து வருகிறது. அல்லைத் திட்டம் கல்ஓயாத் திட்டம் என்று நாளிலும் பொழுதிலும் தமிழ் மக்கள் வாழும் பிரதேசம் அங்குலம் அங்குலமாகப் பறிபோய்க்கொண்டிருக்கிறது.

மொழிக்கும் இதே கதிதான். தமிழ் மொழி படிப்படியாக ஒதுக்கப்பட்டு வருகிறது. சிங்கள அரசியல் தலைவர்கள் தமிழ் பேசும் மக்களைப் பார்த்து—முஸ்லிம் சகோதரர்களைப் பார்த்து—சிங்களம் கற்றுக் கொள்ளுங்கள் என்று போதித்து வருகிறார்கள். சிங்களம்கற்று சிங்களவர்களாக மாறிவிட்டால் இந்த நாட்டில் சகல உரிமைகளும் சலுகைகளும் தருகிறோம் என்று மலைநாட்டுத் தமிழருக்கு ஆசைகாட்டி வருகிறார்கள். அப்படியே சில பகுதிகளில் விஷயமறியாத தமிழ் மக்கள் சிங்களம் கற்றும் வருகிறார்கள்.

"தமிழுக்கும் தமிழருக்கும் கேடு விளையுமானால் தோளோடு தோள் நின்று போராட நான் தயங்கமாட்டேன்" என்று வீரமுப்புப் பேசிய தலைவர்கள் எல்லாம் இதைப் பார்த்தும், கேட்டும், பதவியில் பசை வைத்து ஒட்டியதுபோல் ஒட்டிக்கொண்டுதான் இருக்கிறார்கள். இலங்கையின் அரசியல் மொழி சிங்களமும் தமிழும் என்று கொள்கையில் ஏற்கப்பட்டிருந்தால் தமிழ் பேசும் முஸ்லிம்களைப் பார்த்து "தமிழ் உங்களுக்கு அன்னிய பாஷைதானே. நீங்கள் ஏன் சிங்களம் கற்றுக்கொள்ளக் கூடாது?" என்று ஒரு நாட்டின் பிரதமர் தூண்டுவது சரியா? பிரதமரைப் பார்த்து "உங்கள் செய்கை சரியா?" என்று கேட்பதற்கு தோளோடு தோள் நின்று போராடத் தயங்காத தலைவர்களுக்கு முதுகெலும்புண்டா?

தமிழுக்கும் தமிழ் மக்கள் வாழும் பிரதேசங்களுக்கும் ஆபத்து ஏற்பட்டு வருவதன் காரணமாக தமிழினத்தின் அழிவு சமீபித்துவிட்டது என்று தீர்க்கதிருஷ்டியுள்ள அரசியல் அவதானிகள் கவலையோடு கூறிவருகின்றனர். உணரக் கூடிய பொதுமக்கள் இவர்களுடைய கூற்றை உணர்ந்து உத்வேகத்தோடு காரியம் ஆற்றவும் முற்படுகிறார்கள். இதற்கு உதாரணமாக கடந்த வாரம் கொழும்பு கப்பித்தாவத்தை ஸ்ரீபால விநாயகர் ஆலயத்தில் கூடிய தமிழ் பிரபலஸ்தர்களின் கூட்டத்தையும் அவர்கள் செய்த மிக முக்கியமான தீர்மானத்தையும் குறிப்பிடலாம். இதன் விவரத்தை நமது அரசியல் விமர்சகர் பிறிதோர் இடத்தில் கூறுகின்றார்: கப்பித்தாவத்தைக் கூட்டம் நடத்தியவர்களையும் அவர்கள் செய்த தீர்மானத்தையும் நாம் பெரிதும் வரவேற்றுப் பாராட்டுகின்றோம்.

ஆபத்தை உணரக் கூடியவர்கள் இப்படியாக ஒரு புறம் விழிப்புணர்ச்சி பெற்று வருகையில் மறு புறம் சிலர் இன்னும் ஒத்துழைப்புக் கீதம் பாடிக்கொண்டு வருகின்றனர். இந்த நாட்டில் சிங்கள மக்களும் தமிழ் மக்களும் ஒற்றுமையாக வாழவேண்டும் என்று ஏதோ தாங்கள்தான் ஒரு அரிய பெரிய காரியத்தைக் கண்டு பிடித்துச் சொல்வதுபோல் பொதுக் கூட்டங்களிலும் வரவேற்புக் கூட்டங்களிலும் விளாசுகின்றனர். இங்குள்ள சிங்கள மக்களுக்கும் தமிழ் மக்களுக்குமிடையில் சுமுகமான ஐக்கிய பாவமும் ஒத்துழைப்பும் நிலவவேண்டும் என்பதை யாரும் ஆட்சேபிக்கவில்லை. அந்த ஒத்துழைப்பு பரஸ்பரம் சரி சமமான அந்தஸ்தில் ஏற்படும் சகோதர ஒத்துழைப்பாக இருக்கவேண்டுமே ஒழிய ஆண்டான் அடிமை ஒத்துழைப்பாகவோ, எஜமானிடம் வேலைக்காரன் காட்டும் ஒத்துழைப்பாகவோ இருக்கக் கூடாது.

இலங்கையில் தமிழ் மக்கள் சிறுபான்மையினர். சிங்கள மக்களோ பெரும்பான்மையினர். அவர்களுடன் எப்படியாவது ஒத்துழைத்தால்தானே தமிழ் மக்கள் தங்கள் தேவைகளைப்பெற முடியும் என்று அறியாமையினால் ஒரு சிலர் வாதிக்கின்றனர். ஒத்துழைப்பென்பது இரண்டு பகுதியிலுமிருந்து வரவேண்டும். ஒரு பகுதியினர் தங்கள் விருப்பப்படி எதேச்சாதிகாரமாக உச்சாணிக் கிளையிலே ஏறிக்கொண்டேபோக மற்றவர் அவர்களுடைய பாதங்களைத் தாங்கிக் கொண்டேயிருப்பதென்பது ஒத்துழைப்பாகாது. அது வடிகட்டிய அடிமைத் தனமாகும். மேலும் பெரும்பான்மையினரிடமிருந்து சிறுபான்மையினர் தங்கள் நியாயப் பூர்வமான உரிமைகளைப் பிச்சையெடுப்பதற்காக தாய் மொழியையும் குடியுரிமையும் விலைகூறி விற்றுவிட முடியாது. அப்படிச் செய்வது கண்ணிரண்டும் விற்று சித்திரம் வாங்கும் பேதமையை ஒக்கும். வாழும் நாடும் பேசும் மொழியும் ஒரு இனத்தின் இரு கண்களாகும்.

இப்படியானவர்களைப் பார்த்துத்தான் மகாகவி பாரதியார் "கண்ணிரண்டும் விற்று சித்திரம் வாங்கினால் கைகொட்டிச் சிரியாரோ" என்று பாடினார். அவருடைய இந்த அடிகளின் பொருளை இவ்வெளியீட்டின் பிறிதோரிடத்தில் தமிழ் அறிஞர் கி. ஆ. பெ. விசுவநாதம் நன்கு விளக்கியிருக்கின்றார். நேயர்கள் படித்துணர்வார்களாக!

மலைநாட்டுத் தமிழர்களைப் பிடித்து நாடுகடத்த மற்றொரு சதி

ஒவ்வொரு இந்து ஆலயமும் ஒரு தமிழ் பாடசாலையாகவேண்டும்

-திரு. வி. நல்லையா

[சுதந்திரன் அரசியல் விமர்சகர்]

ஜனவரி பிறந்துவிட்டது. 16-ந் தேதி நெருங்கிக் கொண்டிருக்கிறது. இலங்கைப் பிரதமரும் இந்தியப்பிரதமரும் சந்திக்கப்போகின்றனர். இலங்கையிலுள்ள மலை நாட்டுத் தமிழரின் பிரச்னை கலந்தாலோசிக்கப்படப்போகிறது. சமரஸமான முடிவு எதிர்பார்க்கப்படுகிறது—இப்படியெல்லாம் பத்திரிகைகளில் செய்திகள் பிரமாதப்படுகின்றன. பிரதமர்கள் சந்திக்கலாம்; பேச்சுக்கள் நடைபெறலாம், ஆனால் முடிவு என்ன ஆகும் என்பது தான் கேள்வி.

இந்தியப் பிரதமர் இலங்கைப் பிரதமர் ஒருவரைச் சந்திப்பது இதுதான் முதல் தடவையல்ல. இதே பிரச்னை மீது நேரு, காலஞ் சென்ற பிரதமர் திரு. டி. எஸ். சேனநாயகாவைச் சந்தித்திருக்கிறார். இதே பிரச்னை மீது அவர் மகன் திரு. டட்லி சேனநாயகாவை லண்டனில் சந்தித்திருக்கிறார். ஆனால் காரியம் ஒன்றும் ஆகவில்லை. இப்போது பிரதமர் சேர் ஜோன் கொத்தலாவலையைச் சந்திக்கப் போகிறார்.

எத்தனை பிரதமர்கள் வேண்டுமானாலும் எத்தனை முறையும் சந்திக்கலாம். ஆனால் சந்திக்கும் பிரதமர்களின் மனோநிலையில்தான் பலாபலன் தங்கியிருக்கிறது.

மலைநாட்டுத் தமிழர்களின் பிரச்னை சட்டத்தைப் பிளந்து முடிவு கட்டக் கூடிய ஒரு பிரச்னை அல்ல. அல்லது தர்க்க வியாகரணங்களின் மூலம் விடுவிக்கக் கூடிய ஒரு முடிச்சு அல்ல. இது இலங்கை ஆட்சியாளர் மனிதாபிமானத்துடன் தீர்க்க வேண்டிய ஒரு பிரச்னையாகும். எனவே இந்தப் பிரச்னை விடுபடுவதற்கு இலங்கை ஆட்சியாளரின் அடிப்படைக் கொள்கை என்ன என்பதை அறியவேண்டும். இந்த அடிப்படைக் கொள்கையில் அவர்களுக்கு மனமாற்றம் ஏற்படவில்லையென்றால் எத்தனை சந்திப்புகளும், எத்தனை வட்ட மேசை மகாநாடுகளும் ஒரு பயனும் அளிக்கப்போவதில்லை.

இலங்கை அரசாங்கத்தின் அடிப்படைக் கொள்கை மலைநாட்டுத் தமிழ் மக்களை வாக்குரிமை பிரஜா உரிமையற்ற அனுதைகளாக்கி இந்த நாட்டில் உள்ள மிகப் பெரிய சிறுபான்மையினரான தமிழ் பேசும் மக்களின் பலத்தைக் குறைக்க வேண்டும் என்பதுதான். இந்த அடிப்படைக் கொள்கையிலிருந்து வேறுபட்டு தமிழ் பேசும் மக்களுக்கும் இந்த நாட்டில்சரிசமமான உரிமையும் அந்தஸ்தும் வழங்குவதுதான் நியாயமானது என்று அவர்கள் முடிவு கட்டிய அன்றுதான் மலைநாட்டுத் தமிழர்களின் பிரச்னைக்கு விடிவு காலம் ஏற்படும்.

சிங்கள அரசியல் வாதிகள் இப்படியான ஒரு பரந்த நோக்கத்தோடு நடந்து கொள்வார்கள் என்று எதிர்பார்ப்பதற்கு கொஞ்சம் கூட இடமில்லை. இன்றைய பிரஜா உரிமை வாக்குரிமைச் சட்டங்களை காலஞ் சென்ற பிரதமர் திரு. டி. எஸ் சேனநாயகா ஒரு குறிப்பிட்ட நோக்கத்துடனேயே கொண்டு வந்தார் என்பதை இன்று அதிகாரத்திலிருக்கும் கோஷ்டி நன்கறியும். இந்த கோஷ்டி அரசாங்க அதிகாரத்திலிருந்து விரட்டப்பட்டாலொழிய காலஞ் சென்ற பிரதமரின் நோக்கம் தடை படப் போவதில்லை என்றே விஷயமறிந்த அவதானிகள் கருதுகின்றனர். ஒரு பக்கத்தில் சலுகைகள் வழங்கப்பட்டதுபோல் காட்டிக் கொண்டாலும் மறுபக்கத்தில் மலைநாட்டுத் தமிழர்களை நாடுகடத்தி இலங்கைத் தமிழ்ப் பேசும் மக்களின் எண்ணிக்கையைக் குறைக்கவே அவர்கள் திட்டம் வகுப்பர் என்பது திண்ணம்.

மலைநாட்டுத் தமிழ் மக்களைப் பொறியில் அகப்படுத்துவதற்கான இன்னொரு சதி சமீபத்தில் ஆலோசிக்கப்பட்டதாகத் தெரிகிறது.

இந்தியப் பிரஜைகளாகத் தங்களைப் பிரகடனம் செய்து கொள்ள விரும்புவோர்களுக்கு பல மாதிரியான சலுகைகளை உவந்தளிப்பதாக ஆசைகாட்டி அவர்கள் அந்த ஆசை வலையில் சிக்குண்டால் பின்பு அவர்களை இந்தியப் பிரஜைகள் என்று நிரூபித்து விடுவதுதான் இந்த சதியாகும்.

அதாவது இலங்கையிலுள்ள மலைநாட்டுத் தமிழ் மக்களில் யாராவது தாங்கள் இலங்கைப் பிரஜைகள் அல்ல வென்றும் தாங்கள் இந்தியப் பிரஜைகளேயென்றும் இந்தியத் தூதுவர் திரு. ஸி. ஸி. தேஸாயிடம் பதிவு செய்து கொண்டால் அவர்கள் (1) இந்தியாவிலுள்ள தங்கள் இனபந்துக்களுக்கு எதுவித கட்டுப்பாடுமின்றிப் பணம் அனுப்பலாம். (2) இந்தியாவிற்கும் இலங்கைக்கு மிடையில் எப்போது வேண்டுமானாலும் இஷ்டம் போல் போய் வரலாம். (3) நிரந்தரமாக இந்தியாவிற்குப் போய்விட விரும்புபவர்

(9-ம் பக்கம் பார்க்க)

இன்பப் பொங்கல்

"மஹாகவி"

அரும்பிற்றுக் காலை; யன்னல்
அண்டையிற் சென்றேன்; அந்த
மருந்துக்கும் சிறந்த காற்று
வரவில்லை! கறுத்து யர்ந்த
கரும்பொத்த யாழ்ப்பா ணத்துப்
பனைகளைக் காண வில்லை!
இரும்பன்றே -இதய முண்டோ
இந்நீண்ட புகைவண் டிக்கு?

"பொருள்தேட என்னை விட்டுக்
கொழும்புக்குப் போன அன்பர்
வருகின்ற வண்டி ஏனே
வரவில்லை இன்னும்?" என்றே
உருகுவாள் மனையாள் வீட்டில்
ஊருகின் றது இவ் வண்டி!
இருள் ஏகிற் றெனினும், ஆனை
இறவின்னும் ஏக வில்லை!

எங்கெங்கோ ல்லாம் நிற்கும்!
கைகாட்டி மரத்தைக் கண்டு
தங்கும்!-இவ் வண்டி என்றன்
தவிப்பறிந் திடுமோ? ஊரில்
செங்கையின் வளை இ னங்கள்
சிணுங்கிட விறகு டைத்துப்
பொங்கலுக் காயத் தங்கள்
புரிவள் இப் பொழுதென் இல்லாள்!

கோலமிட் டிடுவாள்; நேற்றுக்
குத்திய அரிசி யோடு
பாலிவிட் டடுப்பில் புத்தம்
புதிய ஓர் பானை வைப்பாள்;
சேலைதொட் டிழுக்கும் அந்தச்
சிறுமகன் விடான் என் ருலும்,
காலை எட் டளவில் எங்கும்
கமழும் எம் வீட்டுப் பொங்கல்!

திங்களை வானில் கண்ட
திரைக்கடல் போல, அந்த
மங்கையின் மறுவில் லாத
வதனத்தின் எழில் கண் டே, பால்
பொங்கிடும்! இன்ப மாரி
பொழிந்திடும்! கவிதை வெள்ளம்
அங்கெழுந் திடும்அன் றே? இன்(று)
ஆனந்தப் பொங்க லன்றே?

கேட்டுக்கொண் டிருக்கும் சீன
வெடிச்சத்தம்! கிளிக ளைப்போல்
கூட்டுக்குள் அகப்ப டாமல்
திரிகின்ற சிறுவர் கூட்டம்
போட்டுக்கொண் டிருக்கும் கூச்சல்
பொங்கலோ பொங்கல் என்று!
பாட்டுக்குள் அகப்ப டாத
மகிழ்ச்சியைப் பாடப் போமோ?

போயிற்றுத் தென் இ லங்கை!
புகுந்தது நம்ஊர் வந்தும்
ஆயிற்று! வண்டி என்னை
அதிகமாய்ச் சுணக்க வில்லை!
வாயிலில் வந்து நின்றென்
வழியைப் பார்த்் திருக்கும் பெண்ணின்
வாயைப் பார்! முழுதும் முத்தே!
வாழிஇவ் வின்பப் பொங்கல்!

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பௌத்தம் அரசாங்க மதமாக்கப் படுமா?

அறிக்கை சமர்ப்பிக்க கமிஷன் நியமிக்கப்பட்டுள்ளது

ஒருமதத்தை அரசியலில் புகுத்துவது ஜனநாயகத்திற்கு விரோதமானதென எதிர்ப்பு

(நமது நிருபர்)

புத்த மதத்தை அரசாங்க மதமாக்குவதற்கும், இதுசம்பந்தமாக மக்களின் அபிப்பிராயத்தை அறிவதற்கும் 10 பேர்கொண்ட விசாரணை கமிஷன் ஒன்று சமீபத்தில் நடந்த புத்த மகாநாட்டில் நியமிக்கப்பட்டுள்ளதாக நம்பகமான வட்டாரங்களிலிருந்து தெரிய வருகிறது.

இந்த கமிஷன் நாட்டின் பல பாகங்களிலும் சென்று பல தரப்பட்ட மக்களின் அபிப்பிராயத்தை விசாரித்து விரிவான ஒரு அறிக்கையை தயார் செய்யும் என்றும் அறிய வருகிறது.

புத்த மதத்தை அரசாங்க மதமாக்க வேண்டும் என்று சமீபகாலமாக சில வட்டாரங்களில் கிளர்ச்சி ஒன்று இருந்து வருகிறது. இதுசம்பந்தமாக ஒரு விசாரணை கமிஷனை நியமிக்க வேண்டும் என்று இந்த கோஷ்டியினர் அரசாங்கத்தை பலதடவை விண்ணப்பித்திருக்கிறார்கள். என்றாலும் பல மத நம்பிக்கையுள்ளவர்கள் இருக்கும் நாட்டில் ஒரு மதத்தை அரசாங்க மதமாக்குவது நியாயமல்ல என்று அரசாங்கம் இந்தக் கோரிக்கையை மறுத்து வந்துள்ளது.

இப்பொழுதும் இதே கோஷத்தை மீண்டும் கிளப்ப இவர்கள் முன்வந்துள்ளார்கள் கமிஷன் திரட்டும் அறிக்கையை அரசாங்கத்திற்கு சமர்ப்பிப்பதென்றும் அதன் அடிப்படையில் புத்தமதத்தை ராஜ்ய மதமாக பிரகடனப்படுத்து மட்டும் கிளர்ச்சி செய்வதென்றும் இவர்கள் தீர்மானித்துள்ளார்களாம்.

மத ரீதியில் கிளர்ச்சி நடத்தும்போது, லேசாக பெரும் பான்மையினரான புத்த மக்களின் ஆதரவைப் பெறலாம் என்றும், அதன் அடிப்படையில் அரசாங்கத்தை நிர்ப்பந்திக்கலாம் என்றும் இவர்கள் நம்புவதாகவும் சொல்லப்படுகிறது.

இலங்கைக்கு வரும் பிரிட்டிஷ் ராணியாருக்கு கண்டி சிம்மாசனத்தில் அமர்வதற்கு இடமளிப்பதை புத்தர்கள் மகா நாடு எதிர்த்துள்ளது. புத்த மதத்தை சேர்ந்தவர்தான் அதில் இருக்க முடியும் என்று இவர்கள் [விவாதிக்கிறார்களாம்.

இலங்கைப் பிரதமராகபதவி ஏற்கும்போது பிரதமர்கள் தம் முதலாவது பணியாக கண்டி தலதா மாளிகாவுக்குச் சென்று மத அனுஷ்டானம் செய்கிறார்கள், எனவே பெருவாரி மக்களைக்கொண்ட பௌத்தத்தை அரசாங்க மதமாக்க ஏன் அரசாங்கம் தயங்க வேண்டும் என்று இவர்கள் கேட்கிறார்கள்.

ஒரு மதத்தை அரசாங்க மதமாக்குவது ஜனநாயக அமைப்புக்கு முரணானதென்றும், பல மத நம்பிக்கையுள்ளவர்கள் உள்ள நாட்டில் ஒரு மதத்திற்கு முதலிடம் கொடுப்பது நியாயம் இல்லையென்றும், அரசாங்க விஷயங்களில் மதத்தை புகுத்துவது சரியல்லவென்றும் பொதுவாக கருதப்படுகிறது.

பொதுமறை மாணவர் மன்ற ஆண்டு விழா

பொதுமறை மாணவர் மன்றத்தின் முதலாவது ஆண்டு விழா, 10–1–54 மாலை 4 மணிக்குமேட்டுத் தெரு விவேகானந்தவித்தியாலயமண்டபத்தில் நடைபெறும்.

கூட்டத்திற்கு பேராசிரியர் கா. பொ. இரத்தினம் தலைமை தாங்குவார். மன்றத் தலைவர் பண்டிதர் மு. ஆறுமுகனின் வரவேற்புரையுடன் விழா ஆரம்பிக்கும்.

கூட்டத்தில். திருமதி பாலகிருஷ்ணன், சிவத்திரு சி. சரவணமுத்து, திரு சி. சோதிநாதன், திருமதி கமலபூஷணி திருநாவுக்கரசு முதலியோர் பேசுவார்கள்.

பொதுமறை மாணவர் மன்றத்தின் ''திருக்குறள் திருத்தியது'' என்ற நாடகமும் நடைபெறும்

எதற்கெடுத்தாலும் அன்னிய நிபுணர்கள் வேண்டுமா?

அமெரிக்க நிபுணர் இறக்குமதிக்கு விஞ்ஞானி ராமன் கண்டனம்

எதற்கெடுத்தாலும் அன்னிய நாட்டு நிபுணர்களை வரவழைப்பதைக் குறித்து பிரபல விஞ்ஞானியான டாக்டர் சி. வி. ராமன் வருத்தம் தெரிவித்தார்.

நிபுணர்கள் என்ற பெயரில் பெரும்பாலும் அமெரிக்கர்கள் இந்தியாவுக்கு வரவழைக்கப்பட்டிருக்கிறார்கள் என்பது இங்கு குறிப்பிடத்தக்கது

ஆமதாபாத் காலேஜ் ஒன்றின் வருஷாந்திர விழாவில் பேசுகையில் டாக்டர் சி. வி. ராமன் கூறியதாவது:—

நாம் தாழ்ந்தவர்கள் என்ற மனப்பான்மை பிரிட்டிஷ் ஆட்சி காலத்தில் நம்மிடையே ஏற்பட்டு விட்டது. இந்த மனப்பான்மையை விட்டொழிக்க வேண்டும். இப்பொழுது மந்திரிகள் நம்மவர்களாக இருக்கிறார்கள். அவர்களைத் தவிர நமது பிரச்னைகளைத் தீர்ப்பதற்கு ஆலோசனை கூற அன்னிய நிபுணர்களையே எதிர்ப்பார்க்கிறோம். இது கூடாது.

பெரிய கட்டிடங்களை கட்டுவதும் விலையுயர்ந்த யந்திரங்களைத் தருவிப்பதும் அவற்றை நிர்மாணிக்கவும் பழுது பார்க்கவும் அன்னிய நிபுணர்களை அழைப்பதும் அமுல் நமது இன்றைய பிரச்னை. தன்னம்பிக்கையோடு நாமே எதையும் செய்ய முயல வேண்டும்.

ஆகவே தன்னம்பிக்கை கொண்ட திறமை வாய்ந்த மாணவர்களை வெளிக்குக் கொண்டு வருவதை கல்வி ஸ்தாபனங்கள் லட்சியமாகக் கொள்ள வேண்டும். அப்படி செய்தால் உண்மையிலேயே நமது நாட்டுக்கு மகத்தான எதிர் காலம் இருக்கும்

அபிப்பிராயம் கூற நேருஜி மறுப்பு

நாகபுரி எல்லை காந்தி கபார்கான் விடுதலை பற்றிய செய்தி பண்டித நேருவிடம் தெரிவிக்கப்பட்டது. அவர் அபிப்பிராயம் கூற மறுத்து விட்டார்.

ரோட்டுகளில் கார்கள் சறுக்குவதன்மூலம் ஏற்படும் விபத்துக்களைத் தடுக்க லண்டனிலுள்ள ஹெண்டன் போலீஸ் கல்லூரியில் சமீபத்தில் ஆராய்ச்சி நடந்தது. இதற்கு 15 நாடுகளிலிருந்து நிபுணர்கள் வந்திருந்தார்கள். அவர்கள் பரீட்சை ஒன்று நடத்தினர் படத்தில் காண்க.

Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

மலைநாட்டுத் தமிழர்களைப் பிடித்து....

[8–ம் பக்கத் தொடர்ச்சி]

களுக்கு இலங்கை அரசாங்கம் நஷ்ட ஈடு கொடுக்கும்—இப்படியெல்லாம் ஆசை காட்டி மோசம் செய்வதே மேற்படி சதித்திட்டத்தின் தெளிவான விவரங்களாகும்.

இதுபற்றி இலங்கை இந்தியர் காங்கிரஸ் முன்னாள் தலைவர் திரு கே. இராஜலிங்கம் ஹட்டனில் பேசியபோது மலைநாட்டுத் தமிழருக்கு ஒரு கண்டிப்பான எச்சரிக்கையை வெளியிட்டிருக்கிறார். அவர் கூற்றை நாம் எழுத்துக் கெழுத்து வரவேற்பதோடு, நாமும் மலைநாட்டுத் தமிழ் மக்களை ஏமாந்துவிடலாகாது என்று இரட்டிப்பு எச்சரிக்கை விட விரும்புகிறோம்.

திரு. இராஜலிங்கம் கூறினார்:— 'மீன் பிடிப்பவர்கள் எவ்விதம் முதலில் தூண்டிலிலே புழுவைக் குற்றி தூண்டிலை மறைத்து மீனைப் பிடிக்கிறார்களோ அதேபோல மலைநாட்டுத் தமிழ் மக்களை வலை போட்டுப் பிடித்து பிறகு ஒரு சமயம் நாடு கடத்தும் சதிதான் இது. இந்தியா எங்கள் நாடு அல்ல. இலங்கைதான் எங்கள் தாய் நாடு. எனவே மலைநாட்டுத் தமிழ் மக்கள் ஒருபோதும் இந்தியப் பிரஜைகள் ஆகமுடியாது?

★

கடந்த ஞாயிற்றுக்கிழமை கொழும்பு கப்பித்தாவத்தை ஸ்ரீபால செல்வவிநாயகர் ஆலயத்தில் கொழும்பில் உள்ள தமிழ் பிரபலஸ்தர்கள் பலர் ஒன்று கூடினார்கள். மருதானைப் பகுதியிலும் அதன் சுற்றுடலிலும் வசிக்கும் தமிழ்ப் பிள்ளைகள் கல்வி கற்பதற்கு வேண்டிய பாடசாலைகள் இல்லாமல் படும் கஷ்டத்தைப் போக்குவதற்காக அப்பகுதியில் ஒரு பாடசாலை அமைப்பதுதான் அவர்கள் கூடியதன் நோக்கமாகும்.

இக்கூட்டத்திற்காக விடுக்கப்பட்ட அழைப்புத் துண்டுப் பிரசுரத்தில் பின்வரும் உணர்ச்சியூட்டும் வாசகம் தரப்பட்டிருந்தது.

பெறுதற்கரிய மானிடப் பேறுபெற்றும், தேனினுமினிய தெள்ளமுதாம் தமிழ் மொழியை மெள்ள உண்டும் கதிதரவல்ல நிதிமிக்க சைவ சமயத்தில் உதித்தும், நாம் விழலுக்கிறைத்த நீர் போலவும், கானில் எறிந்த நிலாப் போலவும் எமது அரிய காலத்தை வறிதே கழித்தபடியிருத்தல் எவ்வளவு மதியினம், இவ்வாறு காலம் கழித்ததன் பயனை நாம் தற்போதைய சூழ்நிலையில் வந்து தத்தளிக்கும் நெருக்கடியான, நிலைமையில் சிக்கி மதிமோசம் போனவர்கள் போல் ஏங்கி நிற்கின்றோம். இந்நிலைமைக்கு நம்மை யறியாமலே நாம் நடந்தும், நடத்தப்பட்டும் வந்ததற்கு நாமே காரணரன்றி வேறுயாரையும் குறைகூறுவதற்கில்லை. இந்நிலைமையில் தானும் நாம் நம்மையும், நம் சமூகத்தையும், நமது மொழியையும், நமது சமயத்தையும், நமது உயரிய பண்பாட்டையும், பொன்னே போற் போற்றுதற்கரிய, நம் முன்னோர் நமக்களித்த அருநிதிகளாகிய கலைகளையும் பாதுகாத்தல் வேண்டும். இதற்கு ஆவன இன்றே செய்தல் வேண்டும் நன்றே, செய்தல் வேண்டும். இன்றேல் தமிழரென்ற நாமமே அழிந்தொழிந்து போதல் திண்ணம். இதை யாரும் விரும்ப மாட்டீர்கள்! விரும்பாவிட்டாலும் இத்தகைய நிலை தமிழர்களாகிய நம்மை நோக்கி நெருங்கிக்கொண்டிருக்கிறது. உண்ண உணவுக்கும் உடுக்கத் துணிக்கும் கறணம் போட்டது போதும். இனியாவது பொது நலத்தை நாடி நாம் உழைத்தல் வேண்டும். அப்பொழுதுதான் நாம் உய்ய முடியும். ஆகவே, எல்லீரும் எழுமின், விழிமின் கருதிய கருமங்கள் கைகூடும் வரை உழைமின் என்று அறை கூவி அழைக்கின்றோம். யாவரும் வீறிட்டெழுந்து வந்து என்றும் அழியா அணைகளைக்கோலுக இத்துண்டுப் பிரசுரத்தில் கொழும்பிலுள்ள 28 தமிழ்ப் பிரமுகர்கள் கையொப்பமிட்டிருந்தனர். ஆனால் அவர்களுள் ஒருவர் மட்டுந்தான் பாராளுமன்ற அங்கத்தவர். அதாவது கல்குடா பிரதிநிதியும் பிரதமரின் பாராளுமன்றக் காரியதரிசியுமான திரு வி. நல்லையா அவர்கள். கையொப்பமிட்டிருந்த மற்றவர்களின் விவரம் பின்வருமாறு:

டி. உருத்திரா, (கொழும்பு மேயர்) எஸ். சோமசுந்தரம், வி, ஏ, கந்தையா, பி. நவரத்தினராசா, எஸ். சரவணமுத்து, கே. டி. சிற்றம்பலம், டாக்டர் மு. திருவிளங்கம், எஸ். ஆர். எம். வள்ளியப்பச் செட்டியார், சு. ந. நமசிவாயம் செட்டியார், பி. சிவானந்தன், த. நீதிராசா, வி. சுப்பையா, நா. சி. செல்லையா, க. மதியாபரணம், இ. சபாநாயகம், பி. மெய்யப்பன் செட்டியார், பி. குமாரசாமி ஆச்சாரி, கே. பி. ஹரன், வி. நடராசன், கா. நாகலிங்கம், இ. சிற்றம்பலம், ச. த. சின்னத்துரை, வி. எஸ். அரியரெத்தினம், என். இரத்தின சபாபதி, மு. கனகரத்தினம், ஆ. சதாசிவம், எஸ். கே. நாகேந்திரன்.

கூட்டத்திற்கு முதலில் கொழும்பு நகர மேயரும் பின்பு திரு ஸ்ரீஸ்கந்தராசாவும் தலைமை வகித்தார்கள்.

திரு வி. நல்லையா பேசுகையில் இலங்கையிலுள்ள ஒவ்வொரு இந்து ஆலயமும் ஒவ்வொரு தமிழ் பாடசாலையாக மாறவேண்டும் என்று கூறினார்.

கப்பித்தாவத்தை ஆலயத்தையடுத்து தமிழ்ப் பிள்ளைகளுக்கென ஒரு பாடசாலையை நிர்மாணிக்க வேண்டும் என்ற தீர்மானம் நிறைவேற்றப்பட்டது.

இலங்கை கம்யூனிஸ்ட்.....

(1–ம் பக்கத் தொடர்ச்சி)

யராக இலங்கை வந்தார். சமசமாஜக் கட்சியின் பத்திரிகையில் ஆசிரியராக இருந்தார். சமசமாஜக் கட்சியின் கூட்டுக் காரியதரிசியாகவும் சில காலம் இருந்தார்.

சமசமாஜக் கட்சியில் பிளவு ஏற்பட்டதும் டாக்டர் விக்கிரமசிங்காவுடன் சேர்ந்து இலங்கை கம்யூனிஸ்ட் கட்சியின் ஆரம்ப அங்கத்தவரானார். திரு ராமனுதன் கம்யூனிஸ்ட் கட்சி மத்தியக் கமிட்டி உறுப்பினர். கட்சியின் தமிழ் வார இதழின் ஆசிரியர்.

இதுசம்பந்தமாக கம்யூனிஸ்ட் கட்சிப் பிரமுகர் ஒருவரை நமது நிருபர் கேட்டபோது ''இதைக் கேட்டு நாம் வியப்படைவதற்கில்லை. கொத்தலாவலை ஆட்சி பாஸிட் ரூபமெடுத்துவிட்டது. எனவே மக்களின் ஜனநாயக உரிமைகளைப் பாதுகாக்க சகல ஸ்தாபனங்களும் முன் வரவேண்டும் என்பதையே இது காட்டுகிறது'' என்றார்.

ஆர்ப்பாட்டக்காரர்கள் தலை மொட்டை!

ஈரான் தலைநகர் டெஹ்ரானில் ஆர்ப்பாட்டம் நடத்திய பள்ளிப் பையன்களைப் போலீஸார் பிடித்து தலைகளை மழுங்க மொட்டையடித்து விடுதலை செய்தனர்.

மாஜி பிரதமர் முஸாதிக்கை ஆதரித்து பையன்களும், மேலாக்கு இல்லாத பெண்களுமாக சுமார் ஆயிரம் மாணவர்கள் சட்டசபைக் கட்டிடம் அருகே ஆர்ப்பாட்டம் செய்தனர்.

பழிக்குப் பழி

[எஸ். ஏ. அஸீஸ்]

ஜூலை 14. அன்று உலகை குலுக்கிய யுகப் புரட்சி ஒன்று வெடித்தது. பிரெஞ் சுப் பாட்டாளி வர்க்கம் 'கொடுவாள் கையினில்' ஏந்தி அமர்க்களம் குதித்தது.

அந்த பொன் புரட்சியிலே வாழ்வின் பலகோணங்களிலிருந்து மக்கள் பங்கு பற்றினர். பிரபுத்துவ அமைப்பின் கோரத்தால் நசிபட்ட, துவைபட்ட பலதர மக்களும் பழிவாங்கும் பலிபீடத்திலே மார்தட்டினர்.

அந்த கிழவர். தன் மகளின் கற்பைச் சூறையாடி, மாதரினத்தை மடக்கி வைத்த உன்மத்தர் கூட்டத்தைச் சேர்ந்தவன்மீது பழிதீர்த்தார். குண்டுக்கு இரையான அவரை ஒரு வாலிபன் வீட்டிற்கு ஏந்தி வந்தான். அதே கரம் கிழவரின் கண்ணின்மணியான பேத்திக்கு அபயமளிக்கும் உயிர்க்கரமாக மாறியது.

அன்றுவரை பிரான்ஸ் பாமர மக்கள் கோழைகள்; அறிவற்றோர்; தகுதியற்றோர்; வீரத்தை அறியாத வீணர்கள் என்று எண்ணிய உப்பரிகை உல்லாசக் கோமளங்களுக்கு—கோமான்களுக்கு ஜூலை 14-ல் ஏற்பட்ட புரட்சி, அரச பீடத்திற்கு—ஏகாதிபத்தியத்திற்குச் சாவோலை தயாரித்து விடுமோ என அச்சம் ஏற்பட்டது; சாவுமணி அடித்தும்விட்டது!

ஏர்பிடித்த கரங்கள்கூர்வாள் ஏந்தின. கோழைகள் என எண்ணியோர் சூரர்கள் ஆனார்கள், கொதித்தெழும் ஏழை மக்களின் முறுக்கேறிய கரங்கள். கோட்டை கொத்தளம் மாடமாளிகைகளே யெல்லாம் சுக்கு நூறுக தகர்த்தெறிந்து தரை மட்டமாக்கின. வீரர் எனக் கருதியோர்—வீராப்பு உரை ஆற்றித் திரிந்த பிரபுக்கள், தங்கள் தலையைத் தப்புவிக்க முடியுமா என ஓடிப்பதுங்கினர். பிரான்ஸ் நகரம் முழுவதிலும் ஒரே புரட்சித் தீ! நாட்டின் மூலை முடுக்குகளில் இருந்து கொதிப்பு. 'எரிமலே குழம்பு கக்கிற்று! வறுமைச் சேற்றிலே வதங்கிய ஏழைகளின் வதனங்கள். பிரபுக்களின் செங்குருதிச் சேற்றிலே புரண்டு சுவை பார்த்தன! பல நிற ஆடைகள் ஒரு நிறமாயிற்று ஓவியனுக்கு அதிக தொந்தரவு இன்றி புரட்சிப் பகுதிகளைச் சிகப்புச் சாயத்தாலேயே எழுதும் முறையில் பலப்பலக் காட்சிகள்.

இந்தப் புரட்சி தீப்போல் பரவவே, வீதிகள் தோறும் சிதைந்த சிரங்களின் மேடுகள்! ஆங்கில நாட்டின் இடையில் தன் ஒய்யாரத்தைக் காட்டி, தர்த்தனம் செய்துகொண்டு தேம்ஸ் நதி ஓடுவதுபோன்று அன்று பிரான்ஸிலே பார்! பாட்டாளியின் பதைபதைப்பை! ஏழைகள் அழுத கண்ணீர் ஒய்யார வாழ்க்கையின் உல்லாச அருவியைப் பார்! மதுக்கிண்ணத்தினர் மயக்கத்தைப் பார்! நெகிழ்ந்த ஆடையுடன் நடனமாடிய நங்கைகளின் நயவஞ்சக ரூபத்தைப் பார்; ஏகாதிபத்தியத்தின் ஏமாளித்தனத்தைப் பார்! ஆள ஆண்மையற்ற மரக்கட்டைகளைப் பார்! கொதித்த உள்ளங்களின் குமுறலைப் பார்! என இடியோசை முழங்கிக்கொண்டு ஒரு செங்குருதி நதி, இல்லை! ஓர் அருவி ஒடிற்று!

இவை ஏன் நாட்டில் நடக்க வேண்டும்? காரணம் என்ன? என ஏகாதிபத்தியக் கும்பல், அரச ஆசனம் அமரத்வம் என நினைத்தவர்கள், பிரபுக்கள்—உணரக் கூட உடலிலே உயிர் நிற்கவில்லை! காரணம் பிரபுக்கள்—ஆட்சி பீடங்கள்—சர்வாதிகாரங்களின் உருவங்கள்—செத்துக்கொண்டே இருந்தன! அந்நிலையில் கூட, எஞ்சிய ஏழைப் பாமரர்களாவது நலமுடன் வாழட்டுமே! என்ற குரல் ஒரு திக்கிலும் காணோம்! தன் குழந்தை—பொருள், பொன்—தாய்தந்தை—மனைவி உற்றார் உறவினர் என்ன ஆயினர்? என்று கேட்கும்? குரல்களே மட்டும் எண்ண முடியவில்லை.

அன்றைய புரட்சிப் படையினரில் ஒருவன் ரோஸியின் தாத்தா, ஒரு பிரபுவைச் சுட்டான். பலரைச் சுட்டான். சுட்டுக்கொண்டே இருந்தான்—கைஅயரும்வரை சுட்டான்—இவன் உடலில் ரத்த உடை அணியும் வரை சுட்டான்; சுட்டுக்கொண்டே சென்றான்; வழியில் ஒரு பிரபு குற்றுயிராகத் தன் அருமை மனைவி மேரியையும், தன் பொருளையும் பற்றிப் புலம்பிக்கொண்டு அவன் வீட்டின் வாசலிலே கிடந்தான். அக்குரலின் ஒலியைக் கேட்ட கிழவன் ரோஸியின் தாத்தா—பாட்டாளி 'ஏன் அப்பா! உன் வீட்டில் இன்னும் சுகத்தைத் தேடுகிறாய்? உனக்கு அன்று ஆசையை ஊட்டிய ஆரணங்காகத் தோன்றிய என் அருமை மகள், என் கண்மணி பேத்தி ரோஸி இவர்கள் நினைவு ஏன் உனக்கு வரவில்லை? என் உயிர் போன்ற மகளை உலகத்தின் இன்பத்திலிருந்து பிரித்தாயே துரோகி! அன்று என் மகளுடன் கொஞ்சும் மொழிகள் பேசி, காதல் கீதங்கள் பாடி, அதன் அடையாளமாப் பெற்றெடுத்த ரோஸியை என் தலையில் சுமக்கச் செய்தாயே பாதகா! அந்தப் பச்சிளங் குழந்தை ரோஸி ஏன் உன் காமாந்தகாரக் கண்களுக்குத் தெரியவில்லை? வஞ்சகனே! நீ இனிமேலும் இவ்வுலகில் இருந்தால் பல கன்னியர்களைக் கவலைக்குள்ளாக்குவாய், தீர்ந்துபோ!" என ஆத்திரத்துடன் தன் துப்பாக்கியைத் திருப்பி ஒரே அடியாக அடித்து மண்டையைப் பிளந்தான்.

தன் துப்பாக்கியை எடுத்துத் தோளில் வைத்துக்கொண்டு கிழவன் தள்ளாடித் தள்ளாடிச் சில அடிகள் நகர்ந்து கொண்டிருந்தான்.

"படார்! என்ற சத்தம் அம்மாளிகையிலிருந்து கேட்டது. கிழவன்! 'ஐயோ!' எனத் தன் விலாவைப் பிடித்துக் கொண்டு தென்னைமரம்போல் சாய்ந்தான். பக்கத்தில் சென்று கொண்டிருந்த ஓர் வீர இளைஞன் ஓடி வந்து கிழவனை தோளில் தாங்கி மடியில் சாய வைத்தான். கிழவனின் விலாவில் இருந்து இரத்தம் பீறிட்டது! பிரமை தட்டிய இளைஞன் சுக்கு நூறுகக் கிழிந்திருந்த தன் சட்டையைக் கிழித்தெடுத்து, இரத்தம் பீறிடாமல் விலாவைச் சுற்றிக் கட்டினான். கிழவனுக்குச் சற்று தெளிவு வந்ததும், ரோஸி..... ரோஸி.....கண்மணி!; என முணுமுணுத்தான். வாலிபனுக்குக் கொஞ்சம் தைரியம் வந்ததும் 'தங்கள் இல்லம் எது எடுத்துச் செல்கிறேன்' எனக் கனிந்து கூறினான்.

கிழவனுக்கு காதில் சற்று மந்தமாகத்தான் விழுந்தது. ஆயினும் தன் விரலைத் திசை காட்டும் கருவிபோல் காண்பித்தான். அதை ஒருவாறு அறிந்துகொண்ட இளைஞன், கிழவனைத் தோளிலே தூக்கிக் கொண்டு விரைந்து நடந்து கிழவன் வசிக்கும் தெருவுக்குச் சென்றான்.

அப்போது ஊரிலே ஏற்பட்ட அமளியைக் கண்ட ரோஸி தன் தாத்தாவைக்காணோமே! என ஏங்கி வழிமேல் விழிவைத்து எதிர்பார்த்துக் கொண்டிருந்தாள். பாவம்! தாயும் கிடையாது. தகப்பனையும் அறியாள். தன் தாத்தாவின் உடல் இரத்தம் தோய்ந்து ஒருவர் தூக்கி வருவதைக் கண்டு பதைபதைத்தாள்! ரோஸியின் கண்களிலே கண்ணீர் பெருக வில்லை! "இவ்வஞ்சகம் செய்த துரோகி யார்!" என அலறினாள்; மண்டையை மோதினாள். தாயை இழந்து, தந்தை அற்று, தன் ஒரே தாத்தாவையும் இழந்து என்ன ஆவது? பின் அனைதை ரோஸிதானே? தன் தாத்தாவை வாரி அணைத்து வீட்டினுள் கொண்டுபோய் ஒரு பாழும் கட்டிலில் கிடத்தினாள். உடல் கயிற்றில் உராயப் படுத்திருந்த கிழவன் தன் அருகில் ரோஸி உட்கார்ந்து அலறும் காட்சியைக் கண்டதும் இருந்த உயிரும் பாதி போய்விட்டது. கோழை உள்ளத்தில் புரட்சி தான் தோன்றி [illegible] அமைதி கிடையாது.

கிழவனின் கண்களே நீர்த் திரைகள் வந்து மறைத்தன. எதுவும் தன் கண்மணி ரோஸியிடம் கூறச் சக்தியில்லை. ஆனால் அதரங்கள் மட்டும் ஆசையைக் கொட்டத் துடித்தன. ரோஸியின் உடல் பூராவும் கிழவனின் மேல் படிந்து உறைந்த இரத்தம் அவளுக்கு இன்னது செய்வதென்றே தோன்றவில்லை.

பக்கத்தில் நின்ற இளைஞன் உள்ளே சென்று கிழவனுக்கு கொடுக்க ஏதாவது இருக்கிறதா? எனத் தேடி, கடைசியாகக் கிடைத்ததை எடுத்துதான். ரொட்டித் துண்டுகள்தான் அவை. அதைக் கொடுத்தான். கிழவன் தெளிவு அதிகம் பெற்றான் என்று எண்ணினான் வாலிபன்; ஏன்? அன்று முழுவதுங் கூட நன்றாகத்தான் இருந்தான். இரவு பூராவும் தன் பேத்திக்கு ஆறுதல் மொழிகள் கூறிக் கொண்டு இருந்தான்

அவ்விளைஞன் அவர்களைப் பார்த்து ஏன் வீணாகப் பேசி உடலை அலட்டிக் கொள்கிறீர்கள்?' என்று கேட்டான். அதற்குக் கிழவன் 'இன்னும் எவ்வளவு நாழி ரோஸியுடன் பேசிக் கொண்டிருக்கப் போகிறேன்!.....?.....தூக்கம் கூட விரைந்தோடி வருகின்றது.....விரைவில் தூங்கிவிட்டால் பிறகு—பேச முடியுமா தம்பி?' எனப் பரிதாபத்துடன் கூறினான்.

வாலிபன் இரவெல்லாம் கிழவன் பக்கத்திலேயே உட்கார்ந்து பணிவிடைகள் செய்து கொண்டிருந்தான். இடையிலே இளைஞன் அவரை விட்டுப் பிரிய எண்ணியும், அவர் 'என்னை இந்நிலையில் விட்டுப் போகாதே தம்பி, காலையில் போய்விடலாம்' என்றதும் அவர் வார்த்தையை அந்நேரத்தில் தட்டினால் தன் பிரிவு அவரை மாய்த்து விடுமோ என்ற பயத்துடன் அவர்சொல்லுக்கு இசைந்தான்.

இளைஞன் பகலிலே பட்ட கஷ்டந்தான் போலும்! நடு ஜாமத்துக்குப் பின் நல்ல உறக்கம் வந்துவிட்டது.

தாத்தாவும் பேத்தியும் பேசிக் கொண்டிருந்தனர். அவர்கள் குடும்ப ரகசியங்கள்ரோஸியின் பிறப்பு—தாயின் வாழ்வு சிதைந்தவிதம்—ரோஸியின் தந்தையின் கதி ஆகியவைகளைப் பேத்தியிடம் சொல்லிக் கொண்டு வந்தார். அப்போது சில வார்த்தைகள் மட்டும் கம்பீரக் குரலுடன் அவனுக்குக் கேட்டது. "உன் தாயை வஞ்சகம் புரிந்து உல்லாசபுரியில் வாழ்ந்த உன் தந்தையை இன்றுதான் துப்பாக்கிக் கட்டையால் மண்டையைப் பிளந்து கொன்றேன்!' என்றதும் ரோஸி ஆ; என அலறித் துடித்தாள். கிழவன் தன் மகளுக்காக வஞ்சம் தீர்த்துக் கொண்டான் என்பதை அவள் அறிவாளா?

என்ன என் தந்தையையா கொன்றுவிட்டீர்கள்? தாத்தா!.....எனப் பதைத்தாள். கிழவனுக்கு [illegible] ஆத்திரம்—பாதாதிகேசம் இரண்டும் மாறிமாறி வந்தன. பாவம், அவள் அறிவாளா? அக்கிழவன் இவளுக்காகப் பட்டபாட்டையும், நாட்டிலே ஏற்பட்ட நகைப்பையும் கேலியையும்—பழியையும்?

பக்கத்தில் அரைத் தூக்கத்தில் இருந்த வாலிபன் இக்கூக் குரலைக் கேட்டு எழுந்திருந்து 'என்ன.....என்ன.....' எனப் படப்படப்புடன் ஓடிவந்தான். கிழவன் இளைஞனை அருகில் அழைத்து தம்பி நீயும் கேள்; இக்குழந்தையின் தாயை கற்பழித்த கயவனின் செயலை? நீயும் தெரிந்துகொள்ள வேண்டியவன் தான். கடமையும் கூட! என் கண்மணி ரோஸியை கடைசி முறையாக பார்க்க என்னைச் சுமந்து வந்தது நீ அல்லவா! நான் அனுபவிக்கும் இன்பத்தில் நீ பங்கெடுக்க வேண்டாமா? ஏன்! நான் உன் வாழ்விலேயே ஒளி வீச எண்ணுகிறேன் இனி என்சந்ததியின் சின்னம் இதோ என் பக்கத்தில் அமர்ந்துள்ள கண்மணிதான்... எனக்கூறி முடிக்கு முன் கண்களில் நீர் பெருகி, தொண்டையை அடைத்தது. ரோஸியின்கரங்களை கிழவன் முத்தமிட்டான்.

இன்னும் கேள் நண்பா! ரோஸியின் தந்தை இக்குழந்தையின் தாயை வைத்துக் காப்பாற்றுத கபோதியானதால் கொன்றேன்! என் மகள் நிறைந்த அழகுடையவள் என்று எங்கள் ஊர் முழுதும் கூறுவார்கள். என் தந்தை கூட என்மகளே அழகி என்றுதான் கூப்பிடுவார். என் மகளும் ரோஸியின் தந்தையும் 20 ஆண்டுகளுக்கு முன்னர் கல்லூரித் தோழர்கள்! நாளடைவில் அவர்களே அன்பு, காதல் என்ற புது உருவம் பெற்றது. காதல் மணம் புரிய ஏற்பாடும் செய்தார்கள். அவன் என்மகளிடம் சரச வார்த்தைகள் பேசி, கோமளவல்லியென்றும் நாட்டிய ராணியென்றும் குலவினான். என் மகள் கூட அவனைத்தான் மணம் செய்து கொள்ளப் போவதாகக் கூறினாள். எனக்கு வீட்டை அலங்கரிக்க ஒரே மகள் இருந்ததால் அவள் போக்குக்கு விட்டுவந்தேன். நயவஞ்சகத்தைத் தேனுகப் பொழிகிறான் என்பதைப் பேதை அறியவில்லை. பின்னர் அவன்மேல் படிப்புக்காக இங்கிலாந்துக்கு சென்று விட்டான். ஆனால் சிறிது காலம்வரை அவன் காதல் கடிதங்களை மட்டும் அனுப்பிக்கொண்டிருந்தான். நாள் ஆக ஆக இது குறைந்தது. பின் வெளி நாடு சென்ற கோமான் தன் பழைய கோமளத்தை மறந்து, புதுக் கோமளாங்கியை மணம் புரிந்து கொண்டு வந்து இன்ப புரியில் வாழ்ந்தான்!

என் மகளுக்கு வேறு கல்யாணம் செய்து கொள்ள எண்ணமில்லை. காரணம் இதோ உன் முன் உள்ள ரோஸி. அப்போது ஐந்து வயதுக் குழந்தையாகி கண்ணடிக் கன்னத்தையும், ஒளிவிடும் கண்களையும், மின் வெட்டெனப் புன் முறுவலையும் காட்டி, தன் தாய்க்கு அடிக்கடி அத்துரோகி பற்றிய எண்ணத்தைத் தூண்டிக் கொண்டிருந்தாள். வேறு மணம் செய்து கொண்டால் தன் குழந்தையை நன் முறையில் காப்பாற்ற முடியாதே என்ற கவலை வேறு அவளுக்கு. ' என் கண்ணே! ஏன் என்னை ஆச்சரியத்துடன் பார்க்கிறாய்! நான் இதுவரை இவைகளைச் சொல்லவில்லையே என்று? தம்பி! என் உள்ளம் பதைபதைக்கின்றது. கேள் இன்னும்! பொறுமையாகக் கேள்! நீங்கள் இதைக் கேட்டால் மட்டும் போதாது என் உள்ளத்தை வாட்டச் செய்த இம்மாதிரி அட்டூழியங்கள் இனிமேலும் நாட்டில் நடைபெற்றால் அதை அகற்ற நீங்கள் இருவரும் பாடுபட வேண்டும். நான் பன்முறை அவனை மறந்து விடும்படி என் மகளிடம் சொல்லிப் பார்த்தேன்; அதற்கவள், "என் அருமை மகள் என்னுவது? என் கண்ணுளர் என்றுவது ஒரு நாள் வந்து அழைத்துப் போவார், கை விட மாட்டார்" என்னும் பதிலே சொல்லிவந்தாள் என்னிடம். ஆனால், அவளை இடை மறித்துப் பத்து ஆண்டுகளுக்கு முன் அவள் கவலை நோய் பற்றி மறைந்தாள் உலக வாழ்வில் இருந்து என்றதும் கண்களில் நீர் பெருக்கெடுத் தோடிற்று.

பின்னர் கிழவன் மேலும் இளைஞனைப்பார்த்து, கேள் தம்பி! இன்று நாட்டிலே புரட்சி நாள்! என் போன்ற பல லட்ச உருவங்கள், பணத் திமிரினால் ஏழைகளின் கற்பை வேட்டையாடிய நாய்களை வஞ்சம் தீர்த்துக்கொள்ள எண்ணியிருந்தன. அவைகளிலே நானும் ஒருவன் தீர்த்துக் கொண்டேன் ஒழிந்தான்! நான் இனி நிம்மதியாக இருப்பேன். கண்ணே ரோஸி! இன்னும் கேளம்மா! உன் தந்தையை அவர் வீட்டிற்கு முன்பு கொன்றுவிட்டு வந்து கொண்டிருந்தேன். அப்போது ஓர் வெடிச் சப்தம் கேட்கவே, அது வந்த திக்கை நோக்கினேன். நான் பார்த்து முடிப்பதற்குள் அது என்னைத் துளைத்துவிட்டது. பின் உன் தந்தையின் மாளிகை ஜன்னலில் இருந்து உன் சின்னம்மா—உன் தந்தைக்கு இரண்டாம்முறை காதலை கொடுக்க வந்தவளே—அவள் துப்பாக்கியுடன் நிற்பது தெரிந்தது. அவள் அலங்கோலமாகக் காணப்பட்டாள்! என் துப்பாக்கியைத் தேடினேன் அது வெகு தூரத்தில் கிடந்ததால் எடுத்துச்சுட முடியாதவனானேன். என்றதும் அவர் உடலின் நரம்புகள் முறுக்கேறின. நெற்றியில் சுருக்கங்கள் படர்ந்தன. பிறகு இளைஞனைக் கண்ஜாடையால் அழைத்து 'நண்பா! நீ எனக்கு இதுவரை செய்த உதவி பெரிதல்ல, இனி நீ செய்ய வேண்டியதும் ஒன்றுள்ளது எனத் தழதழத்த குரலில் கூறி வாலிபன் அதரங்கள் என்ன வார்த்தைகளை உதிர்க்குமோ! எனக் காத்துக் கிடந்தார். 'என்னால் ஆனதைச் செய்ய முயல்கிறேன்' என்றான் இளைஞன்.

உன்னால் ஆகக்கூடியதுதான்—உன் வாழ்விலே, புரட்சியின் நாளிலே புனித உலகை அமைக்க எண்ணுகிறேன்; உனக்கு ஓர் பரிசு அளிக்கப் பிரியப் படுகிறேன்

"தாங்கள் சொல்வது எனக்கு விளங்கவில்லையே" என்றான் இளைஞன். "தம்பி! நீ என் கண்ணின் ஒளிபோன்ற ரோஸியை—" மேலே கூறச் சக்தியில்லை கிழவருக்கு.

பின் கிழவர் பேத்தியின் முகத்தை அண்ணாந்து பார்த்தும், அவளுக்கு இவரது நிலையை பார்க்கச் சகிக்காமல், ஓவென அலற ஆரம்பித்தாள்.

கிழவன் அவளது கரங்களைப் பிடித்து மெதுவாகத் தடவி கொடுத்துக்கொண்டே இளைஞனைக் கட்டிலின் மறுபக்கத்தில் அமரச் சாடை காண்பித்தார்.

இளைஞனின் கண்களே நீர் அலைகள் மறைக்க, அவர் எண்ணத்தை ஈடேற்ற ஆர்வம் உள்ளவன் போல் அமர்ந்தான்; கிழவன் இரு கரங்களையும் பற்றிக்கொண்டு "தம்பி, நீ என் அருமைப் பேத்தி ரோஸியை உன் வாழ்க்கையில், உன் கண்

[13—ம்பக்கம் பார்க்க]

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பல்தொழில்கள் பெருக கலோனியல் அமைப்பு ஒழிய வேண்டும்

நாட்டின் பொருளாதாரத்தை செம்மைப் படுத்த, தேசத்தை தொழில் மயமாக்கத் திட்டமிடக்கூடிய மந்திரி சபைக் கூட்டம் எவ்வித முடிவுக்கும் வரமுடியாது கலைந்தது என்ற செய்தியை 'சுதந்திரனில்' வெளியிட்டிருந்தோம். இதோடு 'உணவைப் பெருக்குக' இயக்கம் தோல்வியடைந்துவிட்டது என்று உணவு இலாகாவே ஒப்புக் கொண்டுள்ள அறிக்கை விபரத்தையும் வெளியிட்டோம்.

இவை எதைக் காட்டுகின்றன? இந்த நாட்டை கட்டியாளும் கட்சிக்கு சரியான ஒரு தேசியத் திட்டமில்லை என்பதை துலாம்பரப்படுத்துவதோடு, இவர்களுக்கு எதையும் சாதிக்க முடியாது என்ற அப்பட்டமான உண்மையையும் ஒப்புக்கொள்கிறது.

நாடு இதற்குமுன் என்றும் கண்டுப் கேட்டுமிராத பொல்லாத பொருளாதார நெருக்கடியிலே சரிந்து வருகிறது. ஆருண்டுத் திட்டத்தின் மூலம் 'நாட்டை இகலோக சுவர்க்கமாக்குவோம்' 'பாலும்தேனும் காட்டாறுபோல் பெருகும்' என்று நட்பாசை காட்டி, 'ஆறுண்டுகளின் முடிவில் எமது திறமை பற்றி நாடு தீர்ப்பளிக்கட்டும்' என்று ஐம்பமடித்த ஆளும் கூட்டம் இன்று கைகட்டி வாய் பொத்தி, 'ஐய்யய்யோ நெருக்கடி முற்றிவிட்டதே' என்று ஒப்பாரி கீதத்துடன் 'பிள்ளை குட்டி பெத்தவங்களே' என்று லண்டனுக்கும், நியுயோர்க்கிற்கும் பிச்சைப் பாட்டுடன் அன்னக்காவடி, அரோகராக் காவடி எடுப்பதைப் பார்க்கிறோம்.

இன்று நாட்டிலே பொருளாதார நெருக்கடி முற்றி வருவதற்கும், அன்னியர் கையில் கொடுத்து தொழில்களை வளர்ப்போமா அல்லது அரசாங்கமே நடத்துவதா, அரசாங்கம் நடத்தினால் நஷ்டமளக்க நேரிடுமே, மூடுபடல விழாக்கள் நடத்தவேண்டியேற்படுமோ என்று மந்திரிசபை அல்லோல கல்லோலப் படுவதன் அர்த்தம் என்ன? தொழில்களை மாற்றானுக்கு தாரை வார்ப்பதன் பவுஷா, அல்லது அரசாங்கத்தார் நடத்துவதன் நடப்புபற்றி பார்க்குமுன்இந்த பொருளாதார நெருக்கடி பற்றிய கூச்சலின் மகுடி என்ன என்பதைப் பார்ப்போம்.

பொருளாதார நெருக்கடி முற்றிவிட்டதென்பதும் — நாடு பொல்லாத நாசத்தின் சரிவில் தலைசாய்ந்து கொண்டிருக்கிறதென்பதும் உண்மை. ஆனால் இது ஏன்? 'நாம் என் செய்வோம். எல்லாம் அவன் செயல்' என்று சோணகிரி வேதாந்தம் பாடுகிறது ஆட்சி. இந்த 'அவன்' யார்? எதற்காக பொருளாதாரத்தில் இடை இடையே நெருக்கடிக் கட்டம் ஏற்படுகிறது? இந்த நெருக்கடி தடுக்க முடியாத நியதியா?

இதற்கு இன்றைய பொருளாதாரத்தின் உண்மை ரூபத்தைப் பார்ப்போம். தேயிலை, ரப்பர், தெங்கு இவையே நாட்டின் 'மும்மூர்த்திகள்'. மற்றும் பெரிய, சிறிய வர்த்தக ஸ்தாபனங்களும் பாங்குகளுமே. நாட்டிற்குத் தேவையான பொருட்களை உற்பத்தி செய்வதற்கும், நாட்டிலுள்ள மூலப் பொருட்களை உபயோகப்படுத்துவதற்கும் பெரிய தொழிற் சாலைகள் இல்லை. இருப்பது இரண்டு ஒன்றே. இதுவும் யார் கையில்?

1947 அரசியல் மாற்ற மகுடிக்குமுன் இருந்த நிலையே இன்றும். அடிமைப் பொருளாதார அமைப்பே தொடர்கிறது. ரப்பரில் 80 சத வீதம், தேயிலையில் 70 சத வீதம், தெங்குவில் 60 சத வீதம் இன்றும் அன்னியர் கையில். ஒரு பாங்கைத் தவிர ஏனைய பாங்குகள் அனைத்தும் மாற்றான் கரங்களில். பெரிய வர்த்தக நிலையங்களும், இறக்குமதி ஏற்றுமதி தொழிலில் சிங்கப் பங்கும் வெளியாளுக்கு. ஒரு வருடத்தில் மட்டும் 9 கோடி ரூபா எங்கள் நாட்டிலிருந்து லாபமாக லண்டனுக்குப் போகிறது.

எனவே பொருளாதாரத்தின் குடுமி இன்றும் வெள்ளையன் கிடுக்கியில். 'அவனின்' பொருளாதாரத் தேவைக்குத் தக்கவாறே இலங்கை குரங்காட்டம்—பொம்மையாட்டம் போட வேண்டும்.

நாட்டிலே தொழில்கள் வளரவில்லை. தொழிற்சாலைகள் பெருகவில்லை. தோட்டப் பகுதியிலும் மண் சத்துக் குறைந்து கட்டாந்தரையாகி வருகிறது. மண் அரிப்பு தோட்டப் பொருளாதாரத்தை நாசத்தில் அச்சுறுத்துகிறது. விவசாயம் யந்திரமயமாகவில்லை. அதற்கு மாறாக உணவு உற்பத்தி குறைகிறது. நாட்டின் செல்வமும்—செழிப்பும் தேய்கிறது. இன்றும் இலங்கை மேல்நாடுகளின் சந்தையாகவும், மூலப்பொருட்கள் கொடுக்கும் பூமியாகவுமே இருக்கிறது. இதுதான் நாட்டின் கண்முவிக் காட்சி.

திட்டமிட்ட பொருளாதாரம் இல்லாதபோது, தொழில்கள்வளர்ந்து பெருகாதபோது, நாடு சுயபோஷண நிலைக்கு உயராதபோது, அன்னியன் ஆதிக்கத்தில் நாட்டின் பொருளாதாரம் குடுங்கும்போது, வெளியான் கப்பலுக்கு ஈரத் அணியுடன் மக்கள் காத்து நிற்கும் நிலை இருக்கும்போது பொருளாதார நெருக்கடி சகஜமே. எனவேதான் இந்த நெருக்கடிக்கு யார் காரணஸ்தர்கள்? நாட்டை தொழில் மயமாக்க மறுப்பவர்கள், அனின்யன் ஆதிக்கத்தை ஒழிக்க ஒப்பாதவர்கள், தேசத்தை வெறும் சந்தைக் கடையாக வைத்திருப்பவர்கள்—ஆட்சியாளர்களே பொறுப்பாளிகள்.

எனவே நாட்டின் பொருளாதாரம் இன்றும் அடிமை நாட்டுப் பொருளாதாரமே. தேசிய பொருளாதாரத்தின் குடும்பி மாற்றுன் கையிலேயே. இது ஒழியுமட்டும் நாடு சுபீட்சமடைய முடியாது.

ஆகவே நாட்டின் முதல் எதிரி கலோனியல் பொருளாதார அமைப்பு. அன்னியன். அவன் சீஷ்யகோடியான ஆட்சியாளர்.

இனி அன்னிய உதவியில் நாட்டின் தொழில்களை வளர்க்க வேண்டும் என்ற பவுஷைப் பார்ப்போம்.

யார் இந்த அன்னியர்கள்? இந்தநாட்டையும்,ஆசியநாடுகளையும்நூறுண்டுகளுக்குமேலாக சுரண்டியவர்கள். கட்டியாண்டவர்கள். மக்களின் தேசிய சுயாதீனத்தின் எதிரிகள். தங்கள் உற்பத்திக்கு, லாபத்துக்கு சந்தை தேடுபவர்கள். மொத்தத்திலே சுயநலமும்—லாபவேட்டையுமே இவர்களின் இரு விழிகள்.

இந்த நிலையில் இவர்கள் உதவி எத்தகையது? இந்த நாட்டிலே இவர்கள் மூலதனம் போட வேண்டுமாம். தொழில்கள் ஆரம்பிக்க வேண்டுமாம். லாபவேட்டையும், சந்தையுமே கருத்தாகக்கொண்டவர்கள் மூலதனம் போடுகிறார்கள்-தொழில்கள் ஆரம்பிக்கிறார்கள் என்றால் அர்த்தம் என்ன? லாப வேட்டைக்கு பச்சை விளக்கு—சுரண்டலுக்கு மாடிப்படி என்பதுதானே.

இல்லை என்றால், உண்மையிலே இவர்கள் தேசத்தின் தொழில்களை வளர்க்க உதவுவார்களா? சென்ற நூற்றாண்டுகளாக நாட்டை தொழில் மயமாக்க மறுத்தவர்கள் என்பது ஒருபுறமிருக்க, இன்று மனம் மாறி உதவுகிறார்கள் என்றால் அதன் விளைவு என்ன? வெள்ளவத்தையிலே நெசவுமில் ஒடுகிறதென்றால் லங்காஷயரிலே மில் மூடப்படுகிறது என்றுதானே அர்த்தம். இலங்கையிலே கனயந்திரங்களும், ட்ராக்டர்களும், சைக்கிள்களுப் [illegible] தயாரிப்பு அனியாய வழியிலே நாடு பிடித்து சாம்ராஜ்யம் கட்டி கொள்ளையடித்து கொடுங்கோலோச்சி வந்தது பிரிட்டிஷ் ஆளும் கும்பல். அடிமை நாடுகளில் அன்னியன் சுரண்டலை—சூதாட்ட ஆதிபத்தியத்தை எதிர்த்து ஆங்காங்கே விடுதலைப் பொங்கெரி மூண்டது மக்கள் விழித்தெழுந்த வேளைகளிலெல்லாம் சூட்டுகொன்று சுடுகாட்டாட்சி நடத்தியது. ஆனால் கரை புரண்டு மடைதிறக்கும் ஏகாதிபத்திய எதிர்ப்பு வெள்ளத்திற்கு மதில் எழுப்ப முடியுமா? மக்கள் சக்திகள் மண்ணைதிர—விண்ணதிர எழுந்தன சாம்ராஜ்யம் பின்வாங்கியது. பணிந்து கொடுத்தது. புதிய ரூபத்தில் அதன் ஆதிக்கம் நிலை நின்றது. அதுதான் காமன்வெல்த்

இதற்குத்தான் பிரிட்டிஷ் ராணியார் சம நாடுகளின் கூட்டு, பல குடும்பங்களின் குடித்தனம், சமபங்காளிகளின் சிகரம் என்றெல்லாம் வேதாந்த விஸ்வரூபம் தருகிறார். நேர்மையாகவோ-நெறிகெட்டோ பிரிட்டிஷ் மக்களுக்கும் காலனி நாட்டு மக்களுக்கும் ஒருவித தொடர்பு பலதலைமுறையாக இருந்து வருகிறது. எனவே இந்த மக்கள் தொடர்பு நேசபாவத்தோடு பரஸ்பர உதவி தகமையோடு நிலைநின்றால், கூட்டு வளர்ந்தால் அதை எந்த நல்லெண்ணம்படைத்த மக்களும் வரவேற்பார்கள். மக்கள் கூடினால் அது சமாதானத்தைப் பேணும்—ஆக்க உலகுக்கு—புத்துலகுக்கு பாதை சமைக்கும். ஆனால் இங்கு யார் கூட்டாளிகள்? அந்த கூட்டின் காட்சியென்ன?

அதற்கு பிரிட்டிஷ் ராணியார் தமது யாத்திரையை ஆரம்பித்த யோக்கியதையைப் பார்ப்போம். முதல்முதலாக பெர்மூடாவில் 'அம்மையார்' கால்வைத்தார். நடந்த அரசாங்க வைபவம்—விருந்துகளில் வெள்ளையர் அல்லாதார்க்கு தடை. பிரயாணம் ஆரம்பித்ததே வர்ண வெறி அட்டகாசத்தோடு. இதுதான் 'இனமத பேதமற்ற' கூட்டுறவின் இலக்கணமா?

காமன்வெல்த் அங்கத்தவர்களான மற்ற நாடுகளைப் பார்ப்போம். ஆபிரிக்காவின் மலான் இந்த கூட்டின் கொருடா. இவன் நாட்டிலே இந்தியரும் ஆபிரிக்க தேசிய மக்களும் காட்டுமிராண்டித்தனமாக நடத்தப்படுகிறார்கள். இனவெறி தாண்டவமாடுகிறது. கறுப்பர்களுக்கு பொதுஇடங்களில் நடமாடுவது, தேர்தல் உரிமை மற்றும் மனு உரிமைகள் எல்லாம் மறுக்கப்படுகின்றன.

ஆஸ்திரேலியாவிலும் இதே காட்சி சொந்த நாட்டு பூர்வீக குடிமக்களுக்கு உரிமைகள் இல்லை. வாழ்வின் சகல துறைகளிலும் ஒதுக்கப்பட்டு வைக்கப்படுகிறார்கள். கனடா, ஆபிரிக்கா, ஆஸ்திரேலியா இந்த நாடுகளில் பெரிய நிலப் பிரதேசமுண்டு. ஆனால் வெள்ளையரைத் தவிர மற்றவர்களுக்கு குடியேற உரிமை இல்லை. காமன்வெல்த்தைச் சேராத வெள்ளை நிறத்தவர்க்கு உரிமை உள்ளபோது காமன்வெல்த் நிலை 'சமபங்காளிகளாக உள்ள மற்ற நிறத்தவர்களுக்கு தலைகாட்டவும் தடை. ஹிட்லரீய இனவெறியையும் வெட்கித் தலைகுனியச் செய்யும் நிலை.

சமீபத்திலே கயனாவில் நடந்தது என்ன? தொழிலாளிகளின் உரிமைகளை பாதுகாக்க விரும்பிய மக்கள் முற்போக்கு ஆட்சிய பிரிட்டிஷ் ஆதிபத்தியம் எதேச்சாதிகாரமாக கலைத்தது.

வெள்ளை முதலாளிகளின்—கரும்புத் தோட்ட உடமையாளர்களின் நலனைப் பாதுகாத்தனர். ஜனநாயகம் தொலைப்பட்டது.

இன்று இந்தியாவிலே, இலங்கையிலே, பாகிஸ்தானிலே மற்றும் ஆசிய நாடுகளிலே முதலீடு போட்டு, தொழிலில் உடும்புப் பிடிவைத்து சுரண்டுகிறது வெள்ளை முதலாளித்துவம். அந்தந்த நாடுகளின் பொருளாதார, தொழில் வளர்ச்சிக்கு முட்டுக்கட்டை போடுகிறார்கள் இந்த 'சமபங்காளிகள்' கெனியாவிலேயும் குடியேறிய ஆசிய மக்களுக்கு உரிமை மறுத்து திமிராடுகிறார்கள் வெள்ளை வெறியர்.

இதுதான் ராணியார் மத்தளம் கொட்டும் 'சமபங்காளிகளின்' சாம்ராஜ்யக கூட்டின் லாவண்யம்.

சமஅடிப்படையில், அன்யோன்ய நட்புறவு வளரவேண்டும் என்று ஏமாற்று வேடம் போடும் ராணியார் வெளிநாடுகளில், காலனி நாடுகளில் தனது பொருளாதார அரசியல் பிடிப்பை வாபஸ் பெற்று, சகல நாடுகளுக்கும் சுதந்திரமளித்து' ஆபிரிக்காவிலே, ஆஸ்திரேலியாவிலே, கெனியாவிலே வெளியாகும் நிறத் திமிரை நிறுத்தி, மலாயாவிலே, கயனாவிலே மனித வேட்டையாடுவதைவிட்டு, மக்களின் ஒற்றுமையிலே உருகும் ஒரு உலகத்துக்காக முன்வருவாரா?

வேண்டுமானால் வெள்ளையர் பிறநாடுகளிலே, கொள்ளையடிப்பதில் சுரண்டல் சூறையாடுவதில், நிறத் திமிராடுவதில் அந்தந்த நாட்டின் 'சிங்மன்ரீ—சியாங்குகளுடன்' பங்காளிகளாக கூட்டாளிகளாக இருக்கலாம். ஆனால் 'இந்த' சமஅந்தஸ்தை வாழ்விலே மக்கள் அனுபவிக்கிறார்களா?

எனவேதான் பொய் வேஷம் பகல் வேஷத்தைவிட்டு ஆசியாவிலிருந்து வெள்ளை ஏகாதிபத்தியம் மூட்டை கட்ட வேண்டும் என்று உலக மக்கள் விரும்புகின்றனர்.

தேசபக்தன் குறிப்பு

'சமபங்காளிகள்' கொண்ட சாம்ராஜ்யத்தின் பௌஷ்

1953 நத்தார் தினத்தில் நடந்த சம்பவங்களில் அதிசயமானது பிரிட்டிஷ் ராணியார் எலிஸபத்தின் பிரசங்கம். தமது பிரசங்கத்திலே பிரிட்டிஷ் காமன்வெல்த்தின் மேன்மையைப் பறையடித்தார். ஜாதி, மத பேதம் துறந்து பல நாட்டு மக்களின் இஷ்டபூர்வமான கூட்டே காமன்வெல்த்தென்று கட்டியம் கூறினர். சம அடிப்படையில்—பரஸ்பர நம்பிக்கை, மதிப்போடு-மாண்போடு கூடி வாழும் ஒரே குடும்பமே காமன்வெல்த் என்று சித்தரித்தார்.

சொந்த நாட்டு மக்களை சொத்தரித்து-நச்சரித்த மன்னர் பரம்பரையின் விட்ட குறை தொட்ட குறையாக உள்ள இவர், பிறநாட்டு மக்களை அடிமைப்படுத்தி நூறுண்டு நூறுண்டாக கட்டியாண்டு சுரண்டிக் கொழுத்த சாம்ராஜ்ய வெறியின் தினையெடுத்த சம்பிரதாயத்திலே வந்த இவர், இன்று அடிமை நாட்டு மக்களின் வீறுகொண்ட விழிப்புமுன் தட்டுத்தடுமாறி—சாகஸம் செய்து புது ரூபத்தில் நிலைநின்று வரும் ஆதிபத்தியத்தின் முடிசூடிய சாம்ராஜ்ய சின்னமான இவர் பழைய பல்லவிகளை மறந்து—மறைத்து புதிய ரூபத்தில் வருவது இயல்பே.

காலனிகளிலும், கூட்டு நாடுகளிலும் மதிப்பிழந்து—பிடிதளர்ந்து, நாடிவிழுந்து வரும் தமது ஆதிக்கத்திற்கு புத்துயிர் அளித்து புது மெருகூட்டவே இன்று பிரிட்டிஷ் ஆளும் வர்க்கம் தனது பிரதிநிதியாக இந்த 'பாவையாரை' முடிசூட்டி பவனி அனுப்பியுள்ளது. எனவே எடுத்த கைங்கர்யத்திற்கிணங்க—சுய பல்லாண்டு பாடுவதில் பிரிட்டிஷ் ராணியார் இறங்குவதில் வியப்பில்லை. ஆனால் இவர் கூறும் 'சமபங்காளிகள்' கொண்ட இந்த சாம்ராஜ்ய கூட்டின் லட்[illegible] தியல்ல [illegible]



உங்கள் வியாதி எதுவானாலும் தீர்த்துத் தருகிறோம்!

நரம்பு பலவீனம், பெலக் குறைவு, குண்டிக்காய், மூத்திரப்பை கோளாறுகள், அசுத்த இரத்தத்தால் ஏற்படும் புண்புறைகள் பற்றுகள், க்ஷயரோகம், இளைப்பு, இருமல், வலிப்பு, தீராத வயிற்றுவலி, வாதம், வயிற்றுக் கோளாறுகள், பித்த காமாலை, ரோகை, பாண்டு, அண்டவாய்வு, இரத்த மூலம், சீழ் மூலம், வெளிமூலம், பெண்களுக்கு ஏற்படும் சூதகக் கோளாறுகள், கர்ப்பக் கோளாறுகள் இன்னும் பல டாக்டர்களால் கைவிடப்பட்ட நாட்பட்ட வியாதிகளினின்று பூரண குணமடைவதற்கு உடனே காலதாமதமின்றி புகழ்வாய்ந்த ஆயுர்வேத டாக்டர் T. H. மதுரநாயகம் வைத்தியராஜ் MD. MS. (H) Cal. அவர்களைக் கலந்தாலோசியுங்கள்.

நாடிப் பரீட்சை இலவம். குணத்திற்கு உத்தரவாதம்!

ஞானசுந்தர வைத்தியசாலை,

T. D. மதுரநாயகம் அன் கோ.

(இலங்கையில் 54 வருஷங்களுக்குமேல் புகழ்பெற்ற இடம்)

187, செட்டியார் தெரு, கொழும்பு—11.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அமர காவியம்

(4—ம் பக்கத் தொடர்ச்சி)

பிடிங்கிச் சேற்றிலே எறிந்து விட்டாய்..... பூ மணி யை நினைத்துப் பார். பருவமறிந் ததுமுதல் உன் அன்பிற்கா கவே தவம் கிடந்தாள். நீ மட் டும் அவளை அலட்சியம் செய் தாய். அவளைப்பற்றிக் கவிதை கட்டி அவமானப்படுத்திஞய். இன்று அவள் வாழாவெட்டி. ஒரு மஞ்சுகர ரோஜாவைச் செடியிலிருந்து பிடிங் கி விட் டாய். அதைச் சாக்கடையில் வீசாதே. அதை மணந்து பார்.....!'

பேசியவள் முன்னி லையில் இருந்திருந்தால். அவளுடைய வாயைப் பொத்திப் பலவந்த மாக நிறுத்தி யிருப் பான் புதுமைதாசன். அல்லது அந்த இடத்தைவிட்டு ஓடி யிருப் பான். ஆனல் பேசியது தசை யும் நரம்பும்கொண்ட ஒருத்தி யல்ல; அவளுடைய குரல் மனத்திலே எதிரொலித் துக் கொண்டிருந்தது. வீண் மனப் பிராந்தி!

கலைந்து குலைந்துபோன சிந்த னையை மறுபடியும் ஒன்று படுத்தி, 'உதிராத மலர்' என்ற கவி தை யைத் தொடர்ந்து எழுத முயன்று கொண்டிருந்தான். முடிய வில்லை. கற்பனை யென்ப து குப்பை மேட்டில் வளரும் கீரையா, நினைத்தவுடன் கிள்ளி கவிதையென்ற சுறி சமைக்க.

அலுப்புடன் பேனை வைக் கீழே வைத்துவிட்டு, மறுபடி யும் சிகரெட் புகையுடன் ஒன் றுபட ஆரம்பித்தான்.

இந்த இரண்டு வருட கால மும், புது மை தாசனைப் பற்றி ப செய்தி களென் றும் மற்றவர்களுக்குத் தெரியாது. பூமணி கலா சாலையைவிட்டுச்சென்ற ஓரிரு தினங்களில் புது மை தாசன் பரீட்சையும் எழுதாது எங்கேயோ போய் விட்டான் என்பதுதான் அவ னுடைய ஊர் மக்களுக்குத் தெரிந்த கடைசிச் செய்தி.

படிப்பை இடையில் நிறுத் திக்கொண்ட அவன், ஒருசில மாதங்கள் நாடோடி யாகத் திரிந்தான். பின்னர் அவன் 'கன்னி' யென்ற பத்திரிகையில் ஒரு உதவி ஆசிரியராக அமர்ந் தான். அன்றிலிருந்து அவன் வாரம் ஒரு கவிதை எழுதும் இயந்திரமாக மாறி விட் டான்.....

புதுமைதாசன் இன்று தோற் றத்தில்அசல்சவிஞனைக் காட்சி தந்தான். சவரம் செய்து பல மாதங்களாகிவிட்டன. நாக தாளிப் பற்றைபோலத் தாடி வளர்ந்திருந்தது. எப்பொழு தாவது துவைக்கப்படும் அழு க்கு உடை. இத ற்கு மேல அவன் தன்னை அலங்கரித்துக் கொள்ள விரும்பவில்லை; அப் படிச் செய்துகொள்ள ஊதிய மும் கிடையாது. பரந்த வானிலே சுதந்திரமாக இன் னிசை பாடிக்கொண்டு பறந்து திரிந்த அவன், பத்திரிகை யென்ற கூண்டிலே அடைக்கப் பட்டிருந்தான். ''செப்பிடு'' வித்தைக்காரனை பத்திரிகை ஆசிரியர் பறந்து காட்டச் சொல்லும் பொழுதெல்லாம் பறந்து காட்டுவதுதான் வேலை. அதுதான் அவனுடைய பிழைப்பு!

மணியைப் பார்த்தான். அப் பொழுதுதான் மூன்று மணி; அந்தச் சிறைக் கூடத்திலிருந்து ''தற்காலிக'' விடுதலைபெற இன்னும் இரண்டுமணி நேர மிருந்தது,

கையிலே பேனுவை எடுத்து மறுபடியும் எழுத முயன்றான்; ஏதோ எழுதி முடித்துவிட்டு காகிதக் கற்றையைக் கட்டி கையிலெடுத்தான்.

★

பத்திரிகைக் காரியாலயத்தி லிருந்து தன்னு டைய குடிசையை நோக்கி நடந்து கொண்டிருந்தான் புதுமைதா சன் அவன் கையிலே பருமனான ஒரு கற்றைக் காகிதங்கள் கா ணப்பட்டன.

ஒரு கார் சத்தம் செய்யாது அவனருகில் வந்து நின்றது. அதிலிருந்து இந்திரனே, அல் லது இந்திர ஜித்துவோ இறங் கியிருந்தாற்கூட அவன் ஆச்சரி யப் பட்டிருக்க மாட்டான். ஆனல் அதற்குப் பதிலாக சிவ நேசர் இறங்கினர்.

நடுக்கத்துடன் ஒருவரை ஒரு வர் பார்த்துக் கொண்டனர் ஒருகண நேரம் மௌனம் நில வியது. பிறகு சிவநேசரே பேச ஆரம்பித்தார்.

''தம்பி; கடந்த சில மாதங் களாக உன்னைப் பார்க்கத்தான் பகீரதப் பிரயத்தனம் செய்து கொண்டிருந்தேன். நேற்றுத் தான் நீ ''கன்னி'' யின் உதவி ஆசிரியராக இருக்கின்ரு யென்ற தகவல் கிடைத்தது .....உன் அப்பாவின் இறு திச் சடங்குகளுக்குகூட நீ வர வில்லை ஏதோ பி. ஏ. பரீட் சைகூட எழுதாமல் ஓடிவிட்டா யென்று ஊரில் பேசிக் கொண் டனர்.....''

அவருடைய குரல் துக்கத் தின் மேலீட்டால் கரகரத்துக் கொண்டிருந்தது. அவன் தனது கண்களில் கசிந்து கொண்டிரு ந்த கண்ணீர் உருண்டு விழக் கூடாது என்பதிற்காக கவனத் தை வேறு பக்கம் செலுத்தி ஞன். அவனுடைய நிலையை அறியாது தந்திக் கம்பியிலே இரண்டு சிட்டுக் குருவிகள் சல் லாபித்துக் கொண்டிருந்தன. குறுக்கும் நெடுக்குமாகக் கார்கள் ஓடிக்கொண்டிருந்தன .....

''தம்பி! ஏன் வீதியில் நின்று பேசுவான்? காரில் ஏறு போ வோம்''

அவன் பேசாமல் ஏறினன்; கார் புறப்பட்டது.

''பூமணி இப்பொழுது.....'' என்று மௌனத்தைக் கலைத்து பேச்சுக் கொடுத்தான் அவன்.

''அது இன்னும் முடிவடை யாத காவியம். இடையில் நிறுத்தப்பட்ட அவளுடைய வாழ்க்கையென்ற கதையைத் தொடர்ந்து எழுதக் கூடிய கவி ஞனைத்தான் தேடித் திரிகின் றேன். யாரோ சில வீணர்கள் கிளப்பிவிட்ட ''புரளி'' யை நம்பி அவள் படிப்பை இடை யிலேயே நிறுத்தும்படி செய்து விட்டேன்.....நான் பல கல் யாணப் பேச்சுக்களை எடுத் தேன். ஆனல் அவள்மட்டும் கல்யாணம் வேண்டாம் என்றே சொல்லிக்கொண்டு வந்தாள். காதல் கீதல் ஏதாவது உண்டா யிருக்குமென்று நினைத்து ''நீ யாரை விரும்பினலும் கல்யா ணம் செய்து வைக்கின்றேன்'' என்றேன். ஆனல் ஒரே பிடி வாதமாக மறுத்துச் சொல்லி விட்டாள். நானும் தொந்த ரவு செய்யவில்லை; அவள் சதா ஏதோ ஏக்கமாக உருகிக் கொண்டேயிருந்தாள். துரும் பாக இளைத்துக் கொண்டிருந் தாள். சில மாதங்களுக்குள் க்ஷயரோகம் பிடித்துவிட்டது .....உடனே சொல்லியி ருந்தாலும் தே வை யில்லை. ஆனல் வியாதி முற்றிய பின் னர்தான் எனக்குத் தெரியவந் தது. டாக்டர்களும் நம்பிக்கை இல்லையென்று கைவிரித்துவிட் டார்கள்.....ஆனல் இரண்டு மாதங்களுக்கு முன்னர் ஒரு நாள் திடீரென உன்னைப் பார்க்க வேண்டும் என்ருள். ஏன், எதற்கு என்று நான் கேட்கவில்லை. அ வ ளு டைய விருப்பத்தை நி ற வேற்ற வேட்டை நாயைப் போன்று உன்னுடைய இருப்பிடத்தை ''மோப்பம்'' பிடிக்க ஆரம்பித் தேன். இன்று உன்னைப் பார்த் ததும் விட்டேன். அவளோ தன் உயிரை நாட்களை எண் ணிப் பிடித்து வைத்துக்கொண் டிருக்கின்ருள். அவளுடைய விருப்பத்தைப் பூர்த்தி செய் வது உன்னுடைய கடமை. உடனேயே ஊருக்குப் போ வோமா?''

அக்கினிமழை ஒய்ந்தது. அவ னையும் அறியாது தலை அசைந் தது; கார் வேகமாக ஓட ஆரம் பித்தது.

''கடந்தகாலம் மகிழ்ச்சியா னது'' என்று ஒரு முட்டாள் தான் சொல்லியிருக்கவேண் டும். இல்லாவிட்டால் கடந்த கால நினைவு புதுமைதாசனை இப்படிச் சித்திரவதை செய்து கொண்டிருக்காது.

★

ஒரு கட்டிலில் பூ ம ணி யென்று அழைக்கப்படும் ஒரு ஒலும்புக்கூடு படுத்துக் கிடந்தது. புதுமை தாசனைக் கண்டதும் அதன் கண்களில் ஒரு கணம் விவரிக்க முடியாத ஒளி யேற்பட்டுத் தணிந் தது. மறுகணம் மலை மலை யாக நீர் கொப்பளித்தது. முக்கி முனகிக்கொண்டு அந்த எலும்புக்கூடு வாயசைத்துப் பேச ஆரம்பித்தது.

''துரை! நான் உங்களைத் தான் மனப்பூர்வமாகக் காத லித்தேன் என்ருல் நீங்கள் நம்ப மாட்டீர்கள். நான் இன்று தான் முதற் த ட வை யாக இதைச் சொல்லுகின்றேன். இறுதித் த ட வை யா கவும் இன்றுதான் என்னல் சொல்ல முடியும். நான் இதை எத்தனை யோ முறை சொல்ல முயன் றும், அதைச் சொல்லி முடிக்க நீங்கள் இடம்தரவில்லை. அன்று நான் விளையாட்டாக ஏதோ சொன்னதை நீங்கள் எப்படி யெடுத்துக் கொண்டீர்களோ. ஆனல் நான் மட்டும் உங்கள் அன்பின் ஏக்கமாகவே இருந் தேன். சுலைமான் சம்பவம் கசப் பான கடந்தகாலம்.....நான் உங்களைத் தவிர வேறு ஒருவ ருடனும் வாழ இயலாது. இன்று நாம் ஒன்ருக வாழ்க்கையை நடத்தவும் முடியாது. ஆனல் என் இறுதிக் கோரிக்கை உங் கள் கவிதை உள்ளத்திலே இந் தப் பேசும் பிணத்திற்கு ஒரு சின்ன இடம் தாருங்கள். அப்

(13—ம் பக்கம் பார்க்க)

மன்னிப்பு! மன்னிப்பு!! மன்னிப்பு!!!

தான் என்ற ஆணவத்தால் மமதையால் நினைத்ததை யெல்லாம் சாதிக்கலாம் என்று நினைக்கும் நெஞ்சழுத்தமில்லாதவர்களுக்கு ஒரு சாட்டை

"மன்னிப்பு" விலை ரூ 1-00.

திராவிடத்தின் தோழியர் அருண்மொழி B. O. L. அழகு மொழி யால் நாடக உருவில் தீட்டப்பட்டது.

தனிப் பிரதி வேண்டுவோர் ரூ 1-10க்கு போஸ்டல் ஓடர், முத்திரை அனுப்பி பெற்றுக்கொள்ளலாம். வி. பி. பி. ஆடர்களும் கவனிக்கப்படும்.

விற்பனையாளர்:
சுபைதா ஸ்டோர்ஸ், 149, ஜப்பட்டா தெரு, கொழும்பு.

பார்! பார்!! பார்!!!

''சமத்துவம், சமத்துவம்'' என்று தமுக்கடிக்கும் ஆண் மகனே, உனது சுயநல சமூகச் சிறையிலே தள்ளப்பட்டு தத்தளிக்கும் உத்தமியாம்.

"இவளைப்பார்!"

பணப்பசியால் துடிதுடிக்கும் பகாசுரத் தந்தையே, புரட்சியின் சங்நாதம் முழங்கும் புத்துலக வாலிபனே

"இவளைப்பார்!"

வாழ்வின் ரஸம் ததும்பும் யௌவனத்தை, எழிலை, விஷம்போல் எண்ணி எண்ணி கண்ணீர்விடும்

"இவளைப்பார்!"

வெளிவந்துவிட்டது! விறுவிறுப்பாக விற்பனையாகிறது!

அறிஞர் அப்பாஸ் எழுதிய

"இவளைப்பார்"

கற்கண்டு தமிழிலே கருத்துள்ள வசனங்கள்
கவர்ச்சிகரமான அட்டைப்படம்

விலை ரூபாய் ஒன்று. விற்பனைக்கழிவு உண்டு.

ரூபாய் 1-15க்கு ஸ்டாம்புகள் அனுப்பிப்பெறலாம்

மோகன் அன் கம்பெனி லிமிட்டெட்;
151, செட்டியார் தெரு, கொழும்பு

வாழும் நாடும் பேசும் மொழியும்....

(5-ம் பக்கத் தொடர்ச்சி)

9 தமிழ் மொழியைப் பிற மொழியாளர்க்கும், தமிழ் நாட் டைப் பிறநாட்டார்க்கும் அடி மைப்படுத்துவதைக் கண்களை விலை கூறி விற்பதற்கும், அதன் மூலம் பட்டம் பதவி, பணம், சலுகை முதலியவைகளைப் பெறு வது சிலருக்கு வாங்கும் செயலுக் கும கவிஞர் ஒப்பிட்டுக் காட்டியி ருப்பது உற்றுணரத்தக்கது

10 கண்கள் இரண்டையும் வி ற் றுச் சி த்திரங்களை வாங்கும் மனித னும், நாட்டை, மொழியை விற் றுப் பட்டம் பதவிகளைப் பெறும் மனிதனும் ஒரே இனம் என்றும், இவர்களது அறிவு ஒரேதன்மை யுடையது என்றும். இவர்களது செயல் எப்போதும் நகைக்கத் தகுந்தது என்றும கவிஞர் இப் பாடலில் நன்கு விளக்கிக் கூறி யிருக்கிறார்.

11 கண்களை இழந்தவன் தான் பெற்ற சித்திரங்களால் எவ்வாறு பயனடையமாட்டானோ, அவ் வாறே நாட்டையும் மொழியை யும் இழந்த எவனும் தான்பெற்ற பட்டம பதவிகளால் பயனடைய மாட்டான் என்பது கவிஞர் கூரு மற் கூறியுள்ள ஒரு உயர்ந்த கருத்து.

12 "வாய்மூடி நகைத்தால் என்ன? உதடுகளைப்பிரித்து நகைத் தால் என்ன? நான் தான் கண்களை இழந்துவிட்டேனே! அது எனக் குத தெரியவாபோகிறது?" என்று எவனுவது ஒருவன் கேட்டுவிடுவா னும். அதற்காகக் கவிஞர் "தம்பி! உனக்குக் கண் இல்லாவிட்டா லும் காது இருக்கிறது. அதன் வழியாகவாவது ஒசையைப் புகுத்தி, தாம் பழிப்பதை உனக்கு உணர்த்திவிடுவார்கள்" என் ற கருத்தை அமைத்தே **கைகொட் டிச் சிரியாரோ!** என்று கூறியிருக் கிறார். இன்றேல் **கண்டவர் சி ரியாரோ** என்று கூறியிருக்கக் கூடும்.

13 கண்களைப் பறிகொடுத்து சித்திரம் வாங்கும் தவறும் நாட்டை, மொழியைப் பறி கொடுத்துப் பட்டம் பதவி பெறும் தவறும் மன்னிக்க முடி யாத தவறுகளாகும். இத்தகைய மகாபோன்ற தவறுகளைச் செய் யும் மக்களை அடித்து, உதைத்துத் திருத்த எண்ணுமல், நகைத்துப் பழித்துத் திருத்த எண்ணிக் கூறி யிருப்பதாவது கவிஞரின் பண் பட்ட உள்ளத்தைப பின்னும் உயர்த்திக் காட்டுகிறது.

14 தமிழ் நாட்டில் வாழ்ந்து கொண்டே தமிழ் மொழியைப் பேசிக்கொண்டே பெற்ற நாட் டையும், வளர்ந்த மொழியையும் பிற மக்களுக்கு விலைகூறி அதன் மூலம் வாழ வழி வகுத்து வழி நடை நடக்க எண்ணும் மக்களுக் குக் கவிஞன் பாரதியின் சொல் லடி ஒரு நல்லடியாக அமைந்தி ருப்பதை எண்ணி எண்ணி மகி ழக்கூடிய ஒன்ருகும்.

15 உயர்ந்த அறிஞர்களால் நகைக்கத் தகுந்த இழிந்த மக்கள் இன்றையத் தமிழகத்திலிருந்தா லும், பாரதியின் அடிகளால் நல் லுணர்ச்சி பெறுவதன்மூலம் எதிர் காலத் தமிழகத்தில் எவரும் இருக் கமாட்டார்கள் என்றே எண்ணுகி றேன். இதைக் கண்ணுறும் அன் பர்களும், நாட்டை ஒரு கண்ணுக வும், மொழியை ஒரு கண்ணுகவும் கருதுகின்ற நல்ல தமிழர்கள்

அடங்கிய எதிர்காலத் தமிழ கத்தை விரைவாகக் காண ஆசைப்பட வேண்டும் எனவும் வேண்டிக்கொள்ளுகிறேன்.

வாழ்க தமிழ் மொழி!
வாழ்க தமிழ் மக்கள்!!
வாழ்க தமிழ்த்திரு நாடு!!!

நேதாஜி அஸ்தி இந்தியா வரும்

ஜப்பானிலுள்ள ஒரு ஆல யத்தில் வைத்திருக்கப் பட்டுள்ளதாக கூறப்படும் நேதாஜியின் அஸ்தியை இந்தி யாவுக்கு கொண்டு வருவதென் றும், பிரமாண்டமான ஞாப கார்த்தக் கட்டடம் (தாஜ் மஹால்போல) எழுப்பி அதில் நேதாஜியின் அஸ்தியை வைக்க வழிமுறைகள் வகுப்பது பற்றி யும் இ. தே. ராவின் நிர்வாகக் கமிட்டி பரிசீலனை செய்து வரு வதாக தெரிய வருகிறது.

அடுத்த ஜனவரி 28ந் தேதி இந்திய தேசிய காங்கிரஸ் மகாசபையில் நேத்தாஜி ஞாப கார்த்தமாக நடக்கப் போகும் வைபவத்திற்கு முன்பு, நேதா ஜியின் அஸ்தியையும், இதர நினைவுச் சின்னங்களையும் இந்தி யாவுக்கு ஜப்பானிலிருந்து கொண்டு வரும்படி இந்திய அர சாங்கத்தை கேட்பதென்றும் ஒரு யோசனை இ. தே. ரா. வட்டாரத்தில் கிளம்பியிருக் கிறது. இதுசம்பந்தமாக இந் திய அரசாங்கம் உதவி அளிப்ப தாக வாக்குறுதி கொடுத்திருப் பதாக தெரிய வருகிறது.

நேதாஜியின் அஸ்தியைக் கொண்டுவர ஏற்பாடு செய்வ தன் முன்பு இந்தியா முழுவ தும் மக்களின் ஆதரவைத் திரட்டவும், சகல அரசியல் கட்சிகளின் ஒத்துழைப்பைப் பெறவும் முயல்வதென்று இ. தே. ரா. நிர்வாகக் கமிட்டி உத்தேசித்திருக்கிறது.

நேதாஜி சுபாஷ் சந்திர போஸ் 1945ல் ஜப்பானில் நிகழ்ந்த விமான விபத்தில் இறந்தாரென்று பல தடவை கள் உத்தியோக பூர்வமான அறிக்கைகள் வெளியாகி இருந் தும் நேதாஜியின் பக்தர்கள் அதை நம்ப மறுத்தனர். எங் கோ தனி இடத்தில் இருந்து கொண்டு உலக நடவடிக்கை களையும், இந்திய விவகாரங் களையும் கவனித்துக் கொண்டி ருக்கிறார், ஒரு நாள் திடீ ரென்று தோன்றுவார் என்று அவர்கள் பிரச்சாரம் செய்து வந்தனர்.

—

காதிமார் சபை

முறையிட்டு நிரல் 16—1—54
காலை 10 மணி

தீர்ப்பளிப்பதற்கு

முறையீடு: 553. கும்பனித் தெரு, காதிக்கோட்டு வழக்கு இலக்கம்:5726, வாதி: அப்துல் கனி ஜக்கியா உம்மா, பிரதி வாதி: இப்ராம்ஸா முஹிதீன் அடுமை, பராமரிப்பு, முறை யீடு அனுமதிக்கப்படுகிறது.

முறையீடு: 555. கும்பனித் தெரு, காதிக்கோட்டு வழக்கு இல: 5734, வாதி: ஷெய்க் பரீத் சித்தி பாத்திமா, பிரதி வாதி: முகம்மது ஸாலி அப்துல் ஜலீல், பராமரிப்பு: முறையீடு அனுமதியளிக்கப்படுகிறது.

விவாதத்திற்கு

முறையீடு: 558. கும்பனித் தெரு, காதிக்கோட்டு வழக்கு இல:5721, வாதி: ஜுராம்பதி ஜெனிமேஹர் பிரதிவாதி: அஹமத் ஹாதி ஸுபி இஸ்மா யில் பாஷா, விவாகரத்து முறை யீடு மறுக்கப்பட்டது.

முறையீடு: 559. கரவாகு, காதிக்கோட்டு இல: 5658, வாதி: அ ஹ ம து லெப்ப நஹ ரும்மா. பிரதி வா தி: மீராசாஹிபு முஹிதீன் பாவா, பராமரிப்பு, முறையீடு அனு மதிக்கப்பட்டது.

முறையீடு: 560. சம்மாந் துறை, காதிக்கோட்டு வழக்கு இல: 1472, வாதி: அலியார் ஆசியா உம்மா, பிரதிவாதி: சினித்தம்பி ஆதம்பாவா, பரா மரிப்புத் தொகை தீர்ப்பு.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அமர காவியம்

(12–ம் பக்கத் தொடர்ச்சி)

படி உங்கள் உள்ளத்தில் இடம் தரும்பட்சத்தில், நான் உங்கள் மீது கொண்டிருந்த அழிவுறுத தூய காதலைப்பற்றி ஒரு காவியம் எழுதவேண்டும். அந்தக் காவியம் என்றும் அதியற்புத காதற் காவியமாக, அமர காவியமாக விளங்க வேண்டும்....."

பூமணி பேசிக்கொண்டிருக்கும்போதே புதுமை தாசன் பொறுமை இழந்தவனாக வாய் குழறினான். அவன் கண்களும் தாரையிடவாரம்பித்தன.

அவன் கூறினான்: "பூமணி, என்னை மன்னித்துவிடு. நான் உனக்கு பெரிய துரோகம் செய்துவிட்டேன். என் விளையாட்டு உன் வாழ்வுக்கே வினையாக முடிந்துவிட்டது. உன் தூய உள்ளத்தை ரீட்டா என்னிடம் வெளியிட்டாள். அன்றே பயித்தியம் பிடித்தவனாக நான் சர்வகலாசாலையை விட்டு வெளியேறினேன். உன்னை நான் மீண்டும் சந்திப்பேன் என்று எண்ணவில்லை. ஆயினும் என் உள்ளத்தையும் உன் தூய காதலையும் பிரதிபலிக்கும்படியான ஒரு காவியத்தை எழுதி முடித்திருக்கிறேன். இதோ அதன் கையெழுத்துப் பிரதிதான் இது. காவியத்தின் பெயர் "உதிராத மலர்....."

'எழுதிவிட்டீர்களா, துரை? என் ஆசையை ஏற்கனவே தீர்க்கதரிசனத்தோடு நிறைவேற்றி விட்டீர்களா. எங்கே படியுங்கள், படியுங்கள்: நான் கேட்கட்டும்' என்றாள் ஹீனத்தொனியில் பூமணி. புதுமைதாசன் படித்தான்; பூமணி கேட்டுக்கொண்டேயிருந்தாள்.

படித்து முடிந்ததும் "பூமணி!....." என்று விழித்தான் புதுமைதாசன்.

"துரை! நீங்கள் சிருஷ்டித்திருப்பது அமரகாவியம்!" என்றன பூமணியின் வாடிய அதரங்கள். அவ்வளவுதான். அதற்குப் பின்னர் அவள் பேசவில்லை; பேசவேயில்லை. அவள் பேசாத பிணமானாள்.

அந்த இடத்திலேயே காகிதக் கற்றையைப்போட்டுவிட்டு எழுந்து கவிழ்ந்த தலையுடன் நடக்கலானான் கவிஞன் புதுமைதாசன். நடந்தான். நடந்தான். எங்கோ நடந்து மறைந்தான்!

★

இதுவரை பத்தாயிரம் பிரதிகள் விற்றுவிட்டதாக பத்திரிகைகளில் விளம்பரம் செய்யப்படுகிறதே கவிஞர் புதுமை தாசனின் "உதிராத மலர்" என்ற காதல் காவியம். அந்த அமரகாவியம் பிறந்த கதை இதுதான்.

பழிக்குப் பழி.....

(10–ம் பக்கத் தொடர்ச்சி)

ணின் மணிபோல் வைத்துக் காட்பாற்ற வேண்டுமென்பதுதான் என் ஆவல்" எனக் கூறினார். அவரது உள்ளம் அவன்சம் மதத்துக்காகக் படபட என அடித்துக்கொண்டிருந்தது கண்கள் அவர்கள் இருவரையும்மாறி மாறிப் பார்த்தன. இளைஞனின் உதட்டின் அசைவை— உள்ளத்தின் தன்மையை அறிய ஆவலாய் இருந்தார்!

'நான் ரோஸியை இருதயத்தின் கீதமாக, மலரின் மணமாகவைத்து ஏற்று இன்ப வாழ்வு நடத்துவேன்; தாங்கள் கவலைப்பட வேண்டாம் அவள் நிலவு நான் ஒளி" என்றதும் கிழவனின் அதரங்கள் புன்னகைப் பூக்க ஆரம்பித்தன.

ஆனால் அவரது ஆசை மீறி மோசம் செய்து விட்டது. ஆ! என்ற துடிப்புடன் விலாவைப் பிடித்தார். ரோஸியும் இளைஞனும் பீறிட்டு வரும் இரத்தத்தை பல வகையில் தடுக்க முயன்றும் பலன்தரவில்லை. இரத்த ஓட்டம் அதிகரித்து விட்டது. கிழவன் நிம்மதியாகக் கண்களைமூடினார். ரோஸியும் இளைஞனும் கிழவனின் உடலை மூடி கண்ணீர் முத்துக்களை அவர் மீது தெளித்தனர்.

பாதுகாப்பும் நம்பிக்கையும் பெற

வான்கார்டு

ஸ்தாபனத்தில் இன்ஷியூர் செய்துகொள்ளுங்கள்.

மோட்டார், ஆயுள், தொழிலாளர்களுக்கு நஷ்டஈடு முதலிய இன்ஷியூரன்ஸ் திட்டங்கள்

பிரதம ஏஜண்ட்: கே. கிருஷ்ணஸாமி

வான்கார்டு இன்ஷியூரன்ஸ் கம்பெனி லிமிட்.,

மன்சூர் பில்டிங், மெயின் வீதி, கொழும்பு.

போன்: 5054. தபால் பெட்டி: 1111. தந்தி: GUARDIAN.

மகத்தான 2-வது வாரம்!

முருகன் டாக்கீஸ் [ஜிந்துப்பிட்டி]

தினசரி மாலை 6-00, இரவு 9-30 மணிக்கும்
சனி, ஞாயிறு பிற்பகல் 2, மாலை 6, இரவு 9-30 மணிக்கும்
ஞாயிறு காலை 10-00 மணிக்கும்

ரேவதி ப்ரொடக்ஷன்ஸ்

"மனிதனும் மிருகமும்"

(தமிழ்)

சிவாஜி கணேசன், மாதுரிதேவி, சாரங்கபாணி, ராமச்சந்திரன், எம். என். ராஜம் திறம்பட நடித்தது.

நடனம்: குமாரி [பேபி] கமலா

கதை, வசனம், பாட்டு: எஸ். டி. சுந்தரம்

பின்னணி: வசந்தகுமாரி, ஜிக்கி, ராஜா ஜெயராமன், மாரியப்பா

டைரக்ஷன்: வேப்பு & சுந்தரம்

போஷாக்கை கொடுக்கிறது

நெஸ்டோ மோல்ட்

(மோல்ட்டெட் மில்க்)

சுகவீனத்திற்குப் பிறகு உடல் பலத்தைத் துரிதப்படுத்துகிறது.

விட்டமின் பி 1 சத்து சேர்த்து பலப்படுத்தப்பட்டுள்ளது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

திரும்பிப் பார்

தமிழ் என்றுணினைம என்று சொல்லும் தமிழன் தன்மானத் தோடு வாழ்ந்தவனை அல்லது தரித் திரத்தில் தாண்டவமாடினவனை என்று.

பட்டினியாக வாழ்ந்தவனல்ல தமிழன். தனி டரவசத்துடன் வாழ்ந்தவன் தமிழன்! வீணர்களைத் தமிழ் வாலிபர்கள், வேல் பிடித்து போருக்குச் சென்ற வீரர்கள். பாலகனிடம் வில்லும் வேலும் கொடுத்துபோருக்குச் செல்லடா மகனேஎன்று செப்பினாள் ஒரு தாய். போரிலே உன் முன் புறமுதுகுகாட்டி இறந்தான் என்று ஒருவன் உரைத்தான். அஃது உண்மையாயின் அவனுக்கு பாலூட்டிய மார்பகத்தை அறுத்தெறிவேன் என்று வீர மொழி விசைந்தாள். போர்களத்திற்குச் சென்றாள். மகன் மார்பில் ஈட்டி இருப்பதைக் கண்டு மனங் களித்தாள்.

அந்தப் பரம்பரையிலே வந்த தமிழா நீ பட்டத்துக்காக பல்லைக் காட்டுவதேன்! பதவிக்காக பாதத்தை பிடிப்பதேன்! உடந்தை விட்டால் உப்பரிகை என்! ஏழை ஏமாற்றுவதேன்! பணத்துக் காக மண்பை மறப்பதேன்! சல்விக்காக சதி செய்வதேன்!

சிந்தித்துப் பார் தமிழா! தீவிர மாகச் சிந்தித்துப் பார்! உன் மூதாதையர்களைப்பற்றி திரும்பிப் பார்! சிரிக்க வேண்டாம் தமிழா! நன்றாகச் சிந்தனை செய்து பார்! அழவேண்டாம் தமிழா, அறிவைப் பெருக்கிப் பார்! கோபப்பட வேண்டாம் தமிழா, கோழைத் தனத்தை விட்டுப் பார்! ஆத்திரப் படாதே தமிழா, உன் அன்பை அளவிட்டுப் பார்!

கடைசியாக திரும்பிப் பார்! சிந்தித்துப் பார்! திரும்பத்திரும்ப சிந்தித்துப் பார்!

ப. இராமலிங்கம்
மகாத்மா கார்திஞாபகக்
கல்லூரி. கண்டி

முயற்சி உயர்ச்சி தருமா?

கடந்த 27-12-53ல் வெளியான "சுதந்திரன்" மாணவர் மன்றப் பகுதியில் பேகம் வஸீலா எழுதிய "முயற்சி தந்த உயர்ச்சி" என்ற கட்டுரையை வாசித்த பொழுது முயற்சி உயர்ச்சி தருமா என்ற கேள்வியன் உள்ளத்தில் எழுந்தது. முயற்சி உயர்ச்சி தருமா? என்று எந்த ஓர் சாதாரண மனிதனைப் பிடித்துக் கேட்டாலும் "ஆம்" என்றே சட்டெனப் பதிலளிப்பான். "முயற்சி" என்று நாம் பேசிக்கொள்ளும் அதே தோரத்தில் "விதி" என்று ஒன்று இருக்கின்றதா என்பதைச் சற்று ஆராய வேண்டும். அப்பொழுதான் "முயற்சி உயர்ச்சி தருமா!" என்ற கேள்விக்குச் சரியான பதிலைக் கண்டுபிடிக்கலாம்.

"இன்றைய நாட்களிலே அநேகர் முயற்சி எனும் மாளிகையை விதி எனும் இரும்புக் கதவால் மூடுகின்றனர். முயற்சி என்ற சொல் நம்மிடையே நிலவும் பொழுது விதியெனும் வார்த்தைக்கு வேலையில்லை" இவ்வாறு தோழி வஸீலா கூறுகின்றார்.

உலகில் ஒருவன் வெற்றியடைவதும் வீழ்ச்சியுறுவதும், தரித்திரனைப்போவதும் தனவந்தனாக மாறுவதும், அவனவன் விதிப்படியே, அதாவது ஊழ்வினைப்படியே என்று அஸ்தீக உலகம் வற்புறுத்தும். நாஸ்தீக உலகம் பிரஸ்தாப வார்த்தைக்கு எதிர்க்கும் "உலகச் சரித்திர ஏட்டின் எந்தப் பக்கத்தைப் புரட்டிப் பார்த்தாலும் அந்த வாழ்க்கையில் வெற்றி பெற்று தங்களின் பெயர்களைப் பொன் எழுத்துக்களால் பொறிக்கச் செய்தது அவர்கள் மேற்கொண்ட இடைவிடா முயற்சியே" என்றும் கூறுவர்.

இது இங்ஙனமிருக்க "தெய்வத்தால் ஆகாதெனினும் முயற்சிதன் மெய்வருந்தக் கூலிதரும்" என்று வள்ளுவர் கூறியிருப்பதை பேகம் வஸீலா சுட்டிக்காட்டுகிறார். அப்படியானால் அதே வள்ளுவர் "ஊழிற் பெருவலி யாவுள மற்றொன்று சூழினுந் தான்முந் துறுய" என்று கூறுவதின் கருத்தென்ன! முயற்சிக்கு முதலிடமளித்த குறளடியார் ஊழுக்கு அதைவிட மேலான இடமளித்திருப்பதேன்.

இன்னும் "கலா", "நஸீபு" என்ற பதங்கள்மூலம் இஸ்லாமிய மதத்தில் "விதி" சுட்டிக்காட்டப்படுகின்றது. "இறைவன் நாட்டமின்றி எதுவும் நடக்காது" என்பதை எந்த ஓர் முஸ்லிமும் மறுக்கமாட்டான்.

பொதுவாகச் சொல்லப்புகின் உலகிலுள்ள எல்லா மதங்களும் "யாவும் ஆண்டவன் விருப்பப்படியே" என்ற வாக்கியத்திற்கு முதலிடமளிக்கின்றன.

"விதி" என்ற பதத்தை மேலெழுந்தவாரியாகப் பார்க்கும் பொழுது "இறைவன் நாட்டப்படி" என்பது புலனாகின்றதல்லவா? ஒருவன் ஏழ்மைக்கு மாளிகையில் சொகுசான வாழ்க்கை நடத்துகிறான். இன்னொருவன் உண்ண உணவின்றி ஓட்டைக் குடிசையில் வாழ்கின்றான். இவர்களை யெல்லாம் பார்த்து "விதியின் பயன்"—"ஊழின் வினை" என்று கூறுவதில் என்ன தவறு இருக்கின்றது? இதைத்தான் 'தலையெழுத்து'—"விதி" என்று சாதாரணமாக அழைக்கப்படுகின்றது.

தோழி வஸீலா, "முயற்சிதந்த உயர்ச்சி" என்ற தனது கட்டுரையின் மூலம் பாடசாலை மாணவர்களின் வெற்றியைப்பற்றி கூறுகின்றார். மாணவர்கள் முயற்சியில் தன்னுயிரை மாய்த்திருக்கலாம். ஆனால் அவரின் விதி அப்படியிருந்திருக்க வில்லையே!

"விதி"யென்பது சோம்பேறிகளால் கட்டியெழுப்பப்பட்ட ஓர் "காட்போட் மாளிகை" என்று இலகுவாகக் கூறிவிடலாம். ஆனால் மதங்கள்-மக்களின் மறுமலர்ச்சிக்கு வழிவகுத்த நல்மார்க்க ஏடுகள் வற்புறுத்துவதின் காரணமென்ன!

முஹம்மது

வங்க நாட்டுக் கவிக் குயில்

வங்க நாட்டிலே பிறந்து, வங்க நாட்டிலே வாழ்ந்து உலகெங்கும் புகழ் மணம் பரப்பிய கவிதைக் குயில் மகாகவி ரவீந்திர நாதர் வங்காள நாட்டமூலை கல்கத்தாவில் 1861-ம் ஆண்டு பிறந்தார். இவர் குடும்பம் பல வகையாலும் அந்நாட்களில் சிறப்புற்றேங்கி விளங்கியது. இவருடைய தந்தையார் மகரிஷி தேவேந்திரநாத தாகூர் ஆவர். இவர் குணத்தில் சிறந்து விளங்கிய காரணத்தால் "மகரிஷி" என்னும் பட்டத்தைப் பெற்றார்.

தாகூர் இளமையில் பாடசாலைக் கல்வியை அதிகம் விரும்பவில்லை. அவருள்ளம் இன்னிசைக் கவிதைகளைப் படிப்பதிலும், பாடுவதிலும் ஈடுபடலாயிற்று. இவர் தமது இன்னிசையில் தேச பக்தியை கேட்போருக்கு அள்ளிக்கும் தன்மையாகப் பாடினார். படிப்படியாக இவரது கவிதை ஊற்றுக்கள் இயற்கைச் சிறப்புக்களையும், உயர்ந்த தேச பக்திக் கருத்துக்களையும் சமரச சன்மார்க்கக் கொள்கைகளையும் சேர்த்துக் கவிதைச் செல்வங்களாக மிளிர்ந்தன. "தோஞ்சலி" ஒப்புயர்வற்ற நூலை வங்க மொழியிற் பெயர்த்து எழுதிடவும், அவரது புகழை பெருமையைப் பல நாட்டு மக்களும், மன்றங்களும் வியந்து பாராட்டினர். உலகில் வியந்து பாராட்டினர்—உண்மையில் கவி பாடும் சக்தி வாய்ந்த புலவர்களுக்கு வழங்கும் "நோபல்" பரிசை 1913-ம் ஆண்டு தாகூருக்கு வழங்கினர்கள். ஆனால் இவர் அந்தப் பரிசை உலகையே தான் நடாத்தி வந்த பெல்பூர் என்னுமூரில் "விசுவபாரதி" என்ற கலைகள் வளரும் பல்கலைக் கழகத்திற்கே நன்கொடையாகக் கொடுத்தார். பல்கலைக் கழகம் இருவருக்கு இலக்கிய கர்த்தா என்னும் "டாக்டர்" பட்டத்தை அளித்தது. இந்திய அரசாங்கமும் இவரது திறமையைக்கண்டு இவருக்கு "சேர்" பட்டம் வழங்கியது. கற்புகழ்ச்சியற்ற இவர் அவைகளை வேண்டாமென உதறித்தள்ளினார். கவிதாகூர் அமைத்த விசுவபாரதி என்ற பல்கலைக் கழகம் இன்றும் நடைபெறுகின்றன. அதைச் "சாந்தி நிகேதன்" என்றும் ஆச்சிரமம் என்றும் அழைக்கின்றார்கள்.

இன்றைய தமிழகத்துக்கு மறுமலர்ச்சியளிக்கும்—வளர்த்த தாகூரின் கீதாஞ்சலி தமிழ் இலக்கியக் கலைக்கு புதுமலர்ச்சி யளிக்கும் இலக்கியச் செல்வம் என்று சொன்னால் கூட மிகையாகாது. தமிழ் அன்னைக்குப் பெருமையளிக்கும்—வீறு பெற்ற இலக்கியக் கவி சமைத்த கவி வள்ளல் 1941 ம் ஆண்டு ஆகஸ்டு மாதம் 7-ந் திகதி தமது பிறந்த பொன்னாட்டில் உயிர்துறந்தார்.

வாழ்க தாகூர்! வாழ்க தாகூர்!!

—'தமிழ் நேசன்'

நல்லூர்,
யாழ்ப்பாணம்

அறிவுக் கவஞ்சியம்

உண்மை அன்பு

ஒருவனது உள்ளம் ஒரு பேனை. இந்தப் பேனையைத் திறப்பதற்கு அன்பு எனும் சாவி வேண்டும். அப் பொழுதுதான் இந்தப் பேனையில் உள்ள உண்மைப் பொருளை அறிய முடியும்.

சிலர் பொய்ச் சாவிகளின் உதவியால் இந்தப் பேனையைத் திறந்தும் விடுவார்கள்: என்றாலும் சில பேனைகளைத் திறக்க இவர்களால் முடிவதில்லை! காரணம்!.....!.....! அந்தப் பேனைகளை 'அறிவு' காவல் காக்கிறது.

***

அறிவும் அனுபவமும்

நல்லவன் தன்னுடைய அறிவை இழக்கும்போது கெட்டவனாகின்றான். கெட்டவன் அனுபவத்தைப் பெறும்போது நல்லவனாகின்றான்.

முன்னவன் அறிவை இழந்து அழிகின்றான்; பின்னவன் அனுபவத்தைப் பெற்று வாழ்கின்றான்.

***

சொல்லும் செயலும்

ஒருவனது சொல்லைக் கேட்டதும் உடனே அவனை ஒரு அறிவாளியாக மதித்து விடுகிறேன்.

இதனால் எனக்கு அறிவு—இருக்கிறதா, என்பது அவனுடைய சொல்லுக்கேற்ற) செயலைப் பொறுத்திருக்கிறது.

***

அணை போடுபவர்கள்

புகை பிடிப்பவன் புகைக்கும் போதுதான் தன்னுடைய தூர்ப் பழக்கத்தை உணர்ந்து, "இதற்கு விரைவில் முற்றுப் புள்ளியிட வேண்டும்" என்று எண்ணுகின்றான்.

குடிகாரன் வெறிக்க வெறிக்க குடித்துவிட்டு குடி வெறியால் மனைவி மக்களை அடித்த பிறகுதான் தன்னுடைய தகாத செயலை நினைந்து, "இனிமேல் குடிக்கக் கூடாது" என்று சபதமிட்டுக் கொள்ளுகின்றான்.

காமவெறியன் கணிகையர் வீட்டுக்குச் சென்றுவிட்டு திரும்பும் போதுதான் தன்னுடைய சிற்றின்பத்தின் சோர்வை உணர்ந்து, "இன்று முதல் இந்தச் செயலில் நான் ஈடுபடுவதில்லை" என்று தன்னுடைய மனத்தை உறுதிபடுத்திக் கொள்கிறான்.

இவர்களில் முன்னவன், ஆற்றிலே நீர் வரப் போவதை உணர்ந்து அணைபோட எண்ணுகிறான்!

பின்னவன், ஆற்றிலே நீர் வந்து கொண்டிருக்கும்போது அணை போட முயல்கிறான்.

அடுத்தவன் ஆற்று நீர் சென்ற பிறகு அணை போட பார்க்கிறான். இதுதான் இந்த மூவருக்கும் உள்ள வேறுபாடு!

வீர. சோழ. சண்முகம்

106, பஜார் வீதி
கொஸ்லாந்தை

ஒன்று சேர்க

(ஆரையம்பதி அமரசிங்கம்)

ஒன்று சேர்க ஒன்று சேர்க
என்று கொட்டு பேரிகை
இன்று தமிழர் ஒன்று சேர்க
என்று கொட்டு பேரிகை

மாறுபட்டு வேறுபட்டு
கூறுபட்ட கொடுமையால்
ஊறுபட்ட ஏழ்மைப்ப
விறுகெட்டு வாழ்பவர் (ஒ. சே.)

துட்டசக்தி திட்டமிட்டு
வட்டமிட்டுப் பார்க்குது
விட்டுவைக்கும் கட்டமல்ல
விட்டிலிருந்து பேசிட (ஒ. சே.)

நிலைகுலைந்து தலைகுனிந்து
நின்றகாலம் சென்றது
நிலைநிறுத்தித் தலைநிமிர்ந்து
நிற்கும் காலம்வந்தது (ஒ.சே.)

ஐக்கியத்தின் சக்திகூட்டி
பக்கபலம் கொண்டுநம்
சிக்கறுக்க இக்கணமே
திக்கெலாம் திரண்டிட (ஒ.சே.)

கண்டகண்ட இடத்திலே
பண்டைப் புகழ்பாடியே
தொழைடை கிழியக்கத்திடும்
தொண்டர் சண்டை
போக்கியே (ஒ. சே.)

தமிழர்மீது தமிழின்மீது
சவாரிசெய்ய எண்ணுவோர்
தவறுகாட்டித் தவறுபோக்க
தமிழர்இந்த நாளிலே (ஒ.சே.)

புதுமையூட்டு நமதுநாட்டுப்
பொதுமை காட்டும்பொங்கலில்
பதுமையான பதவிவிட்டு
சமதையாக வாழுவோம்

நர்கிஸ் நகைகளை...

(3-ம் பக்கத் தொடர்ச்சி)

தில் ரூ 70000 போட்டு தமதுபடத் தயாரிப்பிற்கு நஷ்டமடைந்தார். சைகாலின் "ஷிகாஸ்ட்" க்கு முதலீடு தந்தார் நாளினி ஜெயவந். இது வெறும் தோல்வி கண்டது.

தயாரிப்பாளர்களாக மாறிய நடிகர்களின் இந்த பரிதாப "நாடகத்தின்" காரணம் என்ன? ஏற்கனவே கூட்டுச்சேர்ந்த உற்பத்தியாளர், வினியோகஸ்தர்கள், படக்காட்சியாளர்களின் கூட்டுச் "சதி" தான் இது என்று தெரிய வருகிறது. நடிகர் தயாரிக்கும் படம் வெளிவந்ததும் வினியோகஸ்தர்கள், படக்காட்சியாளர்கள் "கயிறு" இழுக்க ஆரம்பித்து விடுகிறார்களாம்.

படத்தொழிலே இட்டமிடாமல், நடிகர்களின் சொந்த லாபத்திற்காக தயாரிப்பு என்றுள்ள நிலை மாறாமல் இத்தச் சாபக்கேடு நீராது. நல்ல கலைகள், நல்ல பாணியுடன், உயர்ந்த நோக்கங்களுடன் கலை ஸ்தாபனங்களின் சார்பாக, மக்கள் ஆதிக்கத்தின் கீழ் வெளிவர வேண்டும். அப்பொழுதுதான் நர்கீஸ்களும், நிம்மிகளும் காது கைகளில் கணி செய்யும் ஆபரணங்களை "கிரையோ கிரை" என்று ஏலம்போடும் நிலை தொலைந்து சினிமா உலகிலே என்றும் மின்னிடும் நட்சத்திரங்களாக திகழ முடியும். நல்ல கலைகளை—செழிப்புடனும் சீருடனும் வளர்க்க முடியும்.

—"பிலிம்"

அச்சு வேலைகள்

எதுவானாலும் சரி உடனே அவற்றை
'சுதந்திரன்' அச்சகத்திற்கு
அனுப்பிவையுங்கள்.

சுதந்திரன் அச்சகம்
194 ஏ, தட்டா தெரு, கொழும்பு 12.

பூரணதி லேகியம்
(ரிஜிஸ்டர்: 7761)

உபயோகிப்பவர்களின் வசதியை முன்னிட்டு இலங்கையின் எல்லாப் பகுதிகளிலும் பூரணதி லேகியம் விற்பனை ஏஜண்டுகளை நியமிக்கவும் வியாபாரிகளுக்கு சில்லறையாகவும் மொத்தமாகவும் 10—15 சதம் பாக்கெட்டுகளும் சேர் டின்களும் கிடைக்கும்படி ஏற்பாடு செய்துவருகிறோம்.

உபயோகிக்கும் நண்பர்கள் அசல் பூரணதி லேகியம் தரும்படி வியாபாரிகளிடம் வற்புறுத்திக் கேட்கும்படி வேண்டுகிறோம்.

சாய்பு கம்பெனி,
கண்டி ரோட், கம்பளை.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கழகச் செய்திகள்

ஐக்கிய தொழிலாளர் சங்கம்

காரைதீவு ஐக்கிய தொழிலாளர் சங்கக் கூட்டம் கடந்த 13-12-53ல் திரு சி. மாணிக்கம் தலைமையில் நடந்தது. கூட்டத்தில் இன்றைய இலங்கையின் தொழில் வளம் தமிழர்களின் அரசியல் வாழ்வு என்னும் இரு விஷயங்களும் சொற்பொழிவு மூலம் குழுமியிருந்த நூற்றுக்கணக்கான மக்களுக்கு எடுத்துச் சொல்லப் பட்டது.

கூட்டத்தில் திருவாளர்கள்: கே.கே.ஆறுமுகம், க இராமையாபிள்ளை, க.கயிலாயபிள்ளை, வே சின்னத்தம்பி முதலியோர் பேசினார்கள்.

—

முஸ்லிம் முன்னேற்ற சங்கம்

முஸ்லிம் முன்னேற்ற சங்கத்தின் இரண்டாம் வருட மகாசபை ஜனப் எம். எஸ். ஏ மஜீத் தலைமையின்கீழ் கடந்த 27-12-53ல் மாளிகாவத்தையில் கிரு அத்துடன் ஆரம்பிக்கப்பட்டது.

தலைவரின் முன்னுரைக்குப்பின் காரியதரிசியால் வருடார்த்த அறிக்கையும், தனாதிகாரியால் வரவு செலவும் சமர்ப்பிக்கப்பட்டது. அதன்பின் நடப்பு வருட உத்தியோகஸ்தர்களாக கீழ்காணுபவர்கள் ஏகமனதாக தேர்ந்தெடுக்கப் பட்டனர்.

தலைவர்: ஜனப் எம். எஸ் ஏ. மஜீத், உபதலைவர்கள்: ஜனப்கள் எம் எச். முஹம்மத் எம். எம். ஸி. ஸி. எஸ். ஏ. ஹமீத், கூட்டுக் காரியதரிசிகள்: ஜனப்கள் இஸட். ஏ. எம். ஹுஸைன், எஸ் டி. எம். மொஹிதீன், தனாதிகாரி: ஜனப் ஐ. ஷரீபுதீன், உப-தனாதிகாரி: ஜனப் எம். வை. எம். ஸியாத், கணக்குப் பரிசோதகர்; ஜனப் எம். எச். எம். நிஸார். ஒன்பது பேரைக்கொண்ட நிர்வாக குழுவும் தேர்ந்தெடுக்கப்பட்டன.

பலர் சொற்பொழிவு ஆற்றிய பின் சபை பார்த்திஹா சலவாத்துடன் இனிது கலைந்தது.

—

தலாத்தோயா ஆசிரியருக்கு பிரிவுபசாரம்

தலாத்தோயா அரசினர் மத்திய பாடசாலையில் ஆசிரியராகக் கடமையாற்றி வேறு பாடசாலைக்கு மாற்றலாகச் செல்லும் திரு என். நடராசா ஆசிரியருக்கு மேற்படி பாடசாலை ஆசிரியர்களால் ஒரு உபசரணை நடாத்தப்பெற்றது. அத்தருணம் அன்னாரது சேவையைப் புகழ்ந்து பாடசாலைத் தலைவர் திரு. வீரசிங்க திரு வி. எஸ். குருசாமி, திரு டி. பி சென்னக்கோன், திரு குணவர்த்தன ஆகியோர் பேசினர்.

—

ஆதித் தமிழர் அபிவிருத்திச் சங்கம்

இராமநாதபுரம் மாவட்டம் கோட்டைவயல் ஆதித் தமிழர் அபிவிருத்தி சங்கத்தின் 6-வது ஆண்டுவிழா சமீபத்தில் வேம்பை தோழர் அ. பெரிசுந்தரம் தலைமையில் நடைபெற்றது.

ஆதித் தமிழர்கள் கல்வி அறிவு பெறவேண்டியதின் அவசியத்தை திருவாளர்கள்: கே. பாலையா, சோ. முனியப்பா மற்றும் பலரும் பேசியபின் நடப்பு வருடத்திற்கு தோழர்கள்: பாலையா ஆலோசகராகவும், என். ஏ. சிவன் தலைவராகவும், எஸ். முனியப்பா, ஏ. கே. ராமசாமி கூட்டுக் காரியதரிசிகளாகவும், கே. சண்முகம் பொருளாளராகவும் தேர்ந்தெடுக்கப் பட்டனர். பல தீர்மானங்கள் நிறைவேறியபின் விழா இனிது முடிவுற்றது.

—

பதுளை நகர தி. மு. க. திறப்புவிழா

இலங்கை தி. மு. க. பதுளை நகரக் கிளை திறப்புவிழா கடந்த 20-12-53ல் பதுளை நகரசபை மண்டபத்தில் பதுளை மாவட்டச் செயலாளர் தோழர் அ. தங்கராசன் தலைமையில் நடைபெற்றது.

சென்னை லயோலாக் கல்லூரி மாணவர் தோழர் இராமநாதன், திரு டி.எம். பீர்முகம்மது, மூ. வே. பெ.சாமி, மாணிக்கம், மதிவாணன் ஆகியோர் பேசினர்.

தோழர் இராமநாதன் பேசுகையில் தி. மு. கழகம் இந்நாட்டில் வதியும் திராவிட மக்களின் உரிமையைப் பெற போராடவேண்டுமெனக் கூறினர்.

—

ஆசிரியரின் சேவைக்குப் பாராட்டு

ஆசிரியர் ஜனப் கே.எம். ஹலால்தீனுக்கு கொடருமுல்லை வை.எம். எம்.ஏ யினரும், ஊரவர்களாலும் சென்ற 25-12-53 மாலை கப்பல் பீடித் தொழிற்சாலையில் வைத்து ஓர் பிரியாவிடை விருந்துபசாரமளித்தனர்.

விழாவில் ஆசிரியரின் தன்னலமற்ற சேவையைப் பாராட்டிப் பலர் விரிவாகப் பேசினர். ஆசிரியரின் சேவைக்குப் பணமுடிப் பொன்று வழங்கப்பட்டது.

—

பங்குடுதீவு ரோமன் கத்தோலிக்கர் கூட்டம்

பங்குடுதீவு ரோமன் கத்தோலிக்க மக்களின் பொதுக்கூட்டமொன்று கடந்த 25-12-53ல் கூடி சமூக முன்னேற்றம், மாணவர் அறிவு வளர்ச்சி போன்ற விஷயங்கள்பற்றி பேசப்பட்டன. கூட்டத்திற்கு வண. ஞானத்தந்தையார் யோன் மேரி குசரோன் தலைமை வகித்தார்.

பின்னர் ஆசிரியர் வி. லீனஸ் பேசுகையில் கத்தோலிக்க சமூகத்தை முன்னேற்றத்திற்கு கொண்டுவர சமூக உணர்ச்சி கொண்ட இளைஞர்கள் அஞ்சாது பணியாற்ற வேண்டுமென்றும், பிரதானமாக ஓர் சனசமூக நிலையம் நிறுவப்படவேண்டும் என்றும் கூறினர். சமூகத் தொண்டர்களான திரு வி. தியோனிஸ், திரு செ. லோரன்ஸ் திரு ஆர். ஏபிரகாம், திரு சி. சவரிமுத்து, திரு பி. சவரிமுத்து முதலியோரும் பேசினர்கள்.

—

தி. ஜி. ஆ. ம. சங்கம்

திருநெல்வேலி ஜில்லா ஆதி திராவிட மகாஜன சங்கம் இலங்கை கிளையின் நிருவாக கமிட்டிக் கூட்டம் சமீபத்தில் கொள்ளுப்பிட்டியில் சங்கத் தலைவர் திரு எஸ். டி. சுப்பையா தலைமையில் நடைபெற்றது. அதுசமயம் கீழ்கண்ட தீர்மானங்கள் நிறைவேற்றப்பட்டன:

(அ) மேற்படி சங்கத்தின் சார்பாக 1954ம் ஆண்டு ஏப்ரல் மீ ஜில்லா மகாநாட்டை நெல்லையில் நடத்துவதென்றும் பல முக்கியஸ்தர்களை அழைப்பதென்றும் முடிவு செய்யப்பட்டது.

(ஆ) மகாநாட்டில் கலைவாணர் என். எஸ். கிருஷ்ணன் இலங்கை வந்திருந்தபோது சங்க வளர்ச்சி நிதிக்காக உதவி நாடகம் நடத்தித் தருவதாக வாக்களித்துள்ள படியால் அன்னாரின் ஒப்புதல் அறிந்தபின் மகாநாட்டுத் தேதியை நிர்ணயிப்பதென்று முடிவு செய்யப்பட்டது.

அவிசாவெல்லை தி. மு கழகம்

அவிசாவெல்லை இலங்கை திராவிட முன்னேற்றக் கழகக் கூட்டம் கடந்த 20-12-53ல் கழக பணிமனையில் தோழர் ஏ. ஜெயராஜ் தலைமையில் நடைபெற்றது.

கூட்டத்தில் தூத்துக்குடி சதி வழக்கு நிதிக்காக ரூ. 51-00 வசூலாகியது. நன்கொடை கொடுத்த அனைவருக்கும் செயலாளர் என். ஆர். பாண்டியன் நன்றி கூறினார். பின்னர் கழக வரவு செலவு கணக்குகள் சமர்ப்பிக்கப்பட்டு ஒப்புக்கொள்ளப்பட்டன.

—

பண்டிதர் முத்துக்குமாரசுவாமிக்கு பிரியாவிடை

கல்வியங்காடு ஞான பாஸ்கரோதய சங்கத்தின் அங்கத்தவரான பண்டிதர் முத்துக்குமாரசுவாமிக்கு தலைவர் திரு ரி. ரதனையத்தின் தலைமையில் இம்மாதம் 2-ம் திகதி ஓர் பிரியாவிடை நடைபெற்றது.

சங்கத் தனாதிகாரியான திரு கனகசபையினால், அவர் செய்த தொண்டையும், நிதிநெருக்கடியை மீட்க வழிகாட்டியதையிட்டும் பேசினர். சற்றில் எஸ். நடேசபிள்ளையும், ப. சண்முகநாதனும் பேசினர்.

(2-ம் பக்கத் தொடர்ச்சி)

றுள்ளன. ஆனால் எட்டணை விலைக்கு ஏற்ற சரக்கில்லை. அடுத்த இதழ்கள் அபிவிருத்தியடையும் என்று நம்புகிறோம்.

***

தேச ஊழியன்: வெள்ளி தோறும் வெளிவரும் வாரப் பத்திரிகை. ஆசிரியர்: ஆ. சு. முத்துக்கிருஷ்ணன். கிடைக்குமிடம்: நம் 2, சின்னக்கடை வீதி, திருச்சிராப்பள்ளி. தனிப் பிரதி அணா 2.

கடந்த 23 வருடங்களாக வெளிவருவதாகவும், ஆனால் 1925ல் ஸ்தாபிதம்செய்யப்பட்டதாகவும் குறிப்புகள் காணப் படும் இப்பத்திரிகை இப்போது தான் நமது மதிப்புரைக்கு வந்திருக்கிறது. மலர் 23 இதழ் 9, 10 நமக்கு கிடைத்துள்ளன. கதை, கவிதை, திரட்டு செய்திகள், உதிர்ந்த மலர்கள் இப்படியான அம்சங்கள் இடம் பெற்றுள்ளன.

***

கதிரொளி: திங்கள் வெளியீடு, ஆசிரியர்: என். தருமலிங்கம். கிடைக்குமிடம்; கல்முனை ஆண்டு சந்தா ரூ 3-50.

மட்டக்களப்புப் பகுதி சனசமூக நிலைய சமாசத்தின் மாதாந்த வெளியீடான கதிரொளி முதலாம் இரண்டாம் இதழ்கள் வரப்பெற்றோம். சனசமூக நிலையங்களுக்கான விஷயங்கள் இடம்பெற்றுள்ளன. சமய விஷயங்களுக்கும் சம்பந்தப்பட்டவரின் சுய விளம்பரங்களுக்கும் அதிக இடம் அளிக்கப்பட்டிருக்கிறது. அச்சிலும் அமைப்பிலும் அபிவிருத்தி அதிகம் வேண்டும். எனினும் போற்றுதற்குரிய நல்ல முயற்சி.

***

பொற்காலப் பூமிசாத்திரம் (நான்காம் வகுப்பு) ஆசிரியர்: கு. வி. செல்வத்துரை, கிடைக்குமிடம்: கலைவாணி புத்தகசாலை, கண்டி. விலை ரூ 1—15.

மூன்றும் வகுப்புவரை வெளிவந்துள்ள பொற்கால பூமிசாத்திரம் என்ற தொடரில் இந்நூல் நான்காம் வகுப்புக் குரியதாக வெளிவருகிறது. இலங்கைப் பாடசாலைகளின் புதிய பாடத் திட்டத்திற்கு அமைய எழுதப்பட்டு, உயர் தரமான கிளேஸ் காகிதத்தில் தெளிவாகவும் அழகாகவும், ஆங்காங்கே அவசியமான விளக்கப் படங்களுடனும் அச்சிடப் பெற்றுள்ளது. இதுகால வரை வெளிவந்துள்ள பற்பல பூமிசாத்திரப் பாடப் புத்தகங்களையும்விட அமைப்பிலும் பதிப்பிலும் சிறந்து விளங்குகின்றது. பாடங்களின் தொகுப்பும், அவை எழுதப்பட்டுள்ள விளக்கமான எளிய நடையும், எடுத்துக் கொண்ட விஷயத்தை சுவைபடச் சொல்லும் பாணியும் மாணவருக்கு விருப்பூட்டுவனவாகும். இப்புத்தகத்தைப் பாடப் புத்தகமாகக் கொள்ளும் பாடசாலையில் பயிலும் மாணவர்கள் நேர சூசியில் உள்ள பூமிசாத்திரப்பாட நேரத்தை கற்காக் காலமாக்காமல் பொற்காலமாக்குவார்கள் என்பது திண்ணம்.

***

யாழ்ப்பாண வைபவமாலை: பதிப்பாசிரியர்: முதலியார் குல. சபாநாதன், கிடைக்குமிடம்: சரஸ்வதி புத்தகசாலை, 175, செட்டியார்தெரு, கொழும்பு. விலை ரூ. 1-50

தமிழ் மக்கள் சரித்திரம் எழுதி வாழாத ஒரு பெருங்குறையினை அவர்களுடைய பண்டைக் காலச் சிறப்புகளையும் சாதனைகளையும் நாம் நுணுக்கமாக அறிய முடியவில்லை. அவர்கள் விட்டுச் சென்ற கலைக் கோவில்களான கல்லோவியங்களையும் கவிக் கோவில்களான சொல்லோவியங்களையும், சிலாசாஸனங்களையும், அகழ் பொருட்களையும் கொண்டே பழந் தமிழர் சரித்திரங்களை நாம் ஓரளவு அனுமானிக்கின்றோம்.

இலங்கையில் சிங்கள இனத்தின் தோற்றத்தையும் வளர்ச்சியையும் ஆட்சியையும் பற்றி

நமது மதிப்புரை

மகாவம்சம், சுலுவம்சம் இராஜாவழிமுதலியவரலாற்றுநூல்கள்சரியாகவோ,முரணாகவோ, மிகைப்படுத்தியோ கூறுகின்றன; ஓரளவு தொடர்பாகக் கூறுகின்றன. ஆனால் இலங்கையில் தமிழ் இனத்தின் தோற்றத்தையும், குடியேற்றத்தையும், வளர்ச்சியையும், ஆட்சியையும் தொடர்பாகக் கூறும் வரலாற்று நூல்கள் குறிப்பிடக் கூடிய அளவு இல்லை. எனினும் இலங்கையில் தமிழ் இனம் சரித்திரம் காணாக் காலந் தொட்டே வாழ்ந்து வருகிறதென்பது வரலாற்று வல்லார் பிற ஆதரங் கொண்டு நிலை நாட்டிய தொரு முடிபு ஆகும். இத்தகைய தமிழ் இனம் ஓரோர் காலத்தில் அகில இலங்கையையும் ஆட்சி புரிந்திருக்கிறதென்றும், மற்றும் சில காலம் இலங்கையின் வடபகுதியை தமிழ் அரசர்கள் சந்ததி சந்ததியாக ஆண்டுவந்த துண்டென்றும் அறியக் கிடக்கின்றது. இந்த உண்மைகளுக்கு சான்று பகரும் நூல்கள் கைலாயமாலை, வையா பாடல், யாழ்ப்பாண வைபவ மாலை என்பன.

இவற்றுள் யாழ்ப்பாண வைபவமாலை யென்பது சுமார் இரண்டு நூற்றாண்டுகளுக்கு முன்னர் மாதகல்'மயில் வாகனப் புலவரால் தெளிவான வசன நடையில் எழுதப்பட்ட தொரு நூலாகும். அக்காலத்தில் வழங்கப்பட்டு வந்த கர்ண பரம்பரைக் கதைகளையும் இதர வரலாறுகளையும் தொகுத்து எழுதப்பட்ட இந்நூல் ஒரு தெளிந்த வரலாற்று நூல் அல்லாவிடினும் வரலாற்று ஆராய்வில் ஈடுபாடுள்ளோருக்கு ஆராய்வுக் கேற்ற வழிகால் விவரங்கள் பலவற்றைத் தரும் ஒரு சிறந்த நூலாக அமைந்துள்ளது.

இங்ஙனம் பயன் தரும் ஒரு பழைய நூலை பதிப்பாசிரியரான முதலியார் குல. சபாநாதன் அவர்கள் மிகுந்த பிரயாசையின் பேரில் பற்பல பாடபேதங்களையும் பரிசோதித்து, ஆராய்ந்து, ஒப்பு நோக்கி, நடுநின்று அடிக் குறிப்பெழுதி ஏற்கனவே வெளியிட்டிருக்கின்றார். இந்நூலின் இரண்டாவது பதிப்பு இப்போது அழகான கிளேஸ் காகிதத்தில் அச்சிட்டு வெளிவந்திருக்கிறது.

இலங்கை மணித்திரு நாட்டிலே தமிழ் இனத்திற்கும் தமிழ் மொழிக்கும் உரிமையுண்டா, இல்லையா என்ற நிலைமை யேற்பட்டுவரும் இந்த நாளிலே இந்நூலை வெளியிட்டதன் மூலம் முதலியார் குல. சபாநாதன் அவர்கள் இலங்கைவாழ் தமிழ் பேசும் மக்களுக்கு ஒரு அரும் பணியை ஆற்றியிருக்கின்றார். இதுபோலவே முதலியார் அவர்கள் அவ்வப்போது பத்திரிகையில்எழுதிவரும் பழந்தமிழ் அறிஞர், பெரியார் ஆகியோரின் வாழ்க்கைகளையும் பழந்தமிழ் ஆலயங்களின் வரலாறுகளையும் புத்தக உருவில் வெளிக் கொணர்வாரென எதிர்ப்பார்க்கிறோம்.

எஸ். டி. எஸ்.

***

விவேகானந்தா திருக்குறள் கலண்டர்

1954—ம் ஆண்டுக்குரிய ஆங்கிலம், தமிழ், முஸ்லிம் ஆகிய மூன்று திகதிகளையும் கொண்ட முதலாம் நம்பர் பெரிய தினக் கலண்டர் வரப் பெற்றோம்.

மெக்கானிக்கல் கிளேஸ் காகிதத்தில் அழகாகவும் தெளிவாகவும் அச்சிடப்பெற்றிருக்கிறது. இந்து, முஸ்லிம், கிறிஸ்தவ, வைஷ்ணவப் பெருநாட்களும், கோவில், தேவாலயம், மசூதி ஆகியவற்றின் திருநாட்களுப், அரசாங்க வங்கி விடுமுறைகளும் தரப்பட்டிருக்கின்றன. முக்கியமான குறிப்புக்கள் ஆங்கிலம், தமிழ், சிங்களம் எனும் முப்பாஷைகளிலும் அச்சிடப்பட்டிருக்கின்றன. ஒரு இதழில் ஒரு திருக்குறளும் மறு இதழில் அதன் கருத்துரையும் காணப்படுகிறது. அத்தோடு ஆங்காங்கே இடவசதியுள்ள இடங்களிலெல்லாம் பழமொழிகளும், பெரியார்களின் மணிமொழிகளும் பொறிக்கப்பட்டுள்ளன. புதுவருடம், பொங்கல், சுதந்திரதினம், சித்திரை, விசாகம், கிறிஸ்தோதயம் முதலிய சுபதினங்கள் உருவகப் படங்கள் மூலம் சித்திரிக்கப் பட்டிருக்கின்றன. அழகான அட்டைப்படத்துடன் கூடிய இக்கலண்டர் இதர கலண்டர்களைவிட பல வகைகளிலும் சிறப்புடையதாக விளங்குகிறது.

***

விவேகானந்தா தினக் குறிப்பு

1954க்குரிய தினக் குறிப்பு வரப்பெற்றோம். கையடக்கமான இந்த டயரியில் சமயத் திருநாட்கள், தபால் தந்தி விதிதங்கள் முதலியன அடங்கியுள்ளன. நாளுக்கொரு பக்கமிட்டு நல்ல கடதாசியில் அச்சிடப்பட்டிருக்கிறது. பக்கங்கள் குற்றிட்ட பித்தளை றூளினல் கோடிடப் படாமல் றூலிங் மெஷினில் கோடிடப்பட்டிருந்தால் அழகாய் இருக்கும். அடுத்த வருடம் இத்திருத்தத்தைச் செய்வார்களாக.

மேற்படி கலண்டரும், நாட் குறிப்பும் கிடைக்குமிடம்: விவேகானந்தா அச்சகம், யாழ்ப்பாணம்.



லட்சக்கணக்கானோர் புட்டிகளில் அடைக்கப்பட்ட பாலைக் குடிக்கிறார்கள் பால் பரிசுத்தமானதா என்பதை மற்ற யந்திரங்கள் பரிசீலித்த பின், புட்டிகள் இருமியில்லாதவையா என்பதை ஒருவித யந்திரம் பரிசீலிக்கிறது. இவ்வொன்றைச் சேர்ந்த லிவர்பூலிலுள்ள ஒரு பால் பண்ணையில் புட்டிகளை கழுவும் யந்திரத்தைப் படத்தில் பார்க்க.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மகத்தான ஐந்தாவது வாரம்!

காமினி குயின்ஸ்லன்

(மருதானை) (நுகேகொட)

பேர்ள் சாயா நடராஜா சினிமாஒலிம்பஸ்

(சிலாபம்) (கேகாலை) (நீர்கொழும்பு) (காலி)

ஸ்ரீமஹால் ஜெமினி சென்ட்ரல் ஜூபிட்டர்

(குளியாப்பிட்டி) (மாத்தறை) (மாத்தளை) (குருணாகலை)

பிரேம்ஜயந், லீலா, கிளாரிஸ்,

பேபி சரோஜா நடித்த

"விசித்திர மருமகள்"

கிங்ஸ்லி தியேட்டர்

(கொழும்பு)

கருணாநிதியின் கனல்கக்கும் வசனத்தை எத்தனை முறை கேட்டாலும் தெவிட்டாது

சிவாஜி கணேசன், ஸ்ரீரஞ்சனி, பண்டரிபாய், சகஸ்ரநாமம்

முதலியோர் திறம்பட நடித்த

'பராசக்தி'

30 லட்ச ரூபாய் விருந்து!

விஜயா புரடக்ஷாரின் 3 வருட உழைப்பிலே 30 லட்ச ரூபாய் செலவிலே உருவாகிய அற்புதமான தமிழ் திரை ஓவியம்

சந்திரஹாரம்

சிறந்த படங்களை உங்களுக்கு அளித்துக் கொண்டிருக்கும் சினிமாஸ் ஸ்தாபனத்தார் இந்த அற்புத ஓவியத்தை பொங்கல் விருந்தாக அளிக்கின்றனர்!

பராசக்தி புகழ் ஸ்ரீ ரஞ்சனி

கல்யாணம்பண்ணிப்பார் புகழ்

என். டி. ராமராவ்

தேவகாஸ்பகம் சாவித்திரி

இவர்களை எல்லாம் சந்திக்க வேண்டுமானால்

இதோ

விஜயாவின்

சந்திரஹாரம்

மைலன் (கொழும்பு)

பகவான், பாபுராவ்

நடித்த

'பக்ஷிஷ்'

(ஹிந்திப் படம்)

இப்பத்திரிகை கொழும்பு தட்டாதெரு, 196ம் இல்லத்தில் வசிக்கும் எஸ். டி. சிவநாயகம் அவர்களால் விலோன் நியூஸ் பேப்பர்ஸ் லிமிட்டெட் ஸ்தாபனத்தாரின் சார்பில் தட்டாதெரு, சதாசிவம் [illegible] கதிரகரம் செய்யப்பட்டது

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org